REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்

2023 டிசம்பர் 15 வெள்ளிக்கிழமை

வரு. 91 இல. 297 | Friday 15, December, 2023 | 20பக்கங்கள் | 50/-


## SLPP தேசிய மாநாடு இன்று

**சுகததாச உள்ளக அரங்கில் ஏற்பாடு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பொதுஜன பெரமுனவின் இரண்டாவது தேசிய மாநாடு கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இன்று

06

**2019 ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்ட**

# 107 கிலோ போதைப்பொருள் புத்தளத்தில் நேற்று அழிப்பு

## புத்தளம் மேலதிக மாஜிஸ்திரேட் மிஹில் ஷிரந்த சத்துருசிங்க முன்னிலையில் சீமெந்து ஆலை உலைக்குள் எரிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில், 2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சுற்றிவளைப்புக்களில் கைப்பற்றப்பட்ட 321 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய 107 கிலோ ஹெரோயின் போதைப் பொருட்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய நேற்று அழிக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார். மேற்படி ஹெரோயின் போதைப் பொருள் நேற்றைய தினம் புத்தளம் பாலாவியிலுள்ள இன்சீ சீமெந்து தொழிற்சாலை உலைக்குள் போடப்பட்டு எரிக்கப்பட்டது. புத்தளம் மேலதிக மஜிஸ்திரேட் நீதவான் மிஹில் ஷிரந்த சத்துருசிங்க முன்னிலையில் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2019ஆம் ஆண்டு பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ள மேற்படி 107 கிலோ ஹெரோயின் தொடர்பான வழக்கு நிறைவுற்றதையடுத்து அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் பொறுப்பிலிருந்த மேற்படி போதைப்பொருள் 2019ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

107 கிலோ ஹெரோயினுடன் சந்தேகத்துக்கிடமான போதைப் பொருள் 01 கிலோ மற்றும் 104 கிராமுடன் சந்தேக நபர்கள் 09 பேர் இதன்போது கைது செய்யப்பட்டனர். இவர்கள் தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்

06

## பாதுகாப்பு கல்லூரி பட்டமளிப்பு விழாவில் ஜனாதிபதி



கொழும்பு தாமரைத் தடாகம் கலையரங்கில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் ஆளணி கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம்.



**03** **2024 இல் ஏற்படவுள்ள கடும்வரட்சி: மூன்றிலொரு மக்களுக்கு பாதிப்பு**

உயர்மட்ட விஞ்ஞான அமர்வில் கருத்து

## 'வற்' வரி, நிதிச் சட்டமூலங்களுக்கு சபாநாயகர் நேற்று சான்றுரை

**2024 ஒதுக்கீட்டுச் சட்டமூலங்களை சபாநாயகர் சான்றுரைப்படுத்தினார்**



பாராளுமன்றத்தில் (13) நிறைவேற்றப்பட்ட 2024ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

பாராளுமன்றத்தில் கடந்த (11) நிறைவேற்றப்பட்ட சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் மற்றும் நிதிச் சட்டமூலம் என்பவற்றையும் சபாநாயகர் நேற்று (14) சான்றுரைப்படுத்தினார்.

இதற்கமைய, இந்தச் சட்டமூலங்கள் 2023ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்த) சட்டமாகவும், 2023ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிதிச் சட்டமூலமாகவும் 2023ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க நிதிஒதுக்கீட்டுச் சட்டமாகவும் நேற்று முதல் அமுலுக்கு வருகின்றன.



**03** **கொழும்பு கண் ஆஸ்பத்திரியில் வேலைநிறுத்தம் இடைநிறுத்தம்**

வழக்கம்போல் சிகிச்சைகள்

## பிரிட்டனின் இளவரசி Anne ஜனவரியில் இலங்கை வருகிறார்

பிரிட்டன் அரச குடும்பத்தில் மன்னர் சார்ள்ஸின் சகோதரி இளவரசி ஆன் (Princess Anne) ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இவர், ஜனவரி 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பாரென வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

06



## கைவிடப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் 2024 காலாண்டுக்குள் மீள ஆரம்பம்

**நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க**



வெளிநாட்டு உதவிகளுடன் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்ட 200 க்கும் மேற்பட்ட அபிவிருத்தி திட்டங்கள், அடுத்த வருடத்தின் முதற் காலாண்டில் மீள ஆரம்பிக்கப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அரசியல் ஸ்திர நிலையை உறுதிப்படுத்தும் வகையில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதென தெரிவிக்கும் இராஜாங்க அமைச்சர், அரசாங்கத்தின் வரவு செலவு முகாமைத்துவத்துக்கான பின்னணி உருவாகியுள்ளதெனவும் தெரிவித்தார்.

06

## IMF கடனுதவி; பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும்



சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதி இலங்கையில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துமென இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.


நீடிக்கப்பட்ட நிதி வசதியின் (Extended Fund Facility) கீழ், இலங்கைக்கான இரண்டாவது தவணை கடன் வசதியை சர்வதேச நாணய நிதியம் (International Monetary Fund) பெற்றுக் கொடுத்துள்ளமை திருப்தியளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தமது 'X' தளத்திலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இந்த நடவடிக்கை இலங்கைக்கு ஒரு முக்கியமான படியாகும். இது, இலங்கையின் முன்னேற்றத்துக்கு மட்டுமல்ல நிலையான சீர்திருத்தங்கள் மற்றும் மேம்பட்ட நிர்வாகத்துக்கான வழிகாட்டலாகவும் அமைந்துள்ளது.

06

## ஆறு தமிழக மீனவர்கள் யாழ். காரைநகரில் கைது

**யாழ். விசேட நிருபர்**



நாட்டின் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடிதுக்கொண்டிருந்த 06 தமிழக மீனவர்களை 13ஆம் திகதி கடற்படையினர் கைது செய்துள்ளனர். இவர்களது படகும் படையினரால் கைப்பற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் காரைநகர் கடற்பரப்பில் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த படையினரே

06

## வடிவேல் சுரேஸ் MPக்கு ஆளுநர் செந்தில் வாழ்த்து



ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றஉறுப்பினர் வடிவேல் சுரேஸுக்கு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான், நேரில் சென்று வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மலையக மக்கள் வாழ்வதற்கு தகுதியற்றவர்கள் என குடியுரிமை பறிக்கப்பட்டு நாடற்ற சமூகமாக மலையக மக்கள் புறக்கணிக்கப்பட்ட போதிலும், இன்று நாட்டின் ஜனாதிபதியின் ஆலோசகராக

06

## வற் வரி அதிகரிப்பு: லிற்றோ Gas விலைகள் அதிகரிக்கலாம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனவரி மாதத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் அதிகரிக்கப்படலாம் என லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் வற் வரி 18 வீதமாக அதிகரிக்கப்படவுள்ளது. இதனால், லிற்றோ எரிவாயு விலைகளிலும் அதிகரிப்பு ஏற்படுமென நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

06

**மத வன்முறைகளை ஏற்படுத்தும்**

## சமூக வலைத்தளங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

மத ரீதியான வன்முறைகளை ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் பதிவுகளை வெளியிடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இக்குற்றங்களை விசாரிப்பதற்காக பிரத்தியேகமான குழுவை உருவாக்குமாறு பொலிஸ் கணினி குற்றப்பிரிவுக்கு பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் பணிப்புரை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, வன்முறைகளை ஏற்படுத்தும் வகையில் பதிவுகளை பதிவிடுவோருக்கு எதிராக முறைப்பாடுகள் வழங்குவதற்கு விசேட தொலைபேசி இலக்கங்களும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

0112300637, என்ற தொலைப்பேசி இலக்கத்தினூடாகவும் அல்லது 0112381045 என்ற

06

## 20,000 கிலோ பெரிய வெங்காயம் பழுதடைந்த நிலையில் மீட்பு




**லோரன்ஸ் செல்வநாயகம்**

விலை அதிகரிப்பை கருத்திற் கொண்டு பதுக்கி வைக்கப்பட்ட 20,000 கிலோ பெரிய வெங்காயம் பழுதடைந்த நிலையில் மீட்கப்பட்டது.

06

**இலங்கை பன்முகத் தன்மை கொண்டநாடு**

## 'பௌத்த சிங்கள நாடு' 'தனித் தமிழ் நாடு' என்ற சிந்தனை மாற வேண்டும்

**தேரர்களிடமும், உலகதமிழர் பேரவையிடமும் மனோ MP தெரிவிப்பு**



இலங்கை எம் தாய்நாடு, ஒரு "சிங்கள பௌத்த நாடு" என்ற சிந்தனை மறைய வேண்டும். இந்நாட்டின் இன்னொரு பிரதேசத்தில் இது தமிழருக்கு மட்டுமேயான "தனித் தமிழ்நாடு" என்ற சிந்தனையும் மறைய வேண்டும். சகலருக்கும் சொந்தமான, இலங்கை ஒரு

06

## ருமேனியாவுக்கு அனுப்புவதாக 05 இலட்சம் ரூபா பண மோசடி

**SLBFE இல் பணியாற்றிய அதிகாரி கைது**

ருமேனியாவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பெண்ணொருவரிடமிருந்து பணம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பணியகத்தின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவினர் இவரைக் கைதுசெய்தனர். இந்த அதிகாரி மொறட்டுவை

06

## லெபனான் பிரஜையின் 14,000 அமெரிக்க டொலர் விமானத்தில் திருட்டு

**கட்டுநாயக்க வந்தபோது பரிதாபம்**



இலங்கை நோக்கி விமானத்தில் வந்த லெபனான் பிரஜை ஒருவரின் ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான அமெரிக்க டொலர்கள் திருடப்பட்டுள்ளன. விமானத்தின் "பிஸினஸ்" ஆசனத்தில் வந்த இவரிடமிருந்தே இப்பணம் திருடப்பட்டது. இதைத் திருடியதாக சந்தேகிக்கப்படும் சீனப்பிரஜை ஒருவர் தலைமறைவாகி உள்ளதாக,

06

**91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்**

# நகர்வலம்



## 20,000 சம்பள உயர்வு கோரி போராடுபவர்கள்

# நாட்டின் எதிர்கால சந்ததியின் வாழ்க்கையையே நாசமாக்குகிறார்கள்

## சபையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

லோரன்ஸ் செல்வநாயகம்



பத்தாயிரம், இருபதாயிரம் ரூபா என சம்பள அதிகரிப்பை கோரி வேலைநிறுத்தம் செய்பவர்கள் நாட்டின் எதிர்கால சந்ததியின் வாழ்க்கையையே நாசமாக்குகிறார்கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

பத்தாயிரம் ரூபாவுக்காக கருவில் இருக்கும் குழந்தைகளின் எதிர்காலத்தை அவர்கள் கருக்கலைப்பு செய்கின்றனர் என சபையில் குறிப்பிட்ட அவர், நாட்டின் சில தந்தையர்களும் தாய்மார்களும் தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை தங்கள் நிகழ்காலத்திற்காக அழிப்பதற்காகவே வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்றும் ஜனாதிபதி கடுமையாக சாடினார்.

பாராளுமன்றத்தில் நேற்று சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணை நிதி ஒத்துழைப்புக்கான அங்கீகாரம் மற்றும் வரவு செலவு திட்டம் தொடர்பில் விசேட உரையொன்றை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இது ஒரு நீண்ட பயணம். ஓரிரண்டு நாட்களில் முடிக்கும் பயணம் அல்ல. 2048 வரை செல்ல வேண்டிய பயணம். ஆனால் நமக்கு இந்த வழியைத் தவிர வேறு வழியில்லை. நாம் வேறு வழியில் சென்றால், நமக்கு எதிர்காலம் இல்லை. உண்மையைச் சொல்வதானால், சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் நாம் செயல்படுத்தும் கொள்கைகள் 10 முதல் 20 ஆண்டுகளுக்கு முன்பு நாம் செய்திருக்க வேண்டியவை. ஆனால் சில அரசியல் குழுக்கள் தேர்தல் வெற்றிகளை இலக்காகக் கொண்டு இவற்றைப் புறக்கணித்தன.

அதிகாரத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில் அரசியல்வாதிகள் தோற்றுவிக்கும் மாயைகள் தொடர்பில் முழு நாடும் கவனமாக செயற்பட வேண்டும். அவ்வாறான மாயைகளாக கூறப்படும் விடயங்களினால் நாம் மீண்டும் படுகுழியில் விழுவது மட்டுமன்றி வங்குரோத்து நிலைக்கும் செல்வோம்.

முழுமையான பொருளாதார சுதந்திரத்திற்காக நாம் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. அதனால் நாம் இதுவரையில் பயணித்த சரியான பாதையை மூழ்கடிக்க முயற்சிக்க வேண்டாமென கேட்டுக்கொள்கிறேன்.

சிலர் கதைகளை கூறி விமர்சனங்களை மாத்திரமே முன்வைக்கும் வேளையில் நான் செயற்பாட்டு ரீதியான பலன்களை காண்பித்துள்ளேன். உலகத்தினதும், இலங்கையிலும் பெரும்பான்மையான ஆதரவை பெற்று வெற்றிப் பாதைக்குள் கொண்டுச் சென்றுள்ளேன்.எமக்கு நீண்ட தூரம் பயணம் உள்ளது என்பது உண்மை . ஆனால் கயிற்றுப் பாலத்தை கடந்த பின்னர் சிறந்த பாதை உருவாகும். சரியான வழியில் செல்லத் தவறினால் திக்கற்று நிற்போம். இந்த பயணத்தில் இரு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். இதே வழியில் பயணிப்பது முதலாவது முறை. கடந்த கால தவறுகளை மீண்டும் செய்யாதிருத்தல் அடுத்த படிமுறை. அதற்கு தயார் எனில் எதிர்காலம் சிறக்கும். அதற்கு எவரும் தயாரில்லை எனில் நாட்டின் எதிர்காலம் ஆபத்தானதாக அமையும். வற் வரி உள்ளிட்ட வரிகளால் சமூகத்திற்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளமை தெரிகிறது. விருப்பத்துடன் நாம் வரி விதிக்கவில்லை. மாற்று வழிகள் எவையும் இல்லாமையே வரி விதிப்புக்கு காரணம். அது கடினமாக தீர்மானம். நாட்டின் எதிர்காலத்திற்காக அதனை மேற்கொள்ள வேண்டியிருந்தது. பொருளாதாரம் வலுவடையும் போது மக்களுக்கு தேவையான சலுகைகளை வழங்கவும் எம்மால் முடியும். வரிச் சட்டத்தில் காணப்படும் இடைவெளிகள் காரணமாக பல வருடகாலமாக வரிச் செலுத்தாமல் இருப்பதற்கான வழி ஏற்பட்டுள்ளது. அந்த நிலையை மாற்ற வேண்டும். வரி செலுத்துவோரை நாம் பாதுகாப்போம். வரி செலுத்தாதவர்களை சட்டத்தின் முன்பாக நிறுத்துவோம்.

## தம்மரன்சி தேரருக்கு விருது



கொழும்பு சாஹிரா கல்லூரியில், கல்லூரி அதிபர் ரிஸ்வி மரிக்கார், ஆளுநர் சபையின் தலைவர் பவ்சுல் ஹமீத் ஆகியோர் தலைமையில் "தருவன்ட ரடக் ரட்டட ஹெடக் " எனும் தொனிப்பொருளில் அண்மையில் இடம்பெற்ற சாள்ஸ் அன்ரனியின் கருத்தரங்கில் பௌத்தமதம் சார்பாக கலந்துகொண்ட வணக்கத்துக்குரிய ஹலஹம தம்மரன்சி தேரருக்கு கல்லூரி உப அதிபர் அஷ்ஷெய்க் மிஹ்லார் நினைவுச்சின்னம் வழங்குவதையும் அருகே அருட்தந்தை நிசான்குரே, அஸ்ஸெய்யத் ஹசன்மௌலானா ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இலக்கியக்களம்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் கல்விக்குழுச் செயலாளர் த. இராஜரட்னம் தலைமையில் இன்று 15ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ள இலக்கியக்களம் நிகழ்ச்சியில் " சமூகப் பண்பாட்டியலின் கருவூலமாகப் பாடசாலை" என்னும் தலைப்பில் நீர்கொழும்பு தோப்பு, ரோமன் தமிழ் மகா வித்தியால அதிபர் இராஜேஸ்வரன் செல்வகுமார் உரை நிகழ்த்தவுள்ளார்.

## காரைநகர் இந்துக் கல்லூரியின் வெள்ளிவிழா ஒன்றுகூடல்



யாழ். காரைநகர் இந்துக் கல்லூரியினுடைய கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் 25ஆவது வெள்ளிவிழாவுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு நாளை சனிக்கிழமை (16) மாலை 5.00 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்நாட்டின் சென்னையைச் சேர்ந்த சொல்லின் செல்வம் பி. மணிகண்டன் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' எனும் தலைப்பில் இந்நிகழ்வில் உரையாற்றவுள்ளதாக, நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந் நி க ழ் வில் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இ. இளங்கோவன், நிதி அமைச்சு அதிகாரி தி. விஸ்வரூபன், சைவமணி சண்முகரத்தினம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 16ஆம் திகதி ரூபவாஹினியில் முத்தழகு – கலாவதியின் பாடல்கள்



இலங்கை ரூபவாஹினி சேவையில் நாளை 16 ஆம் திகதி இரவு 9.30 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை ஒளிப்பரப்பாகும் "சந்துரு சுயமிய" எனும் நிகழ்ச்சியில், இலங்கையின் புகழ்பெற்ற தமிழ், சிங்கள பின்னணிப் பாடகர் கலாபூஷணம் முத்தழகு சூரியகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இந்நிகழ்ச்சி கடந்த 09ஆம் திகதி இலங்கை ரூபவாஹினி சேவையில் ஒளிப்பரப்பு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சி 16ஆம் திகதி மறு ஒளிப்பரப்பு செய்யப்படவுள்ளது.

இந் நி க ழ் ச் சி தனது 66 ஆண்டு கால இசைத்துறை வரலாற்றை ஞாபகப்படுத்துவதாக அமைந்துள்ளதென பின்னணிப் பாடகர் கலாபூஷணம் முத்தழகு சூரியகுமார் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இவருடன் இலங்கையின் புகழ்பெற்ற தமிழ், சிங்கள பின்னணிப் பாடகி கலாபூஷணம் திருமதி எஸ் கலாவதியும் இணைந்து பாடி சிறப்பித்துள்ளார்.

## பேருவளையில் பெண்களுக்கான இலவச மருத்துவ ஆலோசனை முகாம்

பேருவளை நகர சபை பிரதேசத்தில் முன்னாள் பேருவளை நகர சபை முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் ஹஸன் பாஸியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'பெண்களுக்கான இலவச வைத்திய முகாம்' நாளை 16 மற்றும் 17ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் பி.ப 3.00 மணிவரை கோல்டன் கேட் சர்வதேச பாடசாலை (மஸ்ஸல பேருவளை) வளாகத்தில் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

இந்த இலவச வைத்திய முகாமில் பெண்கள் தொடர்பான நோய் மற்றும் ஆலோசனைகள் இந்தியாவின் முன்னணி விசேட மருத்துவர்களான டொக்டர் நிவேதிதா அமில்தன் மற்றும் டொக்டர் ருகையால் பாத்திமா ஆகியோர்களினால் வழங்கப்படவுள்ளதோடு குழந்தையின்மை தொடர்பான விசேட வழிகாட்டல், ஆலோசனைகளும் இதன்போது வைத்தியர்களினால் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதில் பெண்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

## தென்றல் எப். எம்மில் கிறிஸ்மஸ் நிகழ்ச்சி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தென்றல் எப். எம். வழங்கும் கிறிஸ்மஸ் சிறப்பு இசை நிகழ்ச்சி இம்மாதம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஆனந்த சமரக்கோன்கலையகத்தில்நடைபெறவுள்ளது. ரட்ணம் ரட்ணதுரை இசைக்குழுவினரின் இசையில் புதிய , இடைக்கால , பழைய பாடல்கள் இடம்பெறவுள்ளன. பிரபல பாடகர் , பாடகிகளின் பாடல்கள் இலங்கை வானொலி தென்றல் எப். எம். அலை வரிசையூடாக நேரலையாக ஒலிபரப்பாகவுள்ளது. அனுமதி இலவசம்.

## லேக் ஹவுஸ் நிறுவனத்தில் இடம்பெற்ற

# முஸ்லிம் மஜ்லிஸின் நாட்காட்டி விநியோகமும் விடை பெற்றுச் செல்லும் உறுப்பினர் கௌரவிப்பும்



லேக் ஹவுஸ் முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாட்டில் 2024 ஆம் ஆண்டுக்கான இஸ்லாமிய நாட்காட்டி வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (13) லேக்ஹவுஸில் இடம்பெற்றது. இதற்கு அமானா வங்கி மற்றும் தாருல் ஈமான் நிறுவனம் ஆகியன அனுசரணை வழங்கியிருந்தன.

குறித்த நிகழ்வில், விடை பெற்றுச் சென்ற மஜ்லிஸ் உறுப்பினர்களான எம்.ஏ. அமீனுல்லா மற்றும் எம்.எம். பிர்தௌஸ் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

லேக் ஹவுஸ் முஸ்லிம் மஜ்லிஸ் தலைவர் எம்.எஸ். சம்ஸ் பாஹிம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், செயலாளர் றிஸ்வான் சேகு முகைதீன், பொருளாளர் எம். என்.ஏ. றிஸ்வான் தலைமையிலான செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மஜ்லிஸ் உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து தினகரன் மற்றும் வாரமஞ்சரி ஆசிரியர் தே. செந்தில் வேலவருக்கு, லேக் ஹவுஸ் முஸ்லிம் மஜ்லிஸ் இஸ்லாமிய நாட்காட்டியின் பிரதியொன்று உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2023 டிசம்பர் 15 வெள்ளிக்கிழமை



**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.53
லுஹர் - 12.07
அஸர் - 03.29
மஃரிப் - 05.58
இஷா - 07.14

**இன்றைய சுபதினம்**
சோபகிருது வருடம் கார்த்திகை 29
ராகுகாலம் : காலை : 10.39 - 12.03வரை
சுபநேரம் : பகல் : 1.30 - 3.03வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# இலங்கையில் முதலீட்டை அதிகரிக்க டென்மார்க் முதலீட்டாளர்கள் ஆர்வம்



இலங்கையில் எரிசக்தி துறை, ஆழ்கடல் மீன்பிடி, இயந்திர படகு உற்பத்தி மற்றும் ஏனைய திட்டங்களில் முதலீடு செய்ய டென்மார்க்கில் பல முதலீட்டாளர்கள்

தயாராக இருப்பதாக டென்மார்க் தூதுவர் ஃப்ரெடி ஸ்வெயின் நேற்று (14) பிரதமர் தினேஸ் குணவர்த்தனவிடம் தெரிவித்துள்ளார். பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் டென்மார்க் தூதுவர் ஃப்ரெடி ஸ்வெயினுக்கும் இடையிலான சந்திப்பொன்று அலரி மாளிகையில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் டென்மார்க்குக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பான கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்காக இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

புதுடில்லியில் வசிக்கும் டென்மார்க் தூதுவர் 1,000க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளை வழங்கக்கூடிய கோபன்ஹேகனில் உள்ள நிறுவனமான GPV Group A/S இன், இலத்திரனியல் உற்பத்தி தொழிற்சாலை கிளையை, இலங்கையில் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டதாக தெரிவித்தார். டென்மார்க்கில் பல முதலீட்டாளர்கள் எரிசக்தித் துறை, ஆழ்கடல் மீன்பிடி, இயந்திர படகு உற்பத்தி மற்றும் ஏனைய திட்டங்களில் முதலீடு செய்ய தயாராக இருப்பதாகவும் அவர் பிரதமரிடம் கூறினார். நாட்டின் தற்போதைய பொருளாதார வளர்ச்சி, சர்வதேச நாணய நிதியத்தின் நிதிப் பொதியின் முன்னேற்றம் உள்ளிட்டவை குறித்து டென்மார்க் தூதரிடம் பிரதமர் விவரித்தார். முதலீட்டை ஊக்குவிப்பதன் மூலம் டென்மார்க் இலங்கையின் மீது வைத்திருக்கும் நம்

06

# கங்காராம விகாராதிபதியின் 80ஆவது பிறந்தநாள்





கங்காராம விகாரையின் விகாராதிபதி வணக்கத்துக்குரிய கலபொட ஞானிஸ்ஸர தேரரின் 80ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, அவர் நீண்ட ஆயுளுடன் வாழ வாழ்த்தும் வகையில், உள்ளூர் மற்றும் வெளிநாடுகளிலிருந்து மஹாசங்கரத்தினர் அழைக்கப்பட்டு அன்னதானம் வழங்கும் புண்ணிய நிகழ்வு கங்காராம விகாரை வளாகத்தில்நேற்று நடைபெற்றது.

இலங்கையில் நடைபெற்றுவரும் 08 ஆவது தென்சீனக் கடல் பௌத்த ஷென்ஜன் வட்டமேசை மாநாட்டில் இணைந்து கொண்ட வணக்கத்துக்குரிய மாஸ்டர் யின் ஷுன் உள்ளிட்ட சீனத் துறவிகள், இலங்கையின் அனைத்துப் பிரிவினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மஹா சங்கத்தினர் உள்ளிட்ட பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

கங்காராம விகாராதிகாரி கலாநிதி அஸ்ஸஜி தேரரின் ஏற்பாட்டில் இந் நிகழ்வு நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஆளும்கட்சி மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்கள் அமைச்சர்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரபுக்கள், ஆலய நன்கொடையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பொருளாதார நெருக்கடியின் பின்னர் அபிவிருத்தி வேலைகள் மீள ஆரம்பம்



பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருந்த நாட்டில் நீண்ட காலத்தின் பின்னர், புதிய அபிவிருத்தித் திட்டங்களை

ஆரம்பிக்க முடிந்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன

தெரிவித்தார்.கொழும்பு 06, கிருலப்பனை, ரொபர்ட் குணவர்தன மாவத்தையை அகலப்படுத்தி அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையிலே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.இத்திட்டம் 1.2 பில்லியன் ரூபா செலவில் பூர்த்தியாக்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டத்துக்கென 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.இத்திட்டத்தை பிரதமர் தினேஷ் குணவர்த்ன ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் கலந்துகொண்ட

அமைச்சர் பந்துலகுணவர்த்ன மேலும் தெரிவித்ததாவது.

இதுவரை வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் வெளிநாட்டுக் கடன் மற்றும் உதவிகளைப் பெற்றுத்தான் வீதிகள் உள்ளிட்ட அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அரசாங்கத்தை நடத்துவதற்கு தேவையான தொடர் செலவினங்களை ஈடுசெய்யும் அளவுக்கு நாட்டின் எந்தவொரு அரசாங்கத்திடமும் போதுமான நிதியிருக்கவில்லை. வரி வருமானமும் அரசாங்க வருமானமும் இல்லாதிருந்தன.

எந்தக்கட்சி ஆட்சியில் இருந்தாலும் வெளிநாட்டுக் கடன்களைக் கொண்டும் மற்றும் பணம் அச்சிட்டுமே வேலைகளைச் செய்தன.

தற்போதைய சூழ்நிலையில் பணத்தை அச்சடிக்கும் திறன் மத்திய வங்கிக்கு இல்லை. கடனைச் செலுத்தாத நிலையில் வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதற்கு வாய்ப்பில்லை.

வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதன் மூலம், 2024ல் பணம் கிடைத்தவுடன், நாட்டை மீண்டும் உழைக்கும் நாடாக மாற்ற முடியும். இதற்காக மத்திய அரசாங்கம், மாகாண சபைகள், மாநகர சபைகள், உள்ளூராட்சி சபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களை ஒன்றிணைந்த வேலைத்திட்டத்தின் கீழ் வழிநடத்துவதற்கு பிரதமரின் வழிகாட்டல் மற்றும் தலைமைத்துவம் வழங்கப்படும்.

இதன்படி, மத்திய அரசாங்கம், மாகாண சபை, மாநகர சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் நிதியானது ஜனவரி மாதம் முதல் மிகவும் திறம்படவும் திறமையாகவும் பயன்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவிடம் இமாலய பிரகடனம் GTE சமர்ப்பிப்பு



உலகத் தமிழ் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் உள்ளிட்ட பௌத்த பிக்குகள் அடங்கிய குழுவினர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து இதைக் கையளித்ததுடன் அவருடன் கலந்துரையாடினர்.இந்த சந்திப்பு உலகத் தமிழ் பேரவையின் வேண்டுகோளுக்கு இணங்க முன்னெடுக்கப்பட்டதாக முன்னாள்ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## நீதி அமைச்சின் நடமாடும் சேவை

(தலவாக்கலை குறூப் நிருபர்

நீதி,சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு நடத்தும் நடமாடும் சேவை நாளை (16) நுவரெலியா சினிசிட்டா நகர மண்டபத்திலும் நாளை மறுதினம் (17) மாத்தளையிலும் நடைபெறவுள்ளது. இச்சேவையில் பொதுமக்களுக்குத் தேவையான சட்ட ஆவணங்கள் வழங்கப்படவுள்ளன. நாளை (16) காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நுவரெலியாவிலும் நாளை மறுதினம் (17) மாத்தளையிலும் இச்சேவை நடைபெறவுள்ளது.

ஆட்பதிவுத் திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம், சட்ட உதவி ஆணைக்குழு, நட்ட ஈடு வழங்கும் அலுவலகம், இணக்க சபை ஆணைக்குழு, காணாமல் போனோர் அலுவலகம், திணைக்களம் ஆகியவற்றில் தேவையான சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்

# இலகு ரயில் திட்டத்தை ஆரம்பிக்க ஜப்பானுடன் பேச்சு:22 ஹெக்டயரில் திட்டம்

## மண் பரிசோதனை சாத்தியக் கூற்றாய்வுகள் நிறைவு



இலங்கையில் இலகு ரயில் திட்டத்தை விரைவில் ஆரம்பிக்க ஜப்பானுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் இதற்காக மாலபே வரையிலான மண் பரிசோதனைகள் மற்றும் முன் சாத்தியக் கூற்றாய்வுகள் நிறைவு பெற்றுள்ளதாகவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் இத்திட்டத்துக்காக22 ஹெக்டயர் காணி கையகப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுபற்றித் தெரிவித்த அமைச்சர்:

இலகு ரயில் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான பேச்சுவாரத்தைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.இத்திட்டத்தை விரைவில் தொடங்குவதே அரசின் நோக்கம்.இலங்கை, ஜப்பானுக்கடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இத்திட்டத்தை மீள் மதிப்பீடு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அடுத்த வருடத்தில் பொது வசதிகள் இடமாற்றம் மற்றும் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மீண்டும் செயற்படுத்தப்படும்.

இலகு ரயில் திட்டத்துக்கான ஆரம்ப சாத்தியக்கூறு ஆய்வு நடத்தப்பட்டது. மாலபே முதல் கோட்டை வரையிலான கட்டுமானம் தொடர்பான விரிவான திட்டங்கள், ஒப்பந்த ஆவணங்கள், ஏல ஆவணங்கள் மதிப்பீடுகள் மற்றும் கண்காணிப்பு சேவைகளை வழங்க சர்வதேச ஆலோசனை நிறுவனம் ஒன்று நியமிக்கப்பட்டது. இதன் அடிப்படை விஷயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 120 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.

இப்பூர்வாங்க பணிகள் 2019 ஏப்ரலில் தொடங்கி 91 மாதங்களில் முடிக்கப்பட இருந்தது. இருப்பினும், 21 மாதங்களுக்குப் பிறகு, இத்திட்டத்தை இரத்து செய்ய அரசாங்கம் முடிவு செய்தது.

### பாதிக்கப்பட்ட இராணுவ வீரருக்கு

# தலா 5 இலட்சம் ரூபா வழங்க நீதிமன்றம் உத்தரவு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மிரிஹான பொலிஸ் குழு ஒன்றின் மூலம் முன்னாள் இராணுவ வீரர் ஒருவரை சட்டத்துக்கு முரணான வகையில் கைது செய்து, மனிதாபிமானமற்றரீதியில் சித்திரவதைக்கு உட்படுத்தி அவரது அடிப்படை உரிமையை மீறிய குற்றத்திற்காக உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இதற்கு பொறுப்புக் கூற வேண்டிய அப்போதைய மிரிஹான பிரதேசத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் தற்போதைய பதில் பொலிஸ்மா அதிபருமான தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூவரும் அவர்களின் தனிப்பட்ட பணத்திலிருந்து பாதிக்கப்பட்ட குறித்த இராணுவ வீரருக்கு தலா ஐந்து லட்சம் ரூபாவீதம் வழங்குமாறே உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன் அதற்கு மேலதிகமாக ஒரு இலட்சம் ரூபா நட்ட ஈட்டை மனுதாரரான இராணுவ வீரருக்கு வழங்க வேண்டும் என்றும் நீதிமன்றம் அரசாங்கத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் அந்த வழக்கு தீர்ப்பின் பிரதியை சட்டமா அதிபர் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கும் அனுப்புமாறு உச்சநீதிமன்றம் பதிவாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மில்லவ ரஞ்சித் சுமங்கலவினால் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி வழக்கில், பிரதிவாதிகளாக மிரிஹான பொலிஸ் உத்தியோகத்தரான பண்டார, அவசர பிரிவின் பொறுப்பதிகாரி பாத்திய ஜயசிங்க, பாதுக்க பிரதேசத்தைச் சேர்ந்த அஜித் வனசுந்தர அப்போது அந்த பிரதேசத்திற்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

# கொழும்பு கண் ஆஸ்பத்திரியில் வேலைநிறுத்தம் இடைநிறுத்தம்

## வழக்கம்போல் சிகிச்சைகள்



கொழும்பு தேசியகண் வைத்தியசாலை வேலை நிறுத்தம்நேற்று உடனடியாக இடைநிறுத்தப்பட்டது. சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹிபாலவுடன் நடத்தப்பட்ட விசேட கலந்துரையாடலைய டுத்து இம்முடிவு எடுக்கப்பட்டது. இதையடு த்து சிகிச்சைகள் வழமைபோல நடைபெற்றன.

கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில் நேற்று (14) காலை 8.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது நேற்றுக் (14) காலை சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹிபாலவுடன் நடைபெற்ற விசேட கலந்துரையாடலிலே, வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

வைத்தியசாலையில் நிலவும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகளை வழங்குவதாக சுகாதார செயலாளர் தெரிவித்தார். கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையின் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபிக், பிரதிப் பணிப்பாளர் டொக்டர் ஜி.பி. படவல மற்றும் கண் வைத்தியர்கள், வைத்தியர்கள் உட்பட வைத்தியசாலை ஊழியர்கள் குழுவினர் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

# 2024 இல் ஏற்படவுள்ள வரட்சி : எச்சரிக்கை

நாட்டில் 2024, நடுப்பகுதிக்கிடையில் கடுமையான வரட்சி ஏற்படுமென, நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

காலநிலை மாற்றம் மற்றும் நாட்டின் உணவுப் பாதுகாப்பில் ஏற்படும் தாக்கம் குறித்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உயர்மட்ட விஞ்ஞான அமர்வில் இதுபற்றி தெரிவிக்கப்பட்டது .

நாட்டின் உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையிலும், பொருளாதார நெருக்கடிக்குள்ளும் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.இதனால்,மக்கள் இன்னும் அதிக அசௌகரியங்களை எதிர் கொள்வர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் மூன்றில் ஒரு பகுதி குடும்பங்கள் இந்த


06

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 29ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஊலா பிறை 30

### குறள் தரும் சிந்தனை



இகழ்ந்தெள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்பது உடைத்து

இழித்துப் பேசாமலும், ஏளனம் புரியாமலும் வழங்கிடும் வள்ளல் தன்மை உடையவர்களைக் காணும்போது, இரப்போர் உள்ளம் மகிழ்ச்சியால் இன்பமுறும்.

# பொருளாதார மீட்சிக்கு உதவும் சர்வதேச நாணய நிதிய உதவி

இலங்கை கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்தது. அந்நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் வகையிலான ஆக்கபூர்வ பொருளாதார வேலைத்திட்டங்கள் 2022 ஆம் ஆண்டின் ஜுலை மாதப் பிற்பகுதி முதல் ஆரம்பிக்கப்பட்டன. பரந்த அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுள்ள இவ்வேலைத்திட்டங்கள் குறுகிய காலப்பகுதி முதல் மக்களுக்கு நன்மை பயக்கத் தொடங்கின.

இதன் பயனாக பொருளாதார நெருக்கடி காலத்தில் மக்கள் எதிர்கொண்ட பல்வேறு அசௌகரியங்களும் நெருக்கடிகளும் கட்டம் கட்டமாக நீங்கலாயின.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை முழுமையாக மீட்டெடுக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதிலும் கவனம் செலுத்தப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு அந்நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளும் சந்திப்புக்களும் நடத்தப்பட்டன. அவற்றில் எட்டப்பட்ட இணக்கப்பாடுகளின் அடிப்படையில் உடன்படிக்கையும் கடந்த மார்ச் மாதம் கைச்சாத்திடப்பட்டது. இதற்கேற்ப இந்நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்றிட்டத்தின் கீழ் 48 மாதங்களில் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியாக வழங்கப்பட உள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு முதற்கட்டமாக கடந்த மார்ச் மாதம் 337 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கப்பட்டது.

இந்நிதியுதவி தொடர்பிலான முதலாம் கட்ட மதிப்பீடு கடந்த செப்டம்பர் மாதம் 14 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்நிதியப் பிரதிநிதிகளால் முன்னெடுக்கப்பட்டது. அது தொடர்பிலான நடவடிக்கைகளை சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை நேற்றுமுன்தினம் பூர்த்தி செய்துள்ளதோடு, இலங்கையின் பொருளாதார கொள்கை வகுப்பு மற்றும் மறுசீரமைப்புக்கு உதவும் வகையில் இரண்டாம் கட்டமாக 337 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்க முடிவு செய்துள்ளது. இந்நிலையில் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் பல விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அவையும் இந்நாட்டுக்கு சாதகமானவையாக அமைந்துள்ளன.

விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்றிட்டத்தின் கீழ் இலங்கை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் திருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அந்த அறிக்கை, செலவின நிலுவைகள் தவிர்ந்த அனைத்து முக்கிய நடவடிக்கைகளும் வரி வருமானம் தவிர்ந்த அனைத்து இலக்கிடப்பட்ட அடைவுகளும் கடந்த ஜுன் மாத இறுதியிலேயே எட்டப்பட்டுள்ளன. கடந்த ஒக்டோபர் மாத இறுதியில் எட்டப்பட வேண்டிய மிக முக்கிய கட்டமைப்பு ரீதியிலான மறுசீரமைப்புக்கள் அக்காலப்பகுதிக்குள்ளோ அல்லது அக்காலப்பகுதிக்கு பின்னரோ நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை தொடர்பில் ஆட்சியியல் மதிப்பாய்வொன்றை சர்வதேச நாணய நிதியம் மேற்கொண்டு அது தொடர்பில் அறிக்கையொன்றையும் சமர்ப்பித்துள்ளது. ஆசியாவில் இவ்வாறு மதிப்பாய்வுக்கு உள்ளான முதலாவது நாடாக இலங்கை விளங்குகின்றது.

இதேவேளை, கடன் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துதல், வருமானத்தை அதிகரித்தல், திருப்திகரமான கையிருப்பு அளவை மீளக்கட்டியெழுப்பல், பணவீக்கத்தைக் குறைத்தல், நிதியியல் உறுதிப்பாட்டை பாதுகாத்தல் ஆகிய செயன்முறைகளில் இலங்கை பாராட்டத்தக்க விதத்திலான முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது. இதன் ஊடாக நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமடைவதற்கான குறிகாட்டிகள் தென்படுகின்றன' எனவும் குறிப்பிட்டிருக்கிறது சர்வதேச நாணய நிதியம்.

இவ்வாறான சூழலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் விஷேட உரையாற்றுகையில், 'சர்வதேச நாயண நிதியத்தின் இரண்டாவது கடன் தொகைக்கு அனுமதி கிடைக்கப்பெற்றிருப்பதன் ஊடாக எமக்கு பல நன்மைகள் கிடைக்கப்பெறும். குறிப்பாக எமது நிதித்துறையில் பெரும் சக்தியாக அமையும் வகையில் வைப்பு காப்பீட்டுத் தொகையாக உலக வங்கி 150 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்க உள்ளது. அதன் ஊடாக எமது வங்கி மற்றும் நிதித்துறைகள் நூறு வீதம் பாதுக்காக்கப்படும். அத்தோடு ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜெய்க்கா நிறுவனம் உள்ளிட்ட நிதி நிறுவனங்களிடமிருந்தும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக பெருந்தொகை நிதி கிடைக்கப்பெற உள்ளது' என்றுள்ளார்.

இந்நிதியம் இந்நாட்டுக்கு இரண்டாம் கட்ட நிதியுதவியை வழங்குவதானது, பொருளாதார ரீதியில் நாட்டை மேலும் பலப்படுத்தி மேம்படுத்த வழிவகுக்கக் கூடியதாக அமைந்திருப்பதை ஜனாதிபதியின் தகவல்கள் வெளிப்படுத்தி நிற்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே பொருளாதார ரீதியில் நாடு நம்பிக்கை தரும் வகையில் முன்னேற்றப்பாதையில் பயணித்துக் கொண்டிருப்பது தெளிவாகிறது. அதன் பயன்களை நாடும் மக்களும் அடைந்து கொள்ளும் காலம் வெகுதொலையில் இல்லை என்பதை உறுதிபடக் கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

# பொதுமேடைகளுக்கு இனிமேல் விஜயகாந்த் வரப் போவதில்லை!

## அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொண்டார்!

நடிகர் விஜயகாந்த் இனிமேல் பொதுமேடைகளுக்கு வர மாட்டார். அவர் பெரும்பாலும் ஒதுங்கியே இருக்க வாய்ப்பு உள்ளதாக தே.மு.தி.க கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே தே.மு.தி.கவின் பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் கட்சியின் புதிய பொதுச்செயலாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். விஜயகாந்த் உடல்நிலை மோசமான நிலையில் பிரேமலதா விஜயகாந்த் பொதுச்செயலாளர் ஆகியுள்ளார். பொதுக்குழு, செயற்குழு கூட்டத்தில் பிரேமலதாவை ஒருமனதாக தெரிவு செய்து தீர்மானம் நிறைவேற்றம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது இவ்விதமிருக்க, விஜயகாந்த் உடல்நலம் குறித்து வதந்தி பரப்புவோர் மீது பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நாடாளுமன்ற தேர்தலில் கூட்டணி குறித்து முடிவெடுக்க பொதுக்குழுவுக்கு அதிகாரம் அளித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது.

விஜயகாந்த் பொதுமேடைகளுக்கு வர மாட்டார் என்பதுடன், கட்சி தொடர்பான நிகழ்வுகளில் கலந்து கொள்ளவே மாட்டார் என்றும் கூறப்படுகிறது. அவர் கட்சியில் எந்த முடிவுகளையும் எடுக்க மாட்டார். அவர் பொதுமேடைகளுக்கு வரவே வாய்ப்புகள் இல்லை. அவர் வீட்டில் இருக்க வேண்டிய அவசியம் அதிகம் உள்ளது. அதனால் இனி அவர் வீட்டிலேயே ஓய்வு எடுப்பார்.

அவர் இனிவரும் காலங்களில் ஓய்வு எடுப்பார். அரசியல் நிகழ்வு, சினிமா நிகழ்வு எதிலும் கலந்து கொள்ள மாட்டார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சமீபத்தில் வெளியேறினார். அங்கே அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. அவருக்கு அவ்வப்போது இப்படி உடல்நிலை மோசமானது வழக்கம். இதற்காக அவர் வெளிநாட்டில் சிகிச்சை பெறுவதும் வழக்கம். ஆனால் இந்த முறை அவரின் உடல்நிலை மிகவும் நலிவுற்றதாகக் கூறப்படுகிறது.

அவருக்கு இதயத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு, இரத்த அழுத்தம், மூச்சு விடுவதில் சிரமம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தீவிர சிகிச்சை பெற்றுள்ளார். முக்கியமாக நுரையீரல் பாதிப்பு இருப்பதாக கூறப்படுகிறது. அது தொடர்பாக அவர் அனுமதிக்கப்பட்டு உள்ள மியாட் மருத்துவமனை அறிக்கை வெளியிட்டுள்ளது.

சமீபத்தில் அவரின் உடல்நிலை குறித்து மோசமானதாக செய்திகள் வந்தன. அவரின் உடல்நிலை பாதிக்கப்பட்டுவிட்டது, மோசமாக்கிக்கொண்டு இருக்கிறது, அதனால் ரசிகர்கள் மற்றும் தொண்டர்கள் அங்கே குவிந்து வருகிறார்கள் என்று செய்திகள் வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.



# மருதமுனை சாதனையாளர்களை பாராட்டி, கௌரவிக்கும் நிகழ்வு

மருதமுனை கிறிஸ்டல் விளையாட்டுக் கழகம் அதன் 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்த கழகத்தின் சாதனையாளர்களை பாராட்டி கௌரவிக்கும் 'கிறிஸ்டல் அடைவாளர்களுக்கு கௌரவம் 2023' நிகழ்வு கழகத்தின் நிறைவேற்றுத் தலைவர் எம்.ஐ. நுபைறுடீன் மற்றும் கழகத்தின் தலைவர் டொக்டர் எம்.ஏ. எம்.அஸீம் ஆகியோர் தலைமையில் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி மருதூர்க்கொத்தன் கலையரங்கில் நடைபெற்றது.

கழகத்தின் பொதுச்செயலாளர் எச். எம். சுஹைப் ஒருங்கிணைப்போடு நடைபெற்ற இந்நிகழ்வில் கிறிஸ்டல் விளையாட்டுக் கழகத்தின் உயர்வுக்கு உறுதுணையாக இருந்த கழக உறுப்பினர்களின் உறவுகளான தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தி அடைந்த மாணவர்கள், க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்று சித்தியடைந்த மாணவர்கள், உயர்தர பரீட்சையில் உயர்பெறுபேறு பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவர்கள், சிங்கள மொழி போட்டி நிகழ்ச்சியில் தேசிய மட்டத்திற்கு தெரிவான மாணவி ஆகியோர் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

கிறிஸ்டல் விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஏ.சி.ஜஹாங்கீர் இலங்கை அதிபர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதிபராக பதவி உயர்வு பெற்றமைக்காக பாராட்டி, பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி இங்கு கௌரவிக்கப்பட்டார்.

அதேபோன்று கழகத்தின் வளர்ச்சிக்கு உரமாக இருந்து செயற்பட்டு திருமண பந்தத்தில் இணைந்து கொண்டவர்கள் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். இதில் உயர்பீட உறுப்பினர்கள் பலரும் உரையாற்றியதுடன், நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளர் ஏ.எல்.எம்.ஷினாஸ் தொகுத்து வழங்கினார்.



பெரியநீலாவணை விசேட நிருபர்...

# பேருவளை கெச்சிமலை தர்காவில் புனித புஹாரி தமாம் மஜ்லிஸ்



பேருவளை கெச்சிமலை தர்ஹாவில் நடைபெற்று வரும் வருடாந்த புனித ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹுல் முஸ்லிம் மற்றும் மஷ்ரவுர்ரவி ஆகிய ஹதீஸ் கிரந்தங்களின் பராயன மஜ்லிஸின் தமாம் வைபவம் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை சங்கைக்குரிய அஷ் ஷெய்ஹ் மௌலவி ஸக்கி அஹமத் (அஷ்ரபி) பின் அஷ் ஷெய் முஹம்மத் காலிப் அலவி ஆலிம் அலவியதுல் காதிரி தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இறைநேசச் செல்வர்கள், நல்லோர்கள் வழியில் மக்களுக்கு அறிவுரை வழங்கி தாங்களும் வாழ்ந்து காட்டி மனித சமுதாய மறுமலர்ச்சிக்காக உழைத்தார்கள். இத்தகைய ஸுபியாக்கள் பலரும் இலங்கைக்கு வருகை தந்து பாவா ஆதம் (அலை) என்று அழைக்கப்படும் புனித தலத்தை தரிசித்துச் சென்ற வரலாறு உள்ளது.



கெச்சிமலையில் அடங்கியுள்ள செய்னு அஷ்ரப் வழியுள்ளாஹ் அவர்கள் இதே நோக்கத்துதோடு கப்பல் மூலமாக இலங்கை வந்தார். கடலின் அகோரமும், காற்றின் யோகமும் கப்பலை திசை திருப்பி மெச்சுப் புகழ் கெச்சிமலை அன்மித்தே பேருவளையில் இறங்கச் செய்தது. அவர் தனது இருப்பிடத்தை அங்கு அமைத்துக் கொண்டார், அங்கிருந்து இறைபணியைத் தொடர்ந்தார், ஆன்மிக மலர்ச்சி கண்டார்.

1882 ஜோர்ஜ் அரசின் கவர்னராக இலங்கையில் கடமையாற்றிய சேர் ஆதர் ஹென்றி கோடன் காலிக்கு தன்னுடைய உத்தியோக கடமைக்காகச் செல்லும் வழியில் அவர் பயணம் செய்த குதிரை வழிதவறி பேருவளை சுங்கப் பாதை வழியில் சென்று ஓர் இடத்தில் நின்றது. அங்கு இருந்த ஒரு பழைய புதைகுழியின் அருகில் நின்று பணிந்தது.

இந்த ஆச்சரியமான சம்பவம் கவர்னரை சிந்திக்கச் செய்தது. அங்குள்ள மக்களிடம் கவர்னர் விசாரித்ததில் இந்த இடம் கெச்சிமலை என்றும், அடங்கப்பட்டிருக்கும் அற்புதமான வழியுள்ளாஹ் பற்றியும் கூறப்பட்டது. உடனே கவர்னர் ஜோர்ஜ் அரசின் சார்பில் இந்த இடத்தை அன்பளிப்பாக வழங்கும்படி உத்தரவிட்டார். பின்னர் மக்கள் ஒன்றுசேர்ந்து கெச்சிமலையை உருவாக்கினார்கள்.

வெள்ளிக்கிழமை தவிர இந்த புனித மஜ்லிஸ் தினமும் அதிகாலை தஹஜ்ஜத் தொழுகையுடன் ஆரம்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. மர்ஹூம் அஷ் செய்ஹ் ஹம்ஸா ஆலிம் இதற்குத் தலைமை தாங்கி நீண்ட காலம் மஜ்லிஸை நடத்தி வந்தார். அவர் மறைவுக்கு பின்னர் அஷ் ஷெய்க் மர்ஹூம் ஷுகைப் ஆலிம் தலைமை தாங்கி நடாத்தினார். அதற்குப் பின்னர் அவர்களது சகோதரரான காலிப் அலவி ஹாஜியார் அலவியதுல் காதிரி அவர் மறைவுக்கு பின்னர் தற்போது அவரது புதல்வர் சங்கைக்குரிய மௌலவி ஸக்கி அஹ்மத் (அஷ்ரபி) பின் அஷ் ஷெய்க் காலிப் அலவி தலைமை தாங்கி நடத்தி வருகிறார். எதிர்வரும் 16 ஆம் இரவு கத்தாத் ராதிப், விஷேட மார்க்கச் சொற்பொழிவு நடைபெற்று, தர்காவில் அடங்கப்பட்டுள்ள அஷ் ஷெய்க் அஷ்ரப் வலியுல்லாஹ் ஸியாரத் நிகழ்ச்சியும் இடம்பெறும். 17 ஆம் திகதி அதிகாலை அல் குர்ஆன் தமாம் வைபவம் நடைபெறும்.

தமாம் நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி முஸ்லிம் சேவை 53 ஆவது வருடமாகவும் நேரடியாக அஞ்சல் செய்யும்.

# மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் சவூதி அரேபியாவின் பாரிய முயற்சிகள்

சவூதி அரேபியாவானது அங்குள்ள ஆட்சிச் சட்டம், நீதி, ஆலோசனை மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் அமையவேண்டும் என்றும், இஸ்லாமிய சட்டத்தின்படி மனித உரிமைகளை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கிறது.

மனித உரிமைகளை பாதுகாக்கும் விடயத்தில் சவூதி அரேபியா பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

2005 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் ஆணையத்தை சவூதி அரேபியா நிறுவியது. இது பிரதமருடன் நேரடியாக இணைக்கப்பட்ட ஓர் அரச அமைப்பாகும். மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் இது செயற்படுகிறது.

## இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி எழுதிய ஆங்கில மொழியிலான கட்டுரையைத் தழுவியது

இந்த ஆணையகமானது அதன் பணிகளை சுயாதீனமாகவும் சுதந்திரமாகவும் செயற்படுத்த பரந்த அதிகாரங்களைக் கொண்டுள்ளது. பாதுகாப்பு உரிமை, சுகாதார உரிமை, வேலை செய்யும் உரிமை பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களின் உரிமைகள், வளர்ச்சிக்கான உரிமை, அரசியல் மற்றும் பொதுவாழ்வில் பங்கேற்பதை மேம்படுத்துவதற்கான உரிமைகள், சிவில் சங்கங்களை உருவாக்குதல் மற்றும் ஆதரித்தல் தொடர்பான உரிமைகள் போன்ற அனைத்து மனித உரிமைகளும் சவூதி அரேபியாவில் காணப்படுகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக 'விஷன் 2030' என்ற தூரநோக்குடனான திட்டத்தின் அடிப்படையில் பல்வேறு துறைகளிலும் பரந்த மற்றும் தரமான சீர்திருத்தங்களை சவூதி அரேபியா மேற்கொண்டுள்ளது. இதில் பெண்கள் உரிமைகளும் அடங்கும். குறித்த சீர்திருத்தமானது பெண்களுக்கான உரிமைகளை மேம்படுத்துவதுடன் அவர்களுக்கு எதிரான அடக்குமுறைகள், துஷ்பிரயோகங்கள் போன்றவற்றை ஒழிப்பதற்கான சட்டக் கட்டமைப்பை செயல்படுத்துவதில் முக்கிய பங்களித்தது.





2016 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட குடும்ப விவகாரங்களுக்கான ஆணையத்தினூடாக குடும்ப விவகாரங்கள், அதன் கட்டமைப்பு என்பன முகாமைத்துவம் செய்யப்பட்டு, அதற்கான உரிமைகளும் முழு அளவில் வழங்கப்பட்டு வருகின்றன.

சவூதி அரேபிய குடிமக்கள் அனைவருக்கும் தொழில் செய்யும் உரிமையும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்விடயத்தில் பாலினம், அங்கக்குறைபாடு, வயது அல்லது வேறு எந்த வகையான பாகுபாடும் அவர்களுக்கு இடையே அனுமதிக்கப்படுவதில்லை.

ஓய்வு பெறும் வயதில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே சமத்துவத்தை ஏற்படுத்தும் வகையில் சமூக காப்பீட்டு முறையையும் சவூதி அரேபியா திருத்தம் செய்துள்ளது.

உண்மையில் 'விஷன் 2030' என்ற திட்டத்தினூடாக சவூதி அரேபியா பல துறைகளிலும் அபிவிருக்கி அடைந்து வருவதுடன், குடிமக்களுக்கான வசதிகள் மற்றும் உரிமைகள் என்பவற்றை துல்லியமான முறையில் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



அஷ்ஷெய்க்
M.M.அஹ்மத் இம்தியாஸ்...
(மதனி) பின் பாஸ் மகளிர் கல்லூரி, மல்வானை

# சகோதரத்துவம்: ஓர் இஸ்லாமிய நோக்கு



மனித சமூகம் சார்ந்த மிக முக்கியமான ஒரு பண்புதான் சகோதரத்துவமாகும். இஸ்லாம் இதன்பால் அழைப்பு விடுக்கிறது. சமூகத்தில் மனிதர்கள் தமக்கிடையே பரஸ்பரம் நேசிப்பவர்களாகவும் தொடர்பு கொள்கின்றவர்களாகவும் உதவி செய்து கொள்கின்றவர்களாகவும் இருப்பதனையே சகோதரத்துவம் என்பது குறித்து நிற்கிறது. இதன் மூலம் ஒரு குடும்பம் போன்றதொரு உணர்வை அவர்கள் பெற்றுக்கொள்வார்கள். அவர்கள் தமக்குள்ளால் அன்புடன் நடந்துகொள்வார்கள். ஒருவரின் சுமையை அடுத்தவர்கள் சுமப்பார்கள். அடுத்தவனின் பலம் தனது பலம் என்பதாக உணர்வார்கள். அடுத்தவனின் பலவீனம் தனது பலவீனம் என்று பார்ப்பார்கள்.

இன்று நாம் எதிர்கொண்டுள்ள மிகப்பெரியதொரு பிரச்சினைதான் சகோதரத்துவம் என்பதனை மிகவும் சுருக்கமாக விளங்கியுள்ளமையாகும். நாம் எமக்கு மத்தியில் எவ்வாறு நடந்துகொள்கிறோம்? நாம் எவ்வாறு ஏனையவர்களை புரிந்துகொள்கிறோம்? நாம் எவ்வாறு அடுத்தவர்களின் நியாயங்களை தேடுகிறோம்? நாம் மற்றவர்களை நேசிக்கிறோமா? ஏனையவர்களுடன் முரண்படும்போது எவ்வாறு நடந்துகொள்கிறோம்? அன்பு என்ற நிழலின் கீழ் நாம் இணைந்துள்ளோமா?

சகோதரத்துவம் என்பது உயர்த்தப்படுகின்ற ஒரு வெற்றுக் கோஷமல்ல. மீட்டி மீட்டி சொல்லப்படுகின்ற வார்த்தைகளுமல்ல. மாற்றமாக இது ஒரு செயல்பாடும், வாழ்வொழுங்கும், பரஸ்பர ஒத்துழைப்பும் ஒருவர் அடுத்தவரை பூரணப்படுத்துவதும் ஒருவர் பிரச்சினைகளை அடுத்தவர்கள் தீர்த்துவைப்பதும் ஆகும்.

சகோதரத்துவம் என்பது கண்ணாடியை போன்றது. நாம் ஒவ்வொருவரும் அதில் நம்மை தெளிவாகவும் வெளிப்படையாகவும் கண்டுகொள்ள முடியும். இது இரு கைகளை போன்றது. ஒரு கையிலுள்ள அழுக்கை மற்றக்கை அகற்றுகின்றது. இது உடலில் ஒரு பகுதியில் நோய் ஏற்பட்டால் துக்கத்தை வெளிப்படுத்துவதற்காக உஷ்ணத்தை வெளிப்படுத்தும் உடம்பை போன்றது.

உள்ளங்கள் இணைய வேண்டும். சகோதரத்துவம் என்பது ஈமானின் சகோதரன் ஆவான். பிரிவினை என்பது இறைமறுப்பின் சகோதரன் ஆகும். ஒரு முஃமினின் முதற்பலம் ஒற்றுமைதான். இது அன்பின் மூலம் மாத்திரம்தான் ஏற்பட முடியும். சகோதரத்துவம் என்பது மார்க்கமாகும்.

ஒரு சகோதரன் தவறிழைக்கின்றான் என்று வைத்துக்கொள்வோம். அவன் தவறை ஏற்று சத்தியத்தை நோக்கி திரும்பும்வரை அதனை பறையடிக்காது பறப்பாது பொறுமை காப்பதே நற்பண்பாகும். இது ஒரு சகோதரனின் உரிமையும்தான்.

அபூ தர்தா (ரழி) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள். 'உங்கள் சகோதரர் ஒரு தவறு செய்தால் அதற்காக வேண்டி அவரை நீங்கள் புறத்தொதுக்கி விட்டுவிட வேண்டாம். ஏனெனில் அவர் ஒருமுறை தவறுவிட்டால் அடுத்தமுறை தன்னை சீர்செய்து கொள்ள சாத்தியமுள்ளது' என்று குறிப்பிடுகிறார்.

(ஆதாரம்: நபிமொழி)

இதுபற்றி இமாம் இப்றாஹீம் நகஈ (ரஹ்) அவர்கள் கீழ்வருமாறு தெரிவித்துள்ளார். 'சகோதரன் ஒரு தவறிழைக்கும்போது உறவை முறித்துக்கொள்ளவோ அவனை வெறுக்கவோ வேண்டாம். இன்று தவறு செய்தவன் நாளை அதனை விட்டுவிடலாம்' என்று குறிப்பிடுகிறார்.

ஈஸா (அலை) அவர்கள் தனது தோழர்களான ஹவாரிய்யூன்களிடம் தெரிவித்ததாக இப்படி ஒரு கருத்து காணப்படுகிறது. 'உங்களது சகோதரன் தூங்கியுள்ள நிலையில் காற்று பலமாக வீசி அவரது ஆடை விலகிவிட்டால் என்ன செய்வீர்கள்?' என்று நண்பர்களிடம் கேட்டபோது 'நாங்கள் அதனை மறைத்துவிடுவோம்' என்று குறிப்பிட்டார்கள். 'இல்லை அதனை நீங்கள் இன்னும் வெளிப்படுத்துவீர்கள்' என்று ஈஸா (அலை) குறிப்பிட்டபோது அவர்கள் ஆச்சரியமாக 'சுப்ஹானல்லாஹ், யார் இப்படி நடந்துகொள்வார்கள்' என்று கேட்டார்கள். அதற்கவர் 'நீங்கள் உங்கள் சகோதரர் பற்றி ஏதாவது மோசமாக கேள்விப்பட்டால் அதற்கு இன்னும் அதிகமாக சேர்க்கிறீர்கள். மக்கள் மத்தியில் அவற்றை பரப்பிவிடுகின்றீர்கள்' என்று குறிப்பிட்டார்கள்.

'ஒருவன் தனது சகோதரனை அன்புடன் நோக்குவதும் வணக்கமாகும். அவன் ஒன்றிணைகின்றபோது அன்புடன் இணைய வேண்டும். பிரிகின்றபோது உபதேசங்களை பகிர்ந்துகொள்பவனாக புறம்பேசுவதை தவிர்ந்து கொள்கின்றவனாக வாக்குறுதியை நிறைவேற்றுகின்றவனாக நட்புறவை வெளிப்படுத்துகின்றவனாக கடும்போக்குகளையப்பட்டவனாக தனிமை நீங்கியவனாக இருக்க வேண்டும்' என்று புழைல் இப்னு இயாழ் (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகின்றார். மேலும் 'புறம் பேசும் நிலை தோன்றிவிட்டால் சகோதரத்துவம் என்ற நிலை நீங்கிவிடும்' என்று குறிப்பிடுகிறார்.

முரண்பாடான கருத்தைக் கூறுபவனின் குறைகளை தேடுவதும் அவனது சிறப்புகளை குறைத்து மதிப்பதும் அவனது சாதனைகளையும் அடைவுகளையும் இழிவாக நோக்குவதும் ஒரு முஸ்லிமின் பண்பல்ல.

'ஒருவரை நேசித்தால் அளவுக்கு அதிகமாக நேசிக்காதே, ஒருவரை வெறுத்தால் அழிவு ஏற்படும் விதமாக வெறுக்காதே' என்று உமர் ரழி அவர்கள் குறிப்பிட்டபோது இது எவ்வாறு நிகழும் என்று வினாத் தொடுக்கப்பட்டது? அதற்கவர் 'தனக்கு மிக விருப்பமான ஒரு பொருளை ஒரு சிறுவன் அளவுக்கு அதிகமாக நேசிப்பது போன்று நேசிக்காதே, நீ ஒருவனை வெறுத்தால் அவன் அழிந்து போகும்விதமாக வெறுக்காதே' என்று குறிப்பிட்டார்கள். நேசிப்பதிலும் வெறுப்பதிலும் நடுநிலை பேணுதலை இது குறிக்கிறது.

(ஆதாரம்: புகாரி அதபுல் முப்ரத்)

சகோதரத்துவத்தை பாதுகாக்க வேண்டுமானால் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளவதுடன் கருத்து முரண்படுவதற்கான ஒழுங்குகளையும் புரிந்துகொள்ள வேண்டும். உடன்பாட்டில் ஒத்துழைக்கின்றவர்களாகவும் முரண்பாட்டில் நியாயம் தேடுபவர்களாகவும் நாம் மாற வேண்டும். கருத்துப்பிடிவாதம் விட்டுக்கொடுக்காமை போன்றவற்றிலிருந்து விலகி நடந்துகொள்ள வேண்டும். எனது கருத்துதான் சரியானது அடுத்தவர் கருத்துக்கள் பிழையானவை என்ற நிலையிலிருந்து எம்மை விடுவித்துக்கொள்ள வேண்டும். அடுத்தவர் பற்றிய நல்லெண்ணம் சதாவும் இருக்க வேண்டும். கட்டியெழுப்பக்கூடிய விமர்சனங்களை முன்வைப்பதுடன் சுய விமர்சனத்துக்கும் தன்னை தயாராக வைத்துக்கொள்ள வேண்டும். கருத்து முரண்பாடு என்ற நிலையிலிருந்து கலந்துரையாடல், கருத்து உடன்பாடு என்ற நிலையை நோக்கிப் போக வேண்டும். அடுத்தவர்களை காயப்படுத்தும் பிரகாரம் எமது அணுகுமுறைகள் இருக்கக்கூடாது.

**அஷ் ஷெய்க் யூ.கே றமீஸ்...**
எம்.ஏ. (சமூகவியல்)

# வெள்ளிக்கிழமையின் சிறப்புக்கள்



எமக்கு முன்னுள்ள சமுதாயத்துக்கு நாட்களை சிறப்பாக்கியது போன்று எமக்கு வெள்ளிக்கிழமையையும் அல்லாஹ் சிறப்பாக்கியுள்ளான். அந்நாளை அவன் முஸ்லிம்களுக்கு சிறந்த நாளாகவும், நன்மைகளை சம்பாதிக்கும் தினமாகவும் ஆக்கியுள்ளான்.

வெள்ளிக்கிழமையின் முக்கியமான இபாதத்களில் ஒன்றாக, ஜும்ஆ தொழுகை காணப்படுகிறது. வயது வந்த ஒவ்வொரு முஸ்லிமும் இந்த ஜும்ஆவில் கலந்து கொள்வது வலியுறுத்தப்பட்டுள்ளது.

வெள்ளிக் கிழமை நாளில் நாம் செய்ய வேண்டிய சில விடயங்கள் காணப்படுகின்றன. அவற்றில், நபி (ஸல்) அவர்கள் மீது அதிகமாக ஸலவாத் சொல்லல், ஸூரதுல் கஹ்ப் ஓதுதல், பள்ளிக்கு நேர காலத்தோடு செல்லல், அதிகமாக ஸதகா செய்தல், குளித்தல், இருப்பதில் சிறந்த ஆடை அணிதல், நகம் வெட்டுதல், மணம் பூசுதல் என்பன முக்கியமானவைகளாகும்.

இவ்வாறான சில விடயங்களை நாம் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும். அதன் ஊடாக அல்லாஹ்வின் விருப்பத்துக்குரியவர்களாக நாம் மாறுகின்றோம்.

'விசுவாசிகளே! (வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தினத்தன்று) தொழுகைக்காக (பாங்கு சொல்லி நீங்கள்) அழைக்கப்பட்டால், வியாபாரத்தை விட்டு விட்டு அல்லாஹ்வை தியானிக்க நீங்கள் விரைந்து செல்லுங்கள். நீங்கள் அறிவுடையோராக இருந்தால் இதுவே உங்களுக்கு மிக்க நல்லதாகும்''

(அல் குர்ஆன் ஜும்ஆ 09)

ஒவ்வொரு முஸ்லிமும் ஜும்ஆவுக்கு செல்வது கட்டாயக் கடமையாகின்றது என்பதை இவ் வசனத்தின் ஊடாக புரிந்துகொள்ளலாம்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'சூரியன் உதிக்கின்ற நாட்களில் சிறந்த நாள் வெள்ளிக்கிழமை நாளாகும். அந்நாளில் தான் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டார். அந்நாளில் தான் ஆதம் (அலை) சுவனம் நுழைவிக்கப்பட்டார். அந்நாளில் நான் அவர்கள் அதில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். வெள்ளிக்கிழமை அன்றி மறுமை நிகழ மாட்டாது' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: ஸஹீஹுல் முஸ்லிம்)

இப் பிரபஞ்சம் படைக்கப்பட்டதும் இதே தினத்தில்தான் எனவும் அறிவிப்புகள் உள்ளன. பிரபஞ்சம் அழிக்கப்படும் நாளும் வெள்ளிக்கிழமை என்பதை மேற்கூறப்பட்ட ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது.

பொதுவாக இத்தினத்தை சிறந்த முறையில் பயன்படுத்தி, நன்மைகளைச் செய்வது கொள்ள வேண்டும். இரு வெள்ளிக்கிழமைக்கு இடையில் ஸூறா கஹ்ப் ஓதுவதனால் அல்லாஹ் எங்களது சிறுபாவங்களை மன்னிக்கின்றான் எனவும் அறிவிப்புகள் உள்ளன.

இவ்வாறான சிறப்புக்களை தன்னகத்தே கொண்டுள்ள வெள்ளிக்கிழமை மாதமொன்றுக்கு நான்கு முறையும் வருடத்தில் 48 முறையும் வந்து செல்கிறது. இன்றிலிருந்தாவது வெள்ளிக்கிழமை தினத்தை சிறந்த முறையில் பயன்படுத்துபவர்களாக நாம் மாறுவோம்.

**எம்.எஸ். தஹ்றி...**
உயர்கல்விக்கான பாதிஹ் நிறுவனம்

# சுவர்க்கம் செல்ல சுலபமான வழி

உலக வாழ்வை மறுமையின் விளைநிலமாக பயன்படுத்தி கொள்வது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். இதன் நிமித்தம் நல்லவைகளை விதைத்து, நன்மைகளை அறுவடை செய்து, மறுமையில் சுவர்க்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.இதுதான் மனித வாழ்க்கையின் இலட்சியமாக இருக்க வேண்டும். அல்லாஹ் ஒருவன் தான் வணக்கத்திற்குரியவன் என்று உறுதியாக நம்ப வேண்டும். அவன் வகுத்து தந்த தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் போன்ற கடமைகளை தவறாமல் நிறைவேற்ற வேண்டும். மேலும் பிற மனிதர்களுக்கும், பிற உயிரினங்களுக்கும் பலன் தரும் வகையில் தனது சொல்லையும், செயலையும் அமைத்துக் கொள்ளவேண்டும்.

ஒரு மனிதன் பிறருக்கு செய்த தீங்கை, பாதிப்புக்குள்ளானவர் மன்னிக்காதவரை அல்லாஹ்வும் மன்னிப்பதில்லை' என்று அல் குர்ஆன் குறிப்பிட்டுள்ளது. அதேநேரத்தில், சக மனிதர்கள் செய்த தீமையை மன்னித்து விட்டால் அதற்கு பிரதியாக இரட்டிப்பாக கூலியைத் தருகிறேன் என்றும் அல்லாஹ் கூறியுள்ளான்.

அந்த வகையில் பிறரின் குறைகளை மறைப்பதும், பிறரின் தீமைகளை மன்னிப்பதும் சுவர்க்கம் செல்ல சுலபமான வழி என்பதை இதன்மூலம் எம்மால் அறிந்து கொள்ளலாம்.

அதேபோன்று, பிறரை உயர்வாக கருதும் எண்ணம் சுவர்க்கத்தை பெற்றுத் தரும். ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களுடன் பேசிக்கொண்டிருந்த போது, நான் இப்போது உங்களுக்கு இறைவனால் சுவர்க்கவாதி என்று அறிவிக்கப்பட்டவரை அடையாளம் காட்டவா? என்று வினவினார்கள். அதற்கு தோழர்கள் ஆவலுடன் ஆம் என்றனர். அப்போது நபிகளார், இப்போது ஒருவர் நம்மை கடந்து செல்வார், அவர்தான் அல்லாஹ்வால் பொருந்திக் கொள்ளப்பட்ட நல்லடியார் என்று கூறினார்கள். அப்போது ஒருவர் இடது கையில் தன் காலணிகளை பிடித்தவராக 'வுழு' செய்த தண்ணீர் தாடியிலிருந்து வழிந்தோடிய வண்ணம் அக்கூட்டத்தை கடந்து சென்றார். நபித்தோழர்களில் ஒருவருக்கு, எந்த நல்ல செயலின் காரணமாக இத்தகைய உயர்ந்த அந்தஸ்த்தை அவர் பெற்றார் என்பதை அறிந்து கொள்ளும் ஆர்வம் ஏற்பட்டது. அவரிடம் சென்று, 'உங்களுடன் இரண்டொரு நாட்கள் தங்க வேண்டும். அதற்கு அனுமதி தருவீர்களா? என்று கேட்டார். அவர் சம்மதம் தெரிவித்த பின்னர் அவருடன் தங்கி அவரது அன்றாட நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனித்து வந்தார். அப்போது அவரிடம் எந்த விதமான சிறப்பான நற்செயல்களையும் அவரால் கண்டுகொள்ள முடியவில்லை. எனவே அவரிடமே கேட்டார், 'நாங்கள் செய்வது போன்றுதான் தொழுகை மற்றும் அன்றாட கடமைகளைத்தான் நீங்கள் நிறைவேற்றுகிறீர்கள். ஆனால் நபி (ஸல்) அவர்கள் 'நீங்கள் சுவர்க்கவாதி' என்பதாகக் கூறினார்கள். அத்தகைய உயர்ந்த அந்தஸ்த்தை பெறுவதற்கு நீங்கள் என்ன நற்செயல்களைச் செய்கிறீர்கள்? என்று அறிந்துகொள்ளவே உங்களுடன் தங்கினேன்' என்றார்.



அதற்கு அவர், 'நான் எல்லோரையும் போலத்தான் எனது கடமைகளைச் செய்கிறேன். ஆனால் என்னிடம் ஒரு குணம் உண்டு. எந்த சகோதர மனிதனையும் என் மனதளவில்கூட தாழ்வாக என்றுமே எண்ணுவதில்லை. ஒருவேளை அதுதான் எனக்கு சிறப்பை பெற்றுதந்திருக்கலாம் என்று எண்ணுகிறேன்' என்று பதில் கூறினார்.

(ஆதாரம்: நபிமொழி)

மேலும் பக்கத்து வீட்டுகாரர்களுக்கு பாதுகாப்பு உணர்வை அளிப்பதும் சுவர்க்கம் செல்ல சுலபமான வழியாகும். ஒரு முறை, நபி (ஸல்) அவர்களிடம் இரண்டு பெண்களைப் பற்றிய செய்திகளைச் சொல்லி, நாளை மறுமையில் அவர்களின் நிலை என்னவாயிருக்கும்? என்று தோழர்கள் வினவினார்கள். அதற்கேற்ப அவர்கள், 'ஒரு பெண்மணி இஸ்லாமிய கடமைகள் அத்தனையும் மிக சிறப்பாக நிறைவேற்றுகிறார். உபரியான தொழுகை, கூடுதலான நோன்புகளை நோற்கிறார். இறைவனுக்குச் செய்ய வேண்டிய எந்த கடமைகளிலும் சிறு குறை கூட செய்வதில்லை. ஆனால் பக்கத்து வீட்டுக்காரர்களுடன் சுமுகமான உறவோடு வாழ்வதில்லை.

மற்ற பெண்மணியோ இறைகடமைகளை குறிப்பிட்ட அளவிலேயே செய்கிறார். அதிகப்படியான எந்த அமல்களையும் செய்யவில்லை. ஆனால் பக்கத்து வீட்டுக்காரர்களிடம் பாசத்தோடு வாழ்கிறார். இந்த இருவரில் எவர் ஈடேற்றம் பெற்றவராய் இருப்பார்? என வினவினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் கவலை தோய்ந்த முகத்தோடு, முதல் பெண்மணி இறைகட்டளை ஆயிரம் தான் செய்திருந்தாலும், பிற மனிதர்களுடன் இணக்கமாக வாழாத காரணத்தினால், அவள் நரக நெருப்பிற்கு விறகாக மாறிவிடுவாள். இரண்டாவது பெண் இறைகட்டளைகளை அளவோடு செய்த போதிலும், அண்டை வீட்டாரை அன்போடு அரவணைத்ததால், அவள் சொர்க்கத்தின் வாரிசாக மாறிப்போவாள்' என்று கூறினார்கள்.

(ஆதாரம்: நபிமொழி)

இதேவேளை பெண்மணியொருவர் வெளியூர் சென்றபோது தான் வளர்த்த பூனையை வீட்டில் வைத்து பூட்டிவிட்டு, அதற்குரிய உணவை வழங்காமல் சென்று விட்டாள். இதை அறிந்த போது, அப்பெண் நம்மோடு அண்டி வாழும் அந்த வாயில்லா பிராணியை வஞ்சித்த காரணத்தினால் பெரும் பாவத்திற்கு ஆளாகி விட்டாள் என்று நபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: நபிமொழி)

தவறான முறையில் வாழ்ந்த ஒரு பெண், கிணற்றை கடந்து சென்றபோது அங்கு ஒரு நாய் மிகுந்த தாகத்தோடு நின்றிருந்ததை கண்டாள். அதன்மீது இரக்கம் கொண்டு தன் காலணியை தன் முந்தானையில் கட்டி கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து அந்த நாயின் தாகம் தீர உதவி செய்தாள். அவளின் அந்த நல்ல செயலை ஏற்றுக்கொண்ட இறைவன் அவளை சுவர்க்கவாதி என்று அறிவித்தான்.

பிற உயிரினத்தின் மீது அன்பு, பாசம் காட்டுவதும் சுவர்க்கம் செல்ல சுலபமான வழி என்பதை இதன் மூலம் அறியலாம்.

நபி (ஸல்) அவர்கள் விண்ணுலகப் பயணத்தின் போது சுவர்க்கத்தில் நுழைந்து செல்லும் வாய்ப்பை பெற்றார்கள். அவர்கள் செல்லும் வழியில் ஒருவர் நடந்து செல்லும் காலோசை சப்தத்தை கேட்டார்கள். இதுபற்றி வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் கேட்டபோது, 'இது உங்களின் நண்பர் பிலால் (ரழி) அவர்களின் காலோசை' என்று குறிப்பிட்டதாக நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

விண்ணுலகப் பயணம் முடிந்து வந்த நபி (ஸல்) அவர்கள், பிலால் (ரழி) அவர்களிடம் 'நான் சுவர்க்கம் சென்ற போது என்னை முந்தி நீ சென்ற காலோசை சப்தத்தை கேட்டேன். அந்த பாக்கியம் பெற நீ என்ன நற்செயல் செய்கிறாய்?' என்று வினவினார்கள். நான் எந்தவிதமான சிறப்பு செயலையும் செய்வதில்லை. ஆனால் நாள் முழுக்க 'வுழு'வோடு (அங்க சுத்தம்) இருப்பதை கடமையாக்கிக் கொண்டிருக்கிறேன். எப்போதும் தொழுவதற்கு தயாராகவே இருப்பேன். ஒருவேளை அது காரணமாக இருக்கலாம்' என்றார்கள்.

தொழுகைக்கு எப்போதும் தயாராக இருப்பதும் கூட சுவர்க்கம் செல்லும் சுலபமான வழியைச் சொல்லும்' என்பது இதன்மூலம் தெரிகிறது.

ஆகவே சுவர்க்கம் செல்ல மனித சக்திக்கு அப்பாற்பட்டு மிக கடுமையான முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்ற அவசியமே இல்லை. மிக சிறந்த மனிதாபிமான செயல்களின் மூலம் மிக உன்னதமான செயல்கள் முலம் சுவர்க்கத்தை எம்மால் பெற்றுக்கொள்ளலாம். அப்படிப்பட்ட நற்பாக்கியத்தை நம் அனைவருக்கும் வல்ல அல்லாஹ் அருள்பாலிக்கட்டும்.

**அபூ மதீஹா...**

# வெளிநாட்டு வேலைவாய்ப்புகள்: நான்கு ஆண்டுகளில் 7,32,000 பேர் பயணம்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தகவல்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நான்கு ஆண்டுகளில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக 7 இலட்சத்து 32 ஆயிரம் பேர், இலங்கையிலிருந்து சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

தகவலறியும் சட்டத்தின் கீழ் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குருநாகல் கிளை பணியகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கு இணங்க, இது தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கையிலேயே இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இத்தகவல்களுக்கு இணங்க இலங்கையர்கள் வீட்டுப் பணிப்பெண்களாகவும் தொழிலாளர்களாகவும் மின்சார கைத்தொழில் துறை வேலைவாய்ப்புக்காகவும் சாரதி உள்ளிட்ட ஏனைய தொழில்களுக்காகவும் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 15 பிரதேச அலுவலகங்கள் நாடளாவிய ரீதியில் காணப்படுகின்றனர்.

இந்த அலுவலகங்களின் ஆலோசனையைப் பெற்றுக் கொண்டே சட்ட ரீதியாக மேற்படி 07 இலட்சத்து 32 ஆயிரம் பேரும் வெளிநாடு சென்றுள்ளனர்.

# 11 மாதங்களில் 13 இலட்சம் சுற்றுலா பயணிகள் வருகை

## இந்தியாவிலிருந்தே அதிகளவு வருகை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 13 இலட்சத்து 34 ஆயிரத்து 345 உல்லாசப் பயணிகள் பல்வேறு நாடுகளிலுமிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இம்மாதத்தின் கடந்த 10 தினங்களில் 57 ஆயிரத்து 394 உல்லாசப் பிரயாணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.அவர்களில் பெரும்பாலான உல்லாசப்பயணிகள் இந்தியாவிலிருந்தே வந்துள்ளனர்.அங்கிருந்து 11, 442 பேர் நாட்டுக்கு வந்துள்ளனர்.

ரஷ்யாவிலிருந்து 8,004, பிரிட்டனிலிருந்து 5,991, ஜெர்மனியிலிருந்து 5,336, சீனாவிலிருந்து 2,894 பேரும் கடந்த 10 தினங்களில் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய பலன்கள்


## ( 15. 12. 2023 )

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)






**மேஷம்:**
போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். புனித பயணங்கள் அதிகரிக்கும்.



**ரிஷபம்:**
ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சியில் வெற்றி கிடைக்கும்.



**மிதுனம்:**
மனச்சோர்வு அதிகரிக்கும். எளிதில் முடிக்கக்கூடிய காரியங்கள் கூட மலைப்பாக தோன்றும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.




**கடகம்:**
தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபார போட்டிகள் அதிகரிக்கும் அதை சமாளிப்பீர்கள். குடும்பத்திற்காக அதிகம் செலவிட நேரிடும்.




**சிம்மம்:**
எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும்.



**கன்னி:**
தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் செயற்படுவீர்கள். தர வரவு திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் அதிகரிக்கும்.




**துலாம்:**
நினைத்தது நிறைவேறும். நிகழ்கால தேவைகள் பூர்த்தியாகும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும்.



**விருச்சிகம்:**
தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.



**தனுசு:**
ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை தேவை. அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் குறைவாகவே கிடைக்கும்.



**மகரம்:**
உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். கடன் சுமை குறையும். கவலைகள் அகலும்.



**கும்பம்:**
லாபமும் விரையமும் சம அளவில் இருக்கும். செலவிற்கு முன்னதாகவே வரவு வந்து சேரும்.



**மீனம்:**
அதிக விரயங்கள் ஏற்படலாம். திடீர் திடீரென மாற்றங்களும் எதையும் அரைகுறையாக செய்து அவதிப்படும் சூழ்நிலையும் உண்டு.

# மதீனாவிலிருந்து 15 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி




குருநாகல்/கிரி/ சியம்பளாகஸ்கொட்டுவ மதீனா தேசிய பாடசாலையிலிருந்து இவ்வருடம் (2023) தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றியோரில் 15 பேர் சித்தியடைந்துள்ளனர். இவர்களில், ஐந்து மாணவர்களும், பத்து மாணவிகளும் உள்ளடங்குவதாக அதிபர் எஸ்.எம். ஹைதர் அலி தெரிவித்துள்ளார்.

ஏ.எஸ். அபாப் மரியம் 178, ஏ.ஏ.எம். ஆகில் 170, எம்.ஜே. அஸ்மா 162, எம். ஐ. இப்ரா மரியம் 161, எம்.ஐ. ஹயா ஷரப் 160, எம். ஆர். லீனா 159, எம்.எப். அஹமட் 158, எம்.ஐ.எப். இமானி 155, எம்.ஐ.எப். சவீனி 154, ஏ. ஆதில் அஹமட் 153, எம். ஏ.எப். ஹனா 151, எஸ். எம். ஹாமித் 148, எம். ஏ.எப். அம்ரா 147, எஸ். எம்.எப். முஸ்கா 147, எம்.எஸ்.என். செஸாத் 147 ஆகிய மாணவ மாணவிகள் வெட்டுப்புள்ளி மட்டத்தை அடைந்துள்ளதாக அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

வகுப்பாசிரியைகளான எஸ்.எல். நிலுரபர், எஸ். பீ.எஸ். மஸீதா, எம். எச்.எப். கரீமா, எஸ். சாந்தி ஆகியோரின் வழிகாட்டலில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ள இம்மாணவ மாணவிகள், இப்பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாகவும் அதிபர் தெரிவித்தார்.

## கைவிடப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள்...

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் அரசாங்கத்தின் ஸ்திர நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக் கடனுக்கான அனுமதி கிடைத்தமை முன்னோக்கிச் செல்வதற்கு வலுவாக அமைந்துள்ளது.அதனைத் தொடர்ந்து உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் நிதி உதவிகளும் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

இந்த கடனுக்கான அனுமதி கிடைக்காது என்று போலிப் பிரசாரங்கள் செய்யப்பட்டமை கவலைக்கிடமானது.

சரிவடைந்த நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டமைத்து முன்னேற்றிச் செல்ல சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவதைத் தவிர வேறு வழிமுறைகள் எவையும் இருக்கவில்லை. இந்நிலையில் ஏனைய கடன் வழங்குநர்கள் சர்வதேச நாணய நிதியத்தின் வரைவுக்குள் இலங்கை எவ்வாறு செயற்பட போகிறது என்பது தொடர்பிலேயே அவதானம் செலுத்துகின்றனர். இவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் போது, நாட்டு மக்கள் நெருக்கடிக்குள்ளாகின்றனர் என்பதையும் நாம் கருத்தில் கொள்வோம்.

இருப்பினும் தற்போதைய சூழ்நிலையில் பிரசித்தமான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது. நெருக்கடிக்கு முகம் கொடுத்த காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமைத்துவத்தையும், பாராளுமன்றத்தின் ஒத்துழைப்பையும் நாட்டு மக்களின் பொறுமையான அணுகுமுறையையும் நன்றியுடன் நினைவுகூற வேண்டும்.

எவ்வாறாயினும் தற்போது வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அரசாங்கத்தின் செயற்பாடுகளை வலுவாக முன்னெடுத்துச் செல்ல முடியும். அதனை விடுத்து அரசியல் ரீதியான பார்வையினால் எதனையும் சாதிக்க முடியாது.

## பௌத்த சிங்கள நாடு...

பன்மைத்துவ நாடு என்ற அடிப்படையே உங்கள் நடவடிக்கைக்கு ஆரம்ப புள்ளியாக இருக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற, சிறந்த இலங்கைக்கான சங்க (பௌத்த) மன்றம், உலகத் தமிழர் பேரவை ஆகிய அமைப்புகளுடனான சந்திப்பிலேயே, மனோ கணேசன் எம்.பி கூறியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், ஏ.எச்.எம் பௌசி, திகாம்பரம், வேலுகுமார், உதயகுமார், தௌபீக் ஆகியோரும் கலந்து கொண்ட இந்நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மனோ எம்பி மேலும் கூறியதாவது,

சிங்களபௌத்த நாடு என்ற சிந்தனை, இலங்கையில் நிரந்தர அமைதி, வளர்ச்சி, மகிழ்ச்சி ஏற்படத் தடையாக உள்ளதென சந்திப்பில் கலந்து கொண்ட தேரர்களிடம் கூறினேன். அதேவேளை இந்நாட்டின் இன்னொரு பிரதேசத்தில் இது தமிழருக்கு மட்டுமேயான தனித் தமிழ்நாடு என்ற சிந்தனையும் மறைய வேண்டுமென சந்திப்பில் கலந்துக்கொண்ட உலகத் தமிழர் பேரவை அங்கத்தவர்களிடம் கூறினேன்.

உங்களது இந்த முயற்சியை நாம் வரவேற்கிறோம். அரசியல்வாதிகளை, அரசியல் கட்சிகளை விலக்கி வைத்து விட்டு இந்த முயற்சியில் ஈடுபடுவது சரிதான். முதல் கட்டத்தை வெற்றிகரமாக கடந்து விட்டால், அடுத்த கட்டத்தில் அது அரசியல் கட்சிகளிடம்தான் வரவேண்டும். பாராளுமன்றத்தில்தான் இன்றைய சட்டங்கள் திருத்தப்பட முடியும். புதிய சட்டங்கள் உருவாக்கப்பட முடியும். ஆகவே அது வரும்போது வரட்டும்.

ஆனால், இலங்கை ஒரு பன்மைத்துவ நாடு என்ற அடிப்படையே உங்கள் நடவடிக்கைக்கு ஆரம்ப புள்ளியாக இருக்க வேண்டும்.

இந்த அடிப்படை ஆரம்ப புள்ளியாக ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் இந்த முயற்சிபயனற்றதாகி விடும் என்றார்.

“76 விகிதம் சீனர்களை கொண்ட சிங்கப்பூர், அரசியல் சட்டப்படி பன்மைத்துவத்தை கொண்டாட முடியும் என்றால், ஏன் இலங்கையில் எம்மால் அதை கொண்டாட முடியாது?” இந்த கேள்வியை தேரர்களை நோக்கி நான் எழுப்பவில்லை. ஏனெனில் இம்முயற்சி வெற்றி பெறுவது பெருமளவில் அவர்கள் தரப்பில்தான் உள்ளது. இது அபிப்பிராயம்.

## SLPP தேசிய மாநாடு...

15ஆம் திகதி நடைபெறவுள்ளது. கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறவுள்ளதுடன், அக்கட்சியின் ஸ்தாபகரும் தேசிய அமைப்பாளருமான முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர்கள் மற்றும் அனைத்து சகோதர கட்சிகளின் தலைவர்கள், கட்சி உறுப்பினர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களின் தலைவர்களுக்கு அதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன் அக்கட்சிகளின் ஆதரவாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கட்சியின் எதிர்கால திட்டங்கள் மற்றும் நாட்டை முன்கொண்டுசெல்லும் வேலைத்திட்டங்களுக்கு பொதுஜன பெரமுனவின் பங்களிப்பு தொடர்பிலும் இங்கு விடயங்கள் வெளியிடப்படவுள்ளன.

## 107 கிலோ போதைப்பொருள்...

செய்யப்பட்டது. வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட அவர்களுக்கு கடந்த ஒக்டோபர் 12 ஆம் திகதி ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

இவ்வழக்கின் தீர்ப்பையடுத்து, மேற்படி ஹெரோயினை அழித்துவிடுமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அதன்படி மேற்படி ஹெரோயின் மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்திலிருந்து புத்தளத்திலுள்ள சீமெந்து தொழிற்சாலைக்கு நேற்று எடுத்துச் செல்லப்பட்டது.

வழக்கு நடவடிக்கைகள் முடிவடைவதற்கு முன்பதாக இரசாயன பகுப்பாய்வு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டதையடுத்து அந்த போதைப் பொருளை அழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

தெற்காசியாவில் கைப்பற்றப்பட்ட பெருமளவு கொகெயின் போதைப் பொருளென கருதப்படும் 928 கிலோ 229கிராம் வரலாற்றில் பகிரங்கமாக முதன்முறை 2018 ஜனவரி 15 ஆம் திகதி கைப்பற்றப்பட்டது.

அவ்வேளையில் இதன் சந்தைப் பெறுமதி 1,400 மில்லியன் ரூபாவாகும். இவை, அன்றைய பொலிஸ் போதைப்பிரிவு ஒழிப்பு பணிப்பாளராக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கமல் சில்வாவுக்கு கிடைத்த தகவலின் பேரில் கைப்பற்றப்பட்டிருந்தன.

## வடிவேல் சுரேஸ் MPக்கு...

மலையக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை ஒட்டுமொத்த மலையக மக்களுக்கும் பெருமையளிக்கும் விடயமாகும்.

வடிவேல் சுரேஷ், தனது அரசியல் வாழ்க்கையை இலங்கை தொழிலாளர் காங்கிரசில் ஆரம்பித்து, மறைந்த தலைவர்களான அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரின் பாசறையில் வளர்ந்தவர். மலையகத்தில் மிக முக்கியமான தொழிற்சங்கமான இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்து இன்று ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளமை அவரது கடின உழைப்புக்கு கிடைத்துள்ள அங்கீகாரமாக கருதப்படுகிறது.

அவருடைய இப்பதவி காலத்தில் மலையக மக்களுக்கு பல்வேறுபட்ட வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு வாழ்த்துவதாகவும் ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

## ருமேனியாவுக்கு அனுப்புவதாக...

பிரதேசத்தில் வசித்து வருகிறார். மித்தெனிய பிரதேசத்தில் வசிக்கும் பெண்ணிடம் ருமேனியாவில் வேலை வாங்கி தருவதாக கூறிய இவ்வதிகாரி, 05 இலட்சம் ரூபாவை அப்பெண்ணிடமிருந்து பெற்றுள்ளார்.

எனினும், வேலை வாய்ப்பு வழங்கப்படாததால் பணியகத்தின் புலனாய்வுப் பிரிவில் அப்பெண் முறைப்பாடு செய்தார்.

இதையடுத்து நேற்று முன்தினம் (13) இவ்வதிகாரி கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை நுகேகொட மஜிஸ்திரேட் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது, 05 இலட்சம் ரூபா பெறுமதியான 02 சரீரப் பிணை மற்றும் 10,000 ரூபா ரொக்கப் பிணையில் விடுவிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## வற் வரி அதிகரிப்பு...

ஜனவரியில் வரி அதிகரிக்கப்படவுள்ளதால்,

விரும்பியோ, விரும்பாமலோ லிற்றோ எரிவாயுவின் விலைகளை அதிகரிக்க நேரிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் சமையல் எரிவாயுவின் விலைகள் குறைவடையும் போது உள்நாட்டிலும் அதன் விலைகளை குறைப்பதற்கு லிற்றோ கேஸ் நிறுவனம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வந்தது. அந்த வகையில் அரசாங்கத்தின் 18 வீத வற் வரி அதிகரிப்பால்,இதன் விலைகளிலும் அதிகரிப்பை மேற்கொள்ள நேரிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 2024 இல், ஏற்படவுள்ள கடும்வரட்சி... (03 ஆம் பக்கத் தொடர்)

பஞ்சத்தால் பாதிக்கப்படுவர்.

பொருளாதார நெருக்கடி மற்றும் காலநிலை மாற்றத்தால் இந்நிலையை நிவர்த்தி செய்வது மிகக்கடினமாக இருக்கும் என்றும் இந்த நிகழ்வில் கூறப்பட்டது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால், உணவுப் பொருட்களின் விலை உயர்ந்து நுண்ணூட்டச் சத்து இடைவெளி அதிகரித்தும் வருகிறது.

## IMF கடனுதவி;...

பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்புக்கான இலங்கையின் பாதைக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும்." என்றும் தூதுவர் ஜூலி சங் கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் இரண்டாம் தவணை கொடுப்பனவாக இலங்கைக்கு 337 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது. இலங்கைக்கான நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை, கடந்த மார்ச் 20இல், அனுமதி வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டனின் இளவரசி Anne...

அவருடன் அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் டிம் லாரன்ஸும் (*Vice Admiral Sir Timothy James Hamilton Laurence*) வருகை தரவுள்ளார்.

ஐக்கிய இராச்சியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவுடன் தொடர்புடைய நிகழ்வுகளில் இவர் பங்கேற்றுள்ளார்.இதற்கான அழைப்பு அரசாங்கத்தால் விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கிணங்கவே, தனது கணவருடன் இளவரசி இலங்கை வரவுள்ளார்.

## ஆறு தமிழக மீனவர்கள்...

இவர்களை கைது செய்தனர். கைதான தமிழக மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச்செல்லப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.விசாரணையின் பின்னர், நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் ஊடாக, ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் இவர்கள் ஒப்படைக்கப்படுவர்.

## 20,000 கிலோ பெரிய வெங்காயம்...

சீதுவை லியனகேமுள்ள பகுதியில் பொருட்களை களஞ்சியப்படுத்தும் மத்திய நிலையத்தில் இவை, பதுக்கிவைக்கப்பட்டிருந்தன. மூன்று கொள்கலன்களில் சூசகமாக இந்த வெங்காயம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. பொதுச்சுகாதார அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலே இவை கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டன. இவை, விற்பனைக்காக சந்தைக்கு கொண்டுவரப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சமூக வலைத்தளங்களுக்கு...

தொலைநகல் இலக்கத்தினூடாகவும் முறைபாடளிக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ccid.religious@police.gov.lk* என்ற மின்னஞ்சல் வழியாகவும் முறைபாடுகளை வழங்க முடியுமென்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## லெபனான் பிரஜையின் 14,000...

கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர் தனது தாயின் வைத்திய சிகிச்சைக்காக தாயுடன் ஓமான் ஏர்லைன்ஸ் விமானத்தின் மூலம் புதன்கிழமை (13) காலை 7.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இரவு நேரமாக இருந்ததால் சகலரும் தூக்கத்திலிருந்த வேளையில் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. லெபனான் வர்த்தகரின் பயணப் பையை திறந்து 50 இலட்சம் ரூபா பெறுமதியான 14,000 அமெரிக்க டொலர்களை சீனப் பிரஜை திருடியுள்ளார்.

இதனை அறியாத வர்த்தகர் விமானத்திலிருந்து இறங்கி கட்டுநாயக்க விமான நிலைய முனையத்தில் அமெரிக்க டொலர்களை இலங்கை பணத்துக்கு வங்கியில் மாற்ற முற்பட்ட போதே பணம் திருடப்பட்டமை தெரியவந்தது. இது தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கியதையடுத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

தலைமறைவாகியுள்ள சீன பிரஜை தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கையில் முதலீட்டை... (03 ஆம் பக்கத் தொடர்)

பிக்கைக்கு நன்றி தெரிவித்த பிரதமர், பொருளாதாரத்தை புத்துயிர் பெறச்செய்வதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க பரிஸ் கழகத்தின் உறுப்பினர் என்ற முறையில் வழங்கிய ஆதரவை நினைவு கூர்ந்தார்.

கொள்கலன் ஊக்குவிப்பு மையமாக இலங்கையின் கப்பல் போக்குவரத்தில் *MAERSK* இன் செயற்பாடுகளுடன் *SAGT* ஐ விரிவுபடுத்துவதற்கான முயற்சி குறித்தும் அவர்கள் கலந்துரையாடினர். இந்நிகழ்வில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க மற்றும் டென்மார்க் தூதரக அதிகாரி ருச்சி டி சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.




# மலையக மக்களுக்கு பத்தாண்டு கால கிராமப்புற சமூக மேம்பாட்டுத் திட்டம்



மலையகப் பிரதேசங்களில் வாழும் மக்களின் பொதுக் கட்டமைப்புகளை மேம்படுத்தி அவர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை மேம்படுத்துவதற்காக மலையக தசாப்தம் எனப்படும் பத்தாண்டு கால கிராமப்புற மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டம் அடுத்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

காலனித்துவ ஆட்சியின் போது ஏற்பட்ட பின்னடைவுகள் உட்பட பல்வேறு காரணங்களால் மலையகப் பகுதிகளில் பொது உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளில் வளர்ச்சி ஏற்படவில்லை. மலையகப் பிரதேசங்களில் பெரும்பான்மையினராக தமிழர்களே வாழ்கின்றனர். வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதார அபிவிருத்தி கிராமப்புற அபிவிருத்தி மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் உட்பட பல அபிவிருத்தித் திட்டங்களை ஒன்றிணைத்து மேற்கொள்வதன் மூலம் அப்பிரதேச மக்களின் வாழ்வை மேம்படுத்த முடியும். அதற்கு விரைவான மற்றும் திட்டமிடப்பட்ட அணுகுமுறையை அரசாங்கம் மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளது.

அதன்படி, இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் மலையக தசாப்தத்தின் பத்தாண்டு பல்நோக்கு கிராமிய மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டத்திற்காக 10,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, காலி, களுத்துறை, பதுளை மற்றும் குருநாகல் உள்ளிட்ட 10 மாவட்டங்களிலுள்ள 89 பிரதேச செயலகப் பிரிவுகளில் மலையக தசாப்தம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அமைச்சரவையின் ஒப்புதலுடன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களுக்கு திட்டத் தேர்வு அளவுகோல் மற்றும் செயல்பாட்டு மாதிரி குறித்து தெரிவிக்கப்படும்.

இத்திட்டத்திற்கான பிரதேச மற்றும் மாவட்ட குழுக்களின் இணக்கப்பாடு கிடைத்தவுடன் மாவட்ட செயலாளர்களின் பூரண ஈடுபாட்டுடனும் ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் பிரதேச அலுவலகத்தின் பூரண ஆதரவுடனும் கூட்டு வேலைத்திட்டமாக நடைமுறைப்படுத்தப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபையானது மலையக பிரதேசங்களின் அபிவிருத்திக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. ஆனால் பின்னர் இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையானது 2013 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட திவினகும அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைக்கப்பட்டது. அதனால், மலையகம் உள்ளிட்ட மேட்டு நிலப்பகுதிகளின் வளர்ச்சியில் எதிர்மறையான தாக்கம் ஏற்பட்டது. அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மலையக தசாப்த திட்டத்தின் ஊடாக மலையக அபிவிருத்தியில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளை தீர்க்க முடியும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.



அக்கரப்பத்தனை பிரதேச சபையினால் அக்கரப்பத்தனை ஹோல்புரூக் சிங்களக் கல்லூரி மாணவர்களுக்கு கழிவு முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் மற்றும் முறையற்ற விதத்தில் கழிவுகள் அகற்றப்படுவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் தொடர்பில் தெளிவுப்படுத்தும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் (13) நடைபெற்றது.

(தலவாக்கலை குறூப் நிருபர்)

## மாகியா காட்டுமாரியம்மன் திருக்கோயிலில் மகர ஜோதி பெருவிழா

கண்டி, மாகியாவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ காட்டுமாரியம்மன் திருக்கோயிலில் மாகியாவ

யப்பா சேவா சங்கம் நடாத்தும் மகர ஜோதி பெருவிழா எதிர்வரும் 30.12.2023ஆம் திகதி சனிக்கிழமை காலை 06.00 மணிக்கு மகா கணபதி ஓமத்துடன் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து விஷேட அபிஷேகம், சக்தி பூஜை என்பன நடைபெறும். அன்று மாலை 06.00 மணிக்கு சத்தியமான பொன் 18ம் படி பூஜையும், விஷேட பஜனையும் வழிபாடும் நடைபெறும்.

இப்பூஜைகளில் அனைத்து மெய்யன்பர்களும் கலந்து கொண்டு ஐயன் ஐயப்ப சுவாமிகளின் திருவருள் கடாட்சத்தை பெற்றுய்யுமாறு அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

## கொழும்பு – பதுளை வீதியில் பாரவூர்திகள் செல்ல தடை



(ஊவா சுழற்சி நிருபர்)

கொழும்பு பதுளை வீதியில் ஹாலிஎல்ல உடுவர பிரதேசத்தில் தொடர்ந்து மண்சரிவு அனர்த்தம் நிலவி வருவதால் அப்பகுதியில் பாரவூர்திகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை மாவட்டத்தில் தொடர்ந்தும் அடை மழை பெய்து வருவதால் கொழும்பு – பதுளை உடுவர ஹாலிஎல பிரதேசத்தில் மண்சரிவும் வீதி தாழிறக்கமும் ஏற்பட்டுள்ளது.

இதனால் இவ்வீதியில் செல்லும் கனரக வாகனங்களை உடனடியாக தடை செய்யுமாறும் நேற்று பதுளை கச்சேரியில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பதுளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான மேஜர் சுதர்சன தெனிபிட்டிய தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதனால் பதுளை, பண்டாரவளை, கொழும்பு போன்ற இடங்களுக்குச் செல்லும் கனரக வாகனங்கள் யாவும் ஹாலிஎல அட்டம்பட்டி வீதியை பயன்படுத்துமாறு பதுளை போக்குவரத்து பொலிஸார் சாரதிகளை பணித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க அவசர தேவைகளுக்கென செல்லும் வாகனங்கள் மற்றும் சிறிய ரக வாகனங்கள் மட்டுமே இவ்வீதியை பயன்படுத்த முடியும் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



மாத்தளை சாரிபுத்ரய ஆரம்பபிரிவு பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே கலந்துகொண்டு மாணவியொருவருக்கு பரிசில்களை வழங்குவதையும், அருகில் பாடசாலை அதிபர், மாத்தளை பிரதேச சபை முன்னாள் தலைவர் கபில பண்டார ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

## சிசுவின் சடலம் மீட்பு


(அக்குறணை குறூப் நிருபர்)

மஹியங்கனை தெஹியத்தகண்டி பிரதான பாதை அருகில் கைவிடப்பட்ட நிலையில் சிசுவொன்றின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. பாதையில் பயணித்த ஒருவர் சடலத்தைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்தே பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று சடலத்தை மீட்டுள்ளனர்.

கறுப்பு நிற கைப்பை ஒன்று அருகில் காணப்பட்டதுடன் சடலம் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதாக கிராந்துருகோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

தாய் குழந்தையை அவ்விடத்தில் கைவிட்டுச் சென்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

**திஹாரிய லேக்ஹவுஸ் பத்திரிகையின் விற்பனைப் பிரதிநிதியின் அன்புத் தந்தை காலமானார்**



திஹாரிய லேக்ஹவுஸ் பத்திரிகையின் விற்பனைப் பிரதிநிதி M.M.பவுஸ் மொஹமட் அவர்களின் அன்புத் தந்தையான **M.T.M.மொஹியதீன்** அவர்கள் 2023.12.12ம் திகதி காலமானார் (அன்னார் கலகெடிஹேன விற்பனை பிரதிநிதி திருமதி. உம்மு சீனியாவின் மாமனாரும் ஆவார்)

ஜனாஸா நல்லடக்கம் 2023.12.13 புதன் மாலை திஹாரிய கொடெல்ல மஸ்ஜிதுல் ரவுலா பள்ளிவாசல் மையவாடியில் இடம் பெற்றது.

**சந்தைப்படுத்தல் திணைக்களம்**
**லேக்ஹவுஸ்**

## பதக்கங்களை குவித்த கம்பளை ஸாஹிரா தேசியக் கல்லூரி மாணவர்கள்



விளையாட்டமைச்சின் 68வது விளையாட்டாக பதிவு செய்யப்பட்டுள்ள பிரான்சு சவாட் கிக் பாக்ஸிங் விளையாட்டானது கம்பளை ஸாஹிரா தேசியக் கல்லூரியில் 2021ஆம் ஆண்டு கல்லூரியின் பழைய மாணவ சங்கத்தின் விளையாட்டு துறைத் தலைவர் எம். என்.எம். நிம்ஷாட்டின் வேண்டுகோளுக்கிணங்க முன்னாள் அதிபர் ஏ.எல். எஸ். சிராஜினால் ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கு பொறுப்பாசிரியராக பிரதி அதிபர் டீ.எம். எப். மூவி நியமிக்கப்பட்டு விளையாட்டமைச்சின் தேசிய சம்மேளனத்தின் உப தலைவர் டீ.எம். நாவ்ஷாத் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டு 10 மாணவர்களுடன் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. இதனைதொடர்ந்து பல சர்வதேச தேசிய மட்ட போட்டிகளில் பங்குபற்றி சாதனை படைத்தனர்.

அதேபோல் இம்முறை நாவலப்பிட்டி ஜயதிலக்க மைதானத்தில் நடைபெற்ற அகில இலங்கை மட்டத்திலான சுப பைட்டர் போட்டியில் பங்குபற்றி 29 தங்கப் பதக்கத்தையும், 08 வெள்ளி பதக்கத்தையும், 01 வெண்கல பதக்கத்தையும் பெற்று முதலிடத்தை தனதாக்கி கொண்டனர்.

கம்பளை ஸாஹிரா கல்லூரி அதிபர் ஐ. எ. எம். அப்சான் மற்றும் நிர்வாகம் மற்றும் கம்பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லக்சிறி பெர்ணான்டோ தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.



கண்டி, உதவி இந்தியத் தூதுவராலயம் ஆரம்பிக்கப்பட்டு நூறு வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அதில் ஒரு அங்கமாக தோட்டப் புறப்பாடசாலை மாணவர்களுக்கு பல்வேறு பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டன. தெல்தெனிய கல்வி வலயத்தைச், சேர்ந்த குமரன் ஆரம்ப வித்தியாலயத்துக்கு சென்ற இந்திய உதவித் தூதுவர் டாக்டர் எஸ் ஆதிரா தலைமையிலான குழுவினர், மாணவர்களுக்கு பல்வேறு பரிசுப்பொருட்களை வழங்கினர்.

(அக்குறணை குறூப் நிருபர்)

**சேல் சேல் சேல்**

**கையிருப்பை விற்றுத் தீர்த்தல்**

| | | | |
|---|---|---|---|
| 60' பொலியெஸ்டர் துணி | | | |
| Printed & Plain | 05 மீற்றர் | ரூபா | 2,000.00 |
| 60' லேஸ் | 05 மீற்றர் | ரூபா | 2,000.00 |
| வெள்ளை சேர்ட் பட்டன் | 01 கி.கி. | ரூபா | 250.00 |
| புளொட்டர் பேப்பர் | 01 கி.கி. | ரூபா | 1,000.00 |
| பேப்பர் இன்டர்லைனிங் | | | |
| கறுப்பு வெள்ளை | 01 யார் | ரூபா | 100.00 |
| Boys Shirt | 01 துண்டு | ரூபா | 250.00 |

சில்லறை மற்றும் மொத்த விற்பனை அனைத்து வாடிக்கையாளர்களும் வரவேற்கப்படுகின்றனர்.

**"விலைக்குறைப்பு சேல்" இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு**

**2023 டிசம்பர் 11ஆம் திகதி முதல்**
**2023 டிசம்பர் 21ஆம் திகதி வரை**

**எமது தொழிற்சாலை:**
**ஜனதா கார்மன்ட்ஸ் (பிரைவட்) லிமிடெட்,**
**இல. 17,**
**விவேகானந்த மேடு, கொழும்பு-13.**

**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

**வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் (CEDPL)**

**கலைமாணி, வியாபார நிருவாகமாணி மற்றும் வர்த்தகமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்புகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளல் – 2021 / 2022**

தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் பின்வரும் பட்டப்படிப்புகளுக்கு வெளிவாரி மாணவர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 16.01.2024 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

- கலைமாணி (Bachelor of Arts) - தமிழ் மொழி மூலம் மட்டும்
- வியாபார நிருவாகமாணி (Bachelor of Business Administration) - தமிழ் மற்றும் ஆங்கிலமொழி மூலம்
- வர்த்தகமாணி (Bachelor of Commerce) - தமிழ் மற்றும் ஆங்கிலமொழி மூலம்

விண்ணப்பப்படிவங்கள் மற்றும் மேலதிக தகவல்களை பல்கலைக்கழக இணையத்தளமான https://www.seu.ac.lk/cedpl/ ல் பெற்றுக்கொள்ள முடியும்.

**பதிவாளர்**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**
**16.12.2023**

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2023.12.13
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5327 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,200,776.00
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 8 6 1 0 2 5

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3569 — சீட்டிழுப்பு திகதி 2023.12.13 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 70,317,375.60
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 15 35 36 79 — விசேட எழுத்து H — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 30691

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1675 — 2023.12.13 — 44253 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 417,733,312.00
ஆங்கில எழுத்து G — சுப்பர் இலக்கம் 07 — வெற்றி இலக்கங்கள் 11 45 49 73
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

லக்கி 7 VIP — திகதி 2023.12.13 — சீட்டிழுப்பு இலக்கம் 0153
ஆங்கில எழுத்து S — L7 எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 2 0 1 6 8 9
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.21,470,474.28

ராசி சுப பலன் — திகதி 2023.12.13 — சீட்டிழுப்பு இலக்கம் 636 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,538,808.20
வெற்றி இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 32 34 39 48 — தனயோக இலக்கம் 33572 — நாளுக்கான விதி எண் 12

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1357 — 2023.12.13 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 124,961,242.80
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 16 22 40 82 — விசேட எழுத்து B — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 47143

# ஓங்கு புகழோடு பவளம் சூடும் கல்லூரித் தாய்

# எனசல்கொல்ல மத்திய கல்லூரி



ஈழத் திருநாட்டின் மத்திய மாகாண மலையகத்து மண்ணில் அருள்வாக்கி மலை மடியில் கண்டி மாவட்டம் தெல்தோட்டைப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட வனஹுபுவ கிராம சேவைப் பிரிவில் தலைநிமிர்ந்து நிற்கும் கல்விக் கூடமே எனசல்கொல்ல மத்திய கல்லூரியாகும்.

தன் மடி தவழ்ந்த ஆயிரக் கணக்கானவர்களை அறிஞர்களாக்கி தரணியெலாம் மிளிரச் செய்து கற்பவனாக, கற்பிப்பவனாக, கற்றலுக்கு உதவுபவனாக ஆக்கிவிட்ட பெருமையில் எழுபத்தைந்தாவது அகவையில் காலடி வைத்து பவள விழாக் காணும் முத்தாக ஜொலிக்கின்றாள் எம் கல்லூரித் தாய்.

இற்றைக்கு எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தெல்தோட்டைப் பிரதேசம் சில நூறு குடும்பங்களை உடையதாகவே இருந்ததெனக் கூறப்படுகின்றது. அக்குடும்பங்களில் கற்றுத் தேர்ந்தவர்கள் இருக்கவில்லை. ஏனெனில், கல்விக் கூடங்களோ, கற்பதற்கான வசதிகளோ அன்றிருக்கவில்லை.

முதலாவது அதிபரான திரு. எம். இராசதுறை ஐயா (யாழ்ப்பாணம்) அவர்களைத் தொடர்ந்து வி. வீரகத்தி பிள்ளை, ஏ.கே. சின்னத்தம்பி,

சிவசுப்ரமணியம், பி. எம். காசிம் (உகுரஸ்ஸபிடி), எம். என். ஜெய்னுலாப்தீன் (கல்ஹின்ன), எஸ்.ஐ.எம். நிஸார், எஸ். எம். ஏ. ஹஸன் (ஹீரஸ்ஸகல), ஜி. எஸ். எம். இஸ்மாயில் (உடதலவின்ன), ஏ. கே. எஸ். அலி (கடுகன்னாவ), ஏ.எல்.ஏ. கபூர் (நாவலபிடிய), ஜே. எம். தாஹிர் (உடதலவின்ன), ஜனாப் கே. எம். கால்தீன் (ரலிமங்கொட), எம். ஏ. அஸீஸ் (உடதலவின்ன), எம். எம். அப்பாஸ் (வனஹுபுவ), அப்துல் அஹத் (அட்டாளைச்சேனை), எஸ். ஸாம் நிஸாம் (பத்தாம்பள்ளி), ஏ.எம்.ஏ. கபூர் (பள்ளேகம), எச்.எம்.எல்.

எம். ஸமூன் (கெலிஓய), எஸ். எம். ஹம்ஸாலெப்பை (தெல்தோட்டை), ஜனாபா எஸ்.எம். ஆபிதா (வனஹுபுவ), எம்.ஏ. சாலிஹீன் மௌலவி (வனஹுபுவ), எம். ஏ. ஸீ.எம். நௌஷாத் (பள்ளேகம), ஜனாபா. டி. ஹாஜர் உம்மா (வனஹுபுவ), ஜனாப் எம். ஜி. நயீமுல்லாஹ் (பள்ளேகம) ஆகியோர் உள்ளடங்களாக சுமார் 25 க்கும் மேற்பட்ட அதிபர்களால் உரமூட்டி, வளமூட்டி, தரமாக்கி வளர்க்கப்பட்டதே எம் தாய் எனசல்கொல்ல மத்தியகல்லூரியாகும்.

மேலும், 2012 ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தின் கல்விக் கொள்கையான ஆயிரம் பாடசாலைகள் வேலைத் திட்டத்தில் எமது கல்லூரியையும் உள்வாங்குவதற்கு பாரிய சவால்களுக்கு மத்தியில் பல்வேறு தரப்பினரின் உதவியுடன் முயற்சிகளை மேற்கொண்டார். அதன் விளைவாக எமது கல்லூரியும் அவ்வபிவிருத்தித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவரது காலம் எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் முக்கியமான காலகட்டமாகும். ஏனெனில், ஆயிரம் பாடசாலைகள் வேலைத் திட்டத்தில் கல்லூரி உள்வாங்கப்பட்டதனால், கல்லூரியின் ஒரே வளாகத்திற்குள் 1 – 5 வரை ஆரம்பப் பிரிவு எனவும் 6 13 வரை சிரேஷ்ட பிரிவு எனவும் இரு பாடசாலைகளாக பிரிக்கப்பட்டு 2013. 01 .02 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பப்பிரிவு அல்ஹிக்மா வித்தியாலயம் என்ற பெயரில் தனியாக இயங்கத் தொடங்கியது. தற்போது அது எனசல்கொல்ல ஆரம்பப் பாடசாலை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன் முதலாவது அதிபராக ஜனாபா எஸ்.எம். ஆபிதா பொறுப்பேற்றார். 613 வரையிலான வகுப்புகள் எனசல்கொல்ல மத்திய கல்லூரி என்ற பெயரிலேயே தொடர்ந்தது.

கல்லூரியின் பழைய மாணவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று 2013 மே 02 ஆம் திகதி உயர்தர விஞ்ஞானப் பிரிவை ஆரம்பித்து வைத்தார். இதற்கென அரும்பணியாற்றிய அப்போதைய அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

விஞ்ஞானத்துறை ஆரம்பிக்கப்பட்டது முதலாக இன்று வரை தெல்தோட்டை விஞ்ஞான செயற்றிட்டம் (DSP) என்ற பெயரில் பிரதேசத்தின் முஸ்லிம், தமிழ் மாணவர்களையும் ஒன்றிணைத்து கல்வி நடவடிக்கைகளை செயற்படுத்தி வருகின்றது. 2019 இல் அஸ்லிபா நஸ்ருல்லாஹ் என்ற மாணவி இதே கல்லூரியில் தரம் ஒன்று தொடக்கம் இறுதி வரை கல்வி கற்று மருத்துவத்துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட கல்லூரியின் முதல் மாணவி என்ற புகழ் நாமத்தை தனதாக்கிக் கொண்டார். இத்திட்டத்தில் இணைந்து கற்ற கொட்டியாகும்புர ருவைனா என்ற மாணவி 2018 இலும், பீலிக்கரை எம்.எஸ்.எம். ஆஸிப் என்ற மாணவன் 2019 இலும் மருத்துவத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கலைத்துறையில் உயர் மட்ட அடைவான சட்டத் துறையில் 2015 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெற்று இன்று (LLB, Attorney At Law) சட்டத்தரணியாக வெளியாகியிருக்கும் அஸ்மா பிந்த் முஸம்மில் என்ற மாணவி இக்கல்லூரியின் முதலாவது சட்டத்தரணி என்ற பெருமையை கல்லூரிக்கு ஈட்டித்தந்தவராவார். 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை எமது கல்லூரியின் ஆறு மாணவர்கள் பல்கலைக்கழக சட்ட பீடத்துக்குத் தெரிவாகியுள்ளமையும் இவர்களுள் மூன்று மாணவர்கள் இன்று சட்டத்தரணிகளாக வெளியாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எனசல்கொல்ல மத்திய கல்லூரி கல்வித் துறையுடன் இணைந்து இணைப்பாடவிதானத் துறையிலும் உயர் மட்ட அடைவுகளைப் பெற்றுவருகிறது. 2010 ஆம் ஆண்டு கல்லூரி மாணவன் ஏ.எச்.எம். அஸாருத்தீன் வலய மட்டத்தில் மெய்வல்லுநர் போட்டியில் 13 வயதின் கீழ் சிறந்த விளையாட்டு வீரனாக தெரிவு செய்யப்பட்டமை கல்லூரியில் பதியப்பட்ட ஒரு சாதனையாகும். 1996 ஆம் ஆண்டு எம்.இஸட். இக்ராம் என்ற மாணவன் மாகாண மட்ட பரிதி வீசல் போட்டியில் முதலிடம் பெற்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவானார். எமது கல்லூரி மாணவர்கள் கரப்பந்தாட்டத்தில் தேசிய மட்டம் வரை சென்றுள்ளதுடன் கிரிக்கெட், எல்லே ஆகியவற்றில் மாகாண மட்டம் வரை பங்குபற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் எமது கல்லூரியின் கரப்பந்து, கிரிக்கட் போட்டிகளுக்கு பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுவரும் ஜனாப் எம்.ஜீ. நூருல்லாஹ் ஆசிரியர் 2022 ஆம் ஆண்டின் மத்திய மாகாணத்தின் சிறந்த பயிற்றுவிப்பாளருக்கான விருதினை பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

மேலும், 2018 ஆம் ஆண்டு ஏ.ஆர்.எப். ரிஸானா ஆசிரியையும் 2019ஆம் ஆண்டு எம்.எம். மஸாஹிரா ஆசிரியையும் மத்திய மாகாண நல்லாசிரியருக்கான வித்தியா செம்மல் விருதினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனசல்கொல்ல மத்திய கல்லூரித் தாயே, நீ வெள்ளி, பொன், வைரங்களை ஆரமாக அணிந்து அழகுப் பெண்ணாய் வளர்ந்தாய். இனி உன் குழந்தைகள் நாம், பவளம் சூட்டி அழகு பார்க்கிறோம்.

அறிஞர் பெருமக்களை அள்ளி வழங்கிய அறிவுச் சுரங்கம் நீ, உன் வெற்றி நடையைப் பார்த்து பரவசமடையும் உன் சேய்கள் பலருக்கு உன் நூற்றாண்டைக் கண்டுகளிக்க வாய்ப்பின்றிப் போகலாம். தாயே, நீ பெற்ற பிள்ளைகளில் எத்தனையோ பேர் இன்று இல்லை. என்றாலும், நீ தலை நிமிர்ந்து நிற்கிறாய் என்றும் நீ சிரஞ்சீவியாய் இருந்த நூற்றாண்டில் மட்டுமன்றி பல சகாப்தங்கள் நீடூழி காலம் நிறைமதியாய் புகழோடு வாழ வாழத்துகின்றோம். வாழ்க பல்லாண்டு.

எழில்கொஞ்சும் மலையகத்தில் தெல்தோட்டைபிரதேசத்தில்எனசல்கொல்லகிராமத்தில் அமையப்பெற்ற எனசல் கொல்ல மத்திய கல்லூரியில் இருந்து ஆயிரம் பாடசாலை வேலைத்திட்டத்தில் 2013.01.02. ஆந்திகதி உதயமானதே அல்ஹிக்மா ஆரம்ப பாடசாலை யாகும்.

அது, 'எனசல்கொல்ல ஆரம்ப பாடசாலை' என 2022.08.15 ம் திகதி முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஒரு செடியில் மலர்ந்த இரு மலர்களாய் இவ்விரு பாடசாலைகளும் ஒரே எல்லைக்குள் இருந்து மிளிர்வது பெருமைக்குரிய விடயம்.

இப்பாடசாலையில் முதலாவது அதிபராக திருமதி எஸ்.எம். ஆபிதா ஆசிரியை வரலாற்றில் இடம்பிடித்தார். அவரைத் தொடர்ந்து இரண்டாவது அதிபராக எச்.எஸ்.ஓ. ரைஹானத்தும்மா கடமையாற்றினார்.

பத்து வருட காலத்தை நிறைவு செய்து பயணித்துக் கொண்டிருக்கும் இப்பாடசாலையின் ஆசிரியர்களாக எம்.ஆர். பஸீலா பேகம், ஏ.எல். தில்ஹவ்ஸ், ஏ.ஆர்.எப். ரியாஸா, எம்.எப்.எப். சிபானி, எம்.ஐ. பவாஸ் முஹம்மத், எம்.வை.எம். சிபான், எஸ்.எச்.யூ. ஸாபிரா, என்.எப். பஸ்லின், ஆர்.எப்.எப். சரூஹா, எம்.ஐ. நஜீலா, ஐ. ரிபாயா, எ.டபிள்யூ.பீ. ரஸீனா, எம்.ஏ.எம். ரியாஸ், எம்.ஐ. பரீனா இஸ்மி, எம்.ஏ.எப். ருஸ்தியா, ஏ.ஆர்.ஐ. யாகூப், எம்.என். தில்ஸாத் அஹமத், எம்.எம்.எப். ரஸானா ஆகியோர் பாடசாலையின் வளர்ச்சிக்கு பாடுபட்டு வருகின்றனர்.

மேலும், இப்பாடசாலையின் கட்டடமானது நீண்டகால பழமைவாய்ந்த கட்டடமாக இருக்கின்றது. அவ்வாறே, ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஏற்ற மகிழ்ச்சிகரமான கற்றல் சூழல் இல்லாத நிலையும் காணப்படுகின்றது. ஆசிரியர்களின் அயராத முயற்சியும், மாணவர்களின் திறமையும் பாடசாலைக் கல்வியிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்த அடைவுகளை பெற்றுவருவது பெருமைக்குரியதே.

மேலும், மாணவர்கள் கல்வியில் திறமைக் காட்டுவதற்கு எடுத்துக்காட்டாக தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து வருவதை நோக்கும் போது புலனாகின்றது.

அத்துடன், மீலாத் போட்டி, தமிழ்த் தினப் போட்டி, சிறுவர் மெய்வல்லுநர் போட்டி போன்ற இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் வலய, மாகாண மட்டங்களில் மாணவர்கள் வெற்றிகள் ஈட்டி வருவது குறிப்பிடத்தக்கது. தற்கால கல்விச் சிந்தனைக்கு அமைய தேவையான வளங்களுடன் மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலின் தேவையை கருத்தில் கொண்டு அதனை அடைந்து கொள்ளும் முயற்சியில் தற்போதைய பாடசாலை அதிபரான ஸீ.எம்.எப். சிமாராவின் தலைமையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் அயராத முயற்சியினால் சமூக நலன் விரும்பிகளின் உதவியுடன் காணியொன்று பெறப்பட்டுள்ளது. அதில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக பாடசாலையை நிர்மாணிக்கும் முயற்சியில் மேற்படி குழு ஈடுபட்டு வருகிறது.



கல்லூரி அதிபர் எம்.ஜி. நயீமுல்லாஹ்




## தெல்தோட்டை விஞ்ஞான செயற்றிட்டம் (DSP)

நீண்ட காலமாக எனசல்கொல்ல மத்தியக் கல்லூரியின் க.பொ.த உயர்தர விஞ்ஞானத் துறையை ஆரம்பிப்பதற்கான பல்வேறு முயற்சிகள் செய்யப்பட்டு வந்த நிலையில் மக/அத்தியா/சே/3 என்ற கடித இலக்கத்தின் படி 1990.10.05ம் திகதி மாகாண கல்வித் திணைக்களத்தினூடாக விஞ்ஞானத் துறைக்கான அனுமதி கிடைக்கப்பெற்றது. எனினும், அது கைகூடவில்லை.

கல்லூரியின் வரலாற்றில் முதன் முறையாக 2006ம் ஆண்டு ஆறு மாணவர்களைக் கொண்டு விஞ்ஞான வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் போதிய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இல்லாமை போன்ற காரணங்களால் வகுப்புகள் இடைநடுவே கைவிடப்பட்டன.

பின்னர் க.பொ.த. உயர் தரத்தில் விஞ்ஞானத் துறையை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு அல் ஹாஜ் ஜே.எம். பாரூக் அவர்களின் அனுசரணையில் இயங்கி வந்த எனசல்கொல்ல கல்வி அபிவிருத்தி சங்கம் (EEPA) 2008ம் ஆண்டு விஞ்ஞான முன்னேற்றத் திட்டம் (SPP) ஆரம்பிக்கப்பட்டது முதல் விஞ்ஞானத் துறைக்கான மாணவர்களை உருவாக்குவதற்கு விஷேட கணித, விஞ்ஞான, ஆங்கில வகுப்புக்களை நடத்தியது.

எமது கல்லூரியில் இருந்து விஞ்ஞான முன்னேற்றத் திட்டத்திற்கு (SPP) தெரிவு செய்யப்பட்ட 21 மாணவர்கள் தரம் ஏழில் இருந்து கணித, விஞ்ஞான பாடங்களில் மேலதிக வகுப்புகள் மூலம் கற்பிக்கப்பட்டனர். 2012ம் ஆண்டு அவர்கள் அனைவரும் 100 வீத சித்தியை பெற்று உயர்தர விஞ்ஞானத் துறைக்கு தகுதிபெற்றனர். இவர்களில் பத்து மாணவர்கள் கணிதம், விஞ்ஞானம் ஆகிய இரு பாடங்களிலும் A சித்தி பெற்றமை குறிப்பிடத்தக்கது.









பாடசாலை ஆசிரியர் குழாம்



ஆரம்ப பிரிவு ஆசிரியர் குழாம்

அதைத் தொடர்ந்து, அப்போதைய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பழைய மாணவர்ச் சங்க கொழும்புக் கிளை உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் போன்றோர் பாடசாலையிலும், கொழும்பிலும், கண்டியிலும் பல கூட்டங்களை நடாத்தி தெல்தோட்டை பிரதேசத்துக்கான ஒரு விஞ்ஞான செயற்திட்டத்தை உருவாக்கினர். இதற்கான நிதி தெல்தோட்டை மண்ணின் மைந்தர்கள் மூலம் திரட்டப்பட்டு தெல்தோட்டை விஞ்ஞானத் திட்டம் (SPP) நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

2013 இல் இருந்து 10 வருடமாக SPP வெற்றிகரமாக நடைபெற்றுவருகின்றது. SPP இல் கற்ற 64 மாணவர்களில் 46 மாணவர்கள் விஞ்ஞான, கணிதத் துறைகளில் பல்கலைக்கழகம், கல்வியியல் கல்லூரிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஏனையோர் கணித, விஞ்ஞானத்துறைகளோடு தொடர்பான பல்வேறு கற்கை நெறிகளில் பயில்கின்றனர். இதில் மூன்று மாணவர்கள் மருத்துவத் துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சாதனைப் படிகளில் கல்லூரியின் விளை–யாட்டுத் துறை

கல்லூரியின் நீண்டகால வரலாற்றில் விளையாட்டுத் துறையும் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. எம். ஜே. சுலைமான், கலந்தர் லெப்பே, உஸ்மான், ஏ. எம்.எம். இப்றாஹீம், எம்.எஸ். எம். பாரிஸ், எம். ஜி. நூருல்லாஹ் போன்ற விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்களின் வழிகாட்டலின் ஊடாக கல்லூரி காலத்திற்குக் காலம் பல வெற்றிகளைக் கண்டு வந்துள்ளது.

கல்லூரியின் விளையாட்டுத் துறைவளர்ச்சியானது 1957ம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து ஆரம்பமாகின்றது. இதன் போது சன்,மூன், ஸ்டார் எனப் பெயர்களைக் கொண்டு இல்ல விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. 1959ம் ஆண்டு முதன் முதலில் கண்டிபொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற வட்டார விளையாட்டுப் போட்டியில் எமது மாணவர்கள் கலந்து கொண்டார்கள். 1960ஆம் ஆண்டு காலத்தில் மேசைப் பந்து அறிமுகப்படுத்தப்பட்டாலும் இவ்விளையாட்டு கல்லூரியில் வழக்கொழிந்து போய்விட்டது. 1972ம் ஆண்டு விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட ஹேவாஹெட்ட பாராளுமன்ற உறுப்பினர் தென்னக்கோன் மூலம் மைதானப் புனரமைப்புக்காக 2000 ரூபா வழங்கப்பட்டது. கல்லூரியில் சபா, மர்வா,அரபா என்றும் ஜாயா, ஜின்னா, இக்பால் எனவும் சம்ஸ், கமர், நுஜூம் எனவும் இல்லங்களின் பெயர்கள் காலத்திற்குக் காலம் மாற்றமடைந்து வந்தன.

1995ம் ஆண்டு கல்லூரியின் கரப்பந்தாட்ட அணியினர் பிரதேசத்தின் முன்னணி அணியினர்களை தோற்கடித்து வெற்றியீட்டினர். 1996ம் ஆண்டு இக்ராம் என்ற மாணவன் மாகாண மட்ட பரிதிவீசல் போட்டியில் முதலிடம் பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவானார்.

2008 மற்றும் 2009 ம் ஆண்டுகளில் வலய மட்டப்போட்டிகளில் உயரம் பாய்தலில் ஆசாலிக், 800 ஓட்டப் போட்டியில் ஹரீஸ், நீளம் பாய்தல் போட்டியிலும், 100 ஓட்டப் போட்டியிலும் நதீர் ஆகியோர் மூன்றாம் இடங்களைப் பெற்றனர்.

2010ம் ஆண்டு 15 வயதின் கீழ் அணியினர் வலயமட்டத்தில் செம்பியனாக தெரிவாகி புதிய அத்தியாயம் ஒன்றை வொலிபோலில் தொடக்கிவைத்தனர். இன்றுவரை அது வெற்றி நடைபோடுகின்றது.

## எனசல்கொல்ல கல்வி முன்னேற்றச் சங்கம் (Enasalgolla Educational Progressive Association – EEPA)

எனசல்கொல்ல மத்திய கல்லூரியில், 'எனசல்கொல்ல கல்வி முன்னேற்றச் சங்கம்' என்ற அமைப்பு 2006 ஆம் ஆண்டு அல்ஹாஜ் பாரூக் அவர்களுடைய எண்ணக் கருவில் ஆரம்பிக்கப்பட்டது. எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் கல்வித் துறையை முன்னேற்றுவதே அதன் இலக்காகும்.

2006 தொடக்கம் 2007 வரை தரம் 6 – 13 வரை கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் முதலிய பாடங்களுக்கான மேலதிக வகுப்புகள் அச்சங்கத்தினால் நடத்தப்பட்டன. பின்பு நிதிப் பற்றாக்குறை, மாணவர் அக்கறை இன்மை, ஆசிரியர் தட்டுப்பாடு போன்ற காரணங்களால் அது கைவிடப்பட்டது.

அதையடுத்து, 2007 ஆம் ஆண்டு சங்கத்தின் ஒரு கிளையாக, 'விஞ்ஞான முன்னேற்றத் திட்டம்' (Science Progressive Project – SPP) ஆரம்பிக்கப்பட்டது.

க. பொ. த. உயர் தரத்தில் விஞ்ஞானத் துறையில் கற்போரை உருவாக்கும் நோக்கில் செயற்பட்ட அத்திட்டம், 2012 ஆம் ஆண்டு அதன் இலக்கை அடைந்தது. அத்திட்டத்தின் முதல் தொகுதி மாணவர்கள் நூறு வீதமானோர் விஞ்ஞானத் துறையில் கற்பதற்கு தகுதி பெற்றனர். 21 பேரில் 10 பேர் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் A சித்தி பெற்றனர். இதனால், அம்மாணவர்களைக் கொண்டு 2013 ஆம் ஆண்டு கல்லூரியில் உயர்தர விஞ்ஞானப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு அதன் பயணம் தற்போது வரை தொடர்கிறது. மென்மேலும் எல்லாத்துறையிலும் கல்லூரி வளர்ச்சியடைய இறைவனை பிரார்த்திப்போம்.

# கிழக்கின் குரல்



## 'காலநிலைக்கு ஏதுவான நீர்ப்பாசன விவசாயம்'; மட்டக்களப்பில் கலந்துரையாடல்

**மட்டக்களப்பு குறூப், மட்டக்களப்பு விசேட, புதிய காத்தான் குடி தினகரன் நிருபர்கள்**



மட்டக்களப்பு மாவட்டத்தில் உலக வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் 'காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய நிகழ்ச்சித் திட்டம்' தொடர்பாக 7ஆவது மாவட்ட வழிகாட்டல் குழுக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் புதன்கிழமை (13) மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த் தலைமையிலும் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய வேலைத்திட்டத்தினுடைய கிழக்கு மாகாணத்துக்கான உதவித் திட்டப் பணிப்பாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டிலும் இக்கலந்துரையாடல் நடைபெற்றது. காலநிலை மாற்றத்துக்கு ஈடுகொடுக்கக்கூடிய உப உணவு உற்பத்தி, வீட்டுத் தோட்டம் போன்ற சிறு விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கில் வளங்களை புனரமைத்து, விவசாயிகளை முன்னேற்றும் நிகழ்ச்சித் திட்டமாக இது உள்ளது.

இதற்கமைய மண்முனை மேற்கு, வவுணதீவு, ஏறாவூர்பற்று, செங்கலடி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 23 நீர்ப்பாசனக் குளங்களை புனரமைக்கும் திட்டத்தில் இதுவரை 6 குளங்கள் புனரமைக்கப் பட்டுள்ளதுடன், ஏனைய குளங்களை புனரமைக்கும் பணி தொடர்வதாகவும், இத்திட்டத்துக்கு பொறுப்பான பொறியியலாளர் சுஜிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்ட எண்ணக்கருவை நிலைபேறாக முன்னெடுப்பதற்கேற்ப இத்திட்டத்தின் கீழ் வந்தாறுமூலை, கரடியனாறு, ஆயித்தியமலை பிரதேசங்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் வீட்டுத் தோட்டத்தை நிலைபேறாக பாதுகாப்பதை நடைமுறைப்படுத்துமாறு, மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

அத்துடன், வீட்டுத் தோட்ட செய்கைக்காக பயிர் உள்ளீடுகளை வழங்கும் போது விவசாயத்தில் நிலைபேறாக ஈடுபடக்கூடியவர்களை அடையாளம் கண்டு உணவுப் பாதுகாப்புக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், அவர் தெரிவித்தார்.

கௌப்பி, நிலக்கடலை உற்பத்தியை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான உபகரணங்களை வழங்குதல், உற்பத்திகளை சந்தைப்படுத்தும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல், விவசாயம் மற்றும் சந்தைப்படுத்தல் வியாபாரம் தொடர்பாக விவசாய உற்பத்தி மத்திய நிலையங்களில் பயிற்சி வழங்கல் தொடர்பாகவும் இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

## மட்டக்களப்புக்கு புதிய அரசாங்க அதிபர்



**திராய்க்கேணி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு புதிய அரசாங்க அதிபராக திருமதி ஜே.ஜே.முரளிதரன் நேற்று நியமிக்கப் பட்டுள்ளார். அவருக்கான நியமனக் கடிதத்தை கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கே.டி.என்.ரஞ்சித் அசோக ஆகியோர் முன்னிலையில் பிரதமர் தினேஷ் குணவர்தன வழங்கினார்.

இலங்கை நிர்வாக சேவை தரத்தின் விசேட தரத்தையுடைய சிரேஷ்ட நிர்வாக அதிகாரியான அவர், கிழக்கு மாகாண சபையில் பல்வேறு நிர்வாகப் பதவிகளை வகித்திருந்ததுடன், கிழக்கு மாகாண சபையின் சுகாதார சுதேச அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றினார்.

## அம்பாறையில் தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகளின் திருவாசக மாநாடு



தமிழ்நாடு திருஞானசம்பந்தர் திருமடத்தைச் சேர்ந்த திருக்கயிலாய பரம்பரையின் ஸ்ரீகந்த பரம்பரை சூரியனார் கோவில் ஆதினம் ஸ்ரீ கார்யம் வாமதேவ தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகளின் திருவாசக மாநாடு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (17) காலை 8.00 மணிக்கு தம்பிலுவில் கண்ணகி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

மறுநாள் திங்கட்கிழமை (18) காலை 8.00 மணிக்கு அக்கரைப்பற்று இராமகிருஷ்ணா கல்லூரியிலும், காலை 9.30 மணிக்கு நாவலர் வித்தியாலயம் கோளாவிலும், முற்பகல் 11.00 மணிக்கு தம்பிலுவில் மத்திய கல்லூரியிலும் மாலை 5.00 மணிக்கு காயத்திரி கிராமம் சிவனருள் நிலையத்திலும் ஆன்மிக அருளுரை நடைபெறவுள்ளது. இதன் பின்னர், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (19) காலை 8.00 மணிக்கு திருக்கோவில் மேதடிசன் வித்தியாலயத்திலும், காலை 9.30 மணிக்கு விநாயகபுரம் மகா வித்தியாலயத்திலும், முற்பகல் 11.00 மணிக்கு கோமாரி மேதடிசன் வித்தியாலயத்திலும், நண்பகல் 12.00 மணிக்கு சம்மாந்துறை ஸ்ரீகோரக்கர் சித்தர் பீடத்திலும் ஆன்மிக அருளுரை நடைபெறவுள்ளது.

தமிழகத்திலிருந்து வருகை தரும் சுவாமிகளின் புனித நிகழ்வில் கலந்து கொண்டு இறையருள் பெறுவதுடன், சுவாமிகளின் அருளாசியையும் பெறுமாறு, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



கிழக்கு மாகாணத்தில் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள கிராமிய வீதி அபிவிருத்தி திட்டங்களை உடனடியாக பூர்த்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் செத்சிறிபாயவிலுள்ள கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது, கைவிடப்பட்டுள்ள கிராமிய வீதி அபிவிருத்தி திட்டங்களை உடனடியாக பூர்த்தி செய்யுமாறும் அதிகாரிகளுக்கு கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பணித்தார்.

## அட்டாளைச்சேனை பிரதேசத்தில் சுயதொழில் உபகரணங்கள் வழங்கல்

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**



பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு சுயதொழில் உபகரணங்கள் இஸ்லாமிக் ரிலீப் அமைப்பால் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (13) வழங்கி வைக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமது ஷாபிர் தலைமையில் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன், அவர்கள் தமது சுயதொழிலை தங்குதடையின்றி சிறந்த முறையில் முன்னெடுப்பதை இலகுவாக்கும் வகையில் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் நஹீஜா முஷாபீர், இஸ்லாமிக் ரிலீப் திட்ட இணைப்பாளர் சசிகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கல்முனையில் சுனாமி ஒத்திகை

**பெரியநீலாவணை தினகரன் நிருபர்**



கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட அல் மிஸ்பா மற்றும் அல்ஜலால் பாடசாலைகளில் சுனாமி ஒத்திகை நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அபிருத்தி திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான அனர்த்தப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு திட்டத்தின் போதே, சுனாமி ஒத்திகை முன்னெடுக்கப்பட்டது. அனர்த்தம் இடம்பெறும் போது கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பாக இதன்போது விளக்கமளிக்கப்பட்டதுடன், செயன்முறைகளும் மேற்கொள்ளப்பட்டன.

எச்சரிக்கை மணி ஒலித்ததும் வெளியேறும் முறை, பாதுகாப்பான இடத்தை நோக்கிச் செல்லுதல், மருத்துவ உதவியை பெற்றுக்கொள்ளுதல் முதலியவை ஒத்திகையாக மேற்கொள்ளப்பட்டன.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் எம்.எஸ்.றியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இதணைப்பாளர்களான ஏ.சீ.எம். அல்தாப், சீ.முகுந்தன், இராணுவத்தினர், அம்பாறை மாவட்ட அனர்த்த பிரிவினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சுற்றுலாத்துறையை மேம்படுத்த காத்தான்குடியில் நடவடிக்கை

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



காத்தான்குடியில் சுற்றுலாத்துறையை விரிவுபடுத்தி, வேலை வாய்ப்புகளினூடாக வருமானம் ஈட்டுவதற்கான முயற்சியை மேற்கொள்வதற்கான கலந்துரையாடல் காத்தான்குடி நகர சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (13) மாலை நடைபெற்றது.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவபீடத் தலைவரும் வியாபார பொருளியல் துறைப் பேராசிரியருமான கலாநிதி ஏ.எம்.எம்.முஸ்தபாவின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், காத்தான்குடியில் சுற்றுலாவை விரிவுபடுத்தலும் முறைப்படுத்தலும், நிலைத்துநிற்கும் சுற்றுலா அணுகுமுறையினூடாக சமூக, கலாசார விழுமியங்களை ஒருங்கிணைத்து வருமானம் ஈட்டுதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட இந்தியாவின் சுற்றுலா மற்றும் பொருளியல்துறை பல்கலைக்கழக பேராசிரியர்கள் தமது ஆலோசனைகளை முன்வைத்தனர். அத்துடன், சுற்றுலா விரிவுபடுத்தும் திட்டங்களை காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதயசிறீதர், காத்தான்குடி நகர சபை செயலாளர் ரிப்கா சபீன் ஆகியோர் முன்வைத்தனர்.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களுக்கு தென்கிழக்கு பல்கலைக்கழகத்தால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## மூதூரில் மேய்ச்சல்தரையை ஏற்படுத்தித்தர வேண்டுகோள்

**தோப்பூர் தினகரன் நிருபர்**

திருகோணமலை, மூதூர் பிரதேசத்தில் கால்நடைகளுக்காக மேய்ச்சல் தரையொன்றை ஏற்படுத்தித் தருமாறு, மூதூர் கால்நடை வளர்ப்போர் நலன்புரிச் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேய்ச்சல் தரை இல்லாமையால் கால்நடைகள் பாரிய சிரமத்தை எதிர்நோக்குவதாகவும், மேற்படி சங்கத்தினர் தெரிவித்தனர்.

மூதூரில் பதிவு செய்யப்பட்ட 4,690 பண்ணைகள் உள்ளன. 14,240 பசுக்களையும் 15,537 எருமை மாடுகளையும் 10,260 ஆடுகளையும் கால்நடை வளர்ப்பாளர்கள் பராமரித்து வருகின்றனர். கால்நடைகளுக்கு போதிய மேய்ச்சலுக்கான தரை இல்லாமையால் கால்நடைகளை வளர்ப்பதில் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்தனர்.

எனவே, கால்நடை வளர்ப்பாளர்களின் பிரச்சினைக்கு தீர்வாக வெள்ளை நாவல், கட்டைவிழுந்தான், வெட்டுக்காடு, மணல்ஓடை, பரவிப்பாஞ்சான், பன்வெட்டானில் மேய்ச்சல் தரையொன்றை ஏற்படுத்தித் தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## திருகோணமலையில் டெங்கு ஒழிப்பு கூட்டம்

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் டெங்கு ஒழிப்பு குழுக் கூட்டம் அம்மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (13) மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

பாடசாலை விடுமுறை மற்றும் பண்டிகைக் காலத்தின் போது டெங்கு ஒழிப்பு நடவடிக்கை, டெங்கு நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை, டெங்கு தொற்றைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் எடுத்த நடவடிக்கை மற்றும் அவற்றின் முன்னேற்றம் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், தற்போது மழைக் காலமாகையால் டெங்கு நோய் பரவும் அபாயமுள்ள இடங்களைக் கண்டறிந்து வாராந்த முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிப்பது உள்ளிட்ட விடயங்களும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## சம்மாந்துறையில் அதிபர்களுக்கு வழிகாட்டல் செயலமர்வு

**மணல்சேனை நிருபர்**



சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட ஆரம்பக் கல்விப் பாடசாலை அதிபர்களுக்கு வழிகாட்டல் செயலமர்வு சம்மாந்துறை ஆசிரியவள மத்திய நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.உமர் மௌலானாவின் வழிகாட்டலின் கீழ் வழிகாட்டல் ஆலோசனைக்கு பொறுப்பான ஆசிரிய ஆலோசகர் ஏ.எச்.எம். சபாஹீர் தலைமையில் இந்த செயலமர்வு நடைபெற்றது.

பாடசாலை மாணவர்களின் நலன்களை முன்வைத்து நடத்தப்பட்ட இந்த செயலமர்வில் சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.நைறோஸ்கான், தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்களான எம்.எஸ்.சிறாஜீதீன், எம்.எச்.எம்.அன்வர் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டு விளக்கமளித்தனர்.

### அக்கரைப்பற்றில்

## நீர்ப்பாவனை கட்டண நிலுவையை உடனடியாக செலுத்த அறிவித்தல்

**ஒலுவில் விசேட நிருபர்**

அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஒரு மாதத்துக்கும் மேலாக மாதாந்த நீர்ப்பாவனைக் கட்டண நிலுவையை செலுத்தாத நீர்ப் பாவனையாளர்களை உடனடியாக கட்டண நிலுவையை செலுத்துமாறு, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் யூ.கே.எம். முஸாஜித் தெரிவித்தார்.

ஒரு மாதகால நிலுவைத் தொகை செலுத்தாத பாவனையாளர்களுக்கு நீர் துண்டிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, கல்முனை, மருதமுனை, அட்டாளைச்சேனை, நிந்தவூர், இறக்காமம், சம்மாந்துறை, ஆலையடிவேம்பு, பொத்துவில், கல்முனை பிரதேச நீர்ப்பாவனையாளர்கள் பலர், பல மாதங்களாக நீர்ப்பாவனைக் கட்டணத்தை செலுத்தாமல் உள்ளதை தொடர்ந்து, நீர் துண்டிப்பு தொடர்பாக அறிவித்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

நிலுவைத் தொகை, நீர்ப்பாவனையின் அளவு ஆகியவற்றை கவனத்திற்கொண்டு நீர் துண்டிப்பு மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்த அவர், நீர் துண்டிப்பு செய்யப்பட்ட பாவனையாளர்கள், நீர்க்கட்டண பட்டியல் தொகையுடன் அபராதத்தையும் முழுமையாக செலுத்திய பின்னரே மீள் இணைப்பு வழங்கப்படுமென்றார்.

## கல்முனையில் பத்து ஆலிம்கள் கௌரவிப்பு

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையினுடைய கல்முனைக் கிளையின் ஏற்பாட்டில் ஆலிம்கள் 10 பேர் கடந்த வெள்ளிக்கிழமை கௌரவிக்கப்பட்டனர்.

உலமா சபைக் கட்டடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு கல்முனைக் கிளைத் தலைவர் அஷ்ஷைக் முர்சித் முப்தி தலைமை தாங்கினார்

கடந்த 70 ஆண்டுகளாக கல்முனையில் பிணக்குகளை தீர்ப்பதில் கல்முனைக் கிளை ஆற்றிய பங்கு அளப்பரியதாகும்.

## கலைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள்

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் நடத்தப்பட்ட 'சித்துவிலி சித்தம் கார்ட்டூன்' சுவரொட்டி மற்றும் கலைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் நேற்று முன்தினம் (13) வழங்கி வைக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. அறிவியல், கணிதம் மற்றும் ஆங்கிலம் போன்ற முக்கிய பாடங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் அதேவேளை, சிறுவயதிலிருந்தே இது போன்ற கலைத்துறையில் பிள்ளைகளை ஈடுபடுத்துவது, கலைத்திறன்களைக் கொண்ட சிறந்த பிள்ளைகளை சமூகத்தில் உருவாக்க ஏதுவாக அமைகின்றதென, அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தார்.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான






திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13


## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I


1 மணித்தியாலம் 15 நிமிடம்

**எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்குக. சரியான விடையின் கீழ் கோடிடுக.**


- 01, 02 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.

01. 



02. 


03. 



i. மேற்கு, தென்கிழக்கு, வடக்கு, தெற்கு
ii. வடக்கு, வடகிழக்கு, வடமேற்கு, மேற்கு
iii. வடக்கு, தென்கிழக்கு, வடகிழக்கு, மேற்கு

04. 


i. தெற்கு, வடமேற்கு, தென்மேற்கு, கிழக்கு
ii. தெற்கு, வடகிழக்கு, வடமேற்கு, கிழக்கு
iii. தெற்கு, தென்கிழக்கு, வடகிழக்கு, கிழக்கு


05. 
இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
i. 2
ii. 3
iii. 4

06. 
இவ்வுருவில் உள்ள செவ்வகங்களின் எண்ணிக்கை யாது?
i. 9
ii. 8
iii. 6




07 ஒன்றோடொன்று சினேகமாக இருப்பதற்கு அதிகம் வாய்ப்புள்ள இரண்டு விலங்குகள் முறையே
i. A யும் D யும் ii. D யும் B யும் iii. B யும் E யும்

08. மிகப்பெரிய விலங்கும் மிகச் சிறிய விலங்கும் முறையே
i. A யும் B யும் ii. C யும் D யும் iii. D யும் E யும்




09. B, C ஆகிய இரண்டையும் ஏனையவற்றிலிருந்து வேறுபடுத்தும் இயல்பு யாது?
i. இரவில் சுறுசுறுப்பாக இருத்தல்
ii. இறைச்சியை மாத்திரம் உணவாகக் கொள்ளல்
iii. வீடுகளை அண்டி வசித்தல்

10. A, B ஆகியவற்றில் காணப்படும் ஆனால் C, D ஆகியவற்றில் இல்லாத இயல்பு யாது?
i. பழங்களை உணவாகக் கொள்ளல்
ii. குடிபெயரும் பறவைகளாக இருத்தல்
iii. நீரை அண்டி வசித்தல்

11. மரத்தில் உள்ள காகங்களின் கால்களினதும் கண்களினதும் எண்ணிக்கை 44 எனின் அங்குள்ள காகங்களின் மொத்தத் தொகை யாது?
i. 10 ii. 11 iii. 15

12. ஒரு கூடையில் நாமலரினதும், பொப்பி மலரினதும் எண்ணிக்கை 15 ஆகும். அவற்றின் இதழ்களின் எண்ணிக்கை 40 ஆகும். எனின் அங்குள்ள நாமலர்களின் எண்ணிக்கை யாது?
i. 8 ii. 5 iii. 2

13. ராபி ரூ. 2.00 பெறுமதியான முத்திரைகளையும் ரூ. 5.00 பெறுமதியான முத்திரைகளையும் சம எண்ணிக்கையில் வாங்கினான். அவற்றின் மொத்தப் பெறுமதி ரூ. 28.00 எனின் அவன் வாங்கிய மொத்த முத்திரைகளின் எண்ணிக்கை யாது?
i. 12 ii. 8 iii. 4

14. தேகாரோக்கியத்துடன் இருக்கும் ஓர் யானைக் கூட்டத்தில் உள்ள யானைகளின் தந்தங்களினதும் கால்களினதும் கூட்டுத்தொகை 132 ஆகும். அக்கூட்டத்தில் உள்ள யானைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
i. 22 ii. 33 iii. 66


15. 1 தொடக்கம் 50 வரையுள்ள ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை யாது?
i. 630 ii. 625 iii. 635


16. 4, 5, 6 ஆகிய மூன்று இலக்கங்களையும் வைத்து உருவாக்கக்கூடிய மூவிலக்க எண்கள் எத்தனை?
i. 6 ii. 5 iii. 4

17. மணியொன்று 2 நிமிடங்களுக்கு ஒரு முறை ஒலிக்கும். மற்றுமொரு மணி 4 நிமிடங்களுக்கு ஒருமுறை ஒலிக்கும், மற்றுமொரு மணியொன்று 6 நிமிடங்களுக்கு ஒரு முறை ஒலிக்கும். மூன்று மணிகளும் ஒன்றாக ஒலித்தது மாலை 6.00 மணிக்கு ஆகும். அதன்படி மீண்டும் மூன்று மணிகளும் ஒன்றாக ஒலிப்பது
i. மாலை 6.08 மணிக்கு ii. மாலை 6.10 மணிக்கு iii. மாலை 6.12 மணிக்கு


18. 6m நீளமும் 3m அகலமும் கொண்ட சுவர் ஒன்றுக்கு பூசுவதற்கு 2 லீற்றர் வர்ணப்பூச்சு தேவைப்படும். 9m நீளமும் 1m அகலமும் கொண்ட சுவர் ஒன்றுக்கு பூசுவதற்கு எத்தனை லீற்றர் வர்ணப் பூச்சு தேவை?
i. 3 லீற்றர் ii. 2 லீற்றர் iii. 1 லீற்றர்

- பின்வரும் செய்கையை வைத்து வினாக்களுக்கான சரியான விடையின் கீழ்க் கீறிடுக.




19.  இன் பெறுமானம் யாது?
i. 5 ii. 10 iii. 15


20.  இன் பெறுமானம் யாது?
i. 5 ii. 10 iii. 15

21.  இன் பெறுமானம் யாது?
i. 15 ii. 10 iii. 5

22. 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி செவ்வாய்க் கிழமையாகும். அதன்படி டிசம்பர் 31ஆம் திகதி என்ன கிழமையாகும்?
i. செவ்வாய்க் கிழமை ii. புதன் கிழமை iii. வெள்ளிக்கிழமை

23. ஏப்ரல் மாதத்தின் 3ஆம் திகதி சனிக்கிழமை எனின் அம்மாதத்தில் உள்ள சனிக்கிழமைகளின் திகதிகளின் கூட்டுத்தொகை யாது?
i. 54 ii. 80 iii. 85

- ஒரு சதுரமுகியின் ஆறு பக்கங்களிலும் 1, 2, 3, 4, 5, 6 என்னும் இலக்கங்கள் எழுதப்பட்டுள்ள விதம் பின்வரும் உருக்களில் காணப்படுகின்றது.




24. இலக்கம் 4 இன் எதிர்பக்கத்தில் உள்ள இலக்கம் எது?
i. 1 ii. 2 iii. 6

25. இலக்கம் 3இன் எதிர்பக்கத்தில் உள்ள இலக்கம் எது?
i. 6 ii. 2 iii. 1

26. 2011ஆம் ஆண்டில் 50 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் திரு. ஜயசீலன் தமது 31 ஆவது பிறந்த தினத்தை எந்த ஆண்டில் கொண்டாடியிருப்பார்?
i. 1980 ii. 2000 iii. 1992

27. ஒலிம்பிக் விளையாட்டு விழா நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறும். 29ஆவது ஒலிம்பிக் விளையாட்டு விழா 2008இல் நடைபெற்றது. ஆகவே 21ஆவது ஒலிம்பிக் விளையாட்டு விழா எவ்வாண்டில் நடைபெற்றது?
i. 1976 ii. 1970 iii. 1966

28. அமீர் கடும் முயற்சியுடன் பாடங்களைப் படிக்கும் ஒரு மாணவன். ஆனால் கடந்த புலமைப் பரிசில் பரீட்சையில் அவனால் சித்தியடைய முடியவில்லை. அவன் சித்தியடையாமைக்குரிய காரணமாக அமையக் கூடியது
i. அமீர் இரவு 9.00 வரை கடுமையாகப் படித்தமையால்
ii. ஏனைய மாணவர்களை விட அமீர் குறைவான வினாக்களுக்கே சரியான விடையளித்தமை
iii. பரீட்சை வினாத்தாள் இலகுவாக இருந்தமை


29. பின்வரும் நிகழ்வுகளை சரியாக ஒழுங்கு வரிசைப்படுத்தியதில் சரியான விடையைத் தெரிவு செய்க.
P – ஆடை அணிகின்றாள்
Q – புத்தகங்களைத் தயார்படுத்துகின்றாள்
R – பெற்றோர் பாதங்களை வணங்குகின்றாள்
S – முகம் கழுவுகின்றாள்
T – அதிகாலையில் எழுகின்றாள்
i. TSPRQ ii. TSPQR iii. TPSRQ

30. ஒரு வருடத்தில் உள்ள வாரங்கள் எத்தனை?
i. 60 ii. 52 iii. 55

31. ஒரு கடிகாரத்தில் தற்போது பி.ப. 3.00 மணி காட்டுகின்றது. அக்கடிகாரம் 18 மணித்தியாலங்களின் பின் என்ன நேரம் காட்டும்?
i. மு.ப. 3.00 ii. பி.ப. 9.00 iii. மு.ப. 9.00

32. ஹொக்கி அணி ஒன்று 29 போட்டிகள் விளையாடியது. அதில் 14 போட்டிகளில் வெற்றியும் 8 போட்டிகளில் தோல்வியும் அடைந்தது எனின், எத்தனை போட்டிகள் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிந்தது?
i. 22 ii. 7 iii. 15

33. பின்வரும் உருக்களை 2 கூட்டங்களாகச் சரியாக வகைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.




i. ADF, BCE ii. AFE, BCD iii. DEC, ABF

(11ஆம் பக்கம் பார்க்க)

(10 ஆம் பக்கத் தொடர்)


# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I




1 மணித்தியாலம் 15 நிமிடம்

34. என்னிடம் ஒரேயளவான நீளத்திலான 23 கம்பித் துண்டுகள் இருந்தன. நான் அக்கம்பித் துண்டுகளினால் சதுரமுகியொன்றையும், நான்முகியொன்றையும் அமைத்தேன். அதன்படி என்னிடம் மீதியாகவுள்ள கம்பித் துண்டுகளின் எண்ணிக்கை யாது?
i. 4 ii. 6 iii. 5

35. சதுரமுகியொன்றின் நிறை 250g ஆகும். அவ்வாறான 5 சதுரமுகிகளின் நிறை யாது?
i. 1kg 250g ii. 1 kg 500g iii. 2kg 500g

36. விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான உரு எது?




i.  ii.  iii. 

37. ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத சொற்களைக் கொண்ட கூட்டம் பின்வருவனவற்றுள் எது?

i. புகையிரதம், பயணிகள், தண்டவாளம்
ii. நோய், வியாபாரி, சந்தை
iii. மண்வெட்டி, தோட்டம், விவசாயி


38. காலையிலும் மாலையிலும் பல் துலக்குவதற்குக் காரணம்
i. அழகாய் தோற்றம் அளிப்பதற்கு
ii. பல் நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கு
iii. பெரியோர்களின் சொல்லுக்கு மதிப்பளித்தல்

39. இம் மூன்று இலக்கங்களையும் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மிகப்பெரிய எண்ணிற்கும் மிகச் சிறிய எண்ணிற்கும் இடையே உள்ள வித்தியாசம் எவ்வளவு?





i. 753 ii. 1110 iii. 396


40. எண் கோலத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.




i. 10




ii. 7




iii. 12

# கடந்த வார (08.12.2023) வினாத்தாள்- II இற்கான விடைகள்

**I.**
01. தேன்
02. நரம்பு மண்டலம்
03. காணப்படுகின்றன / அமைந்துள்ளன
04. அமைந்துள்ளன
05. கால்கள் / இறக்கைகள்
06. ஓய்வெடுக்கின்றது

**II.**
07. ஊட்டின
08. மலர்ந்தன
09. சென்றாள்
10. பலம்
11. பழம்
12. மலை

**III.**
13. உயர்திணை
14. அஃறிணை
15. உயர்திணை
16. i. சரி ii. பிழை iii. சரி
17. i. எனக்கு நல்ல காலம் பிறக்கும்.
ii. பிள்ளை மரநிழலில் இருந்து விளையாடியது.
iii. நான் பானம் அருந்த வந்தேன்.
18. i. எழுவாய் - அரசன்
ii. பயனிலை - மக்களை
iii. செயப்படுபொருள் - காப்பற்றினான்
19. i. இது உங்களுடைய பேனாவா?
ii. தயவு செய்து எனக்கு பேனாவைத் தாருங்கள்.
20. i. மீயா ii. ஓரலோசுவ

**IV.**
21. 4
22. 25
23. 6
24. 4
25. 34m 25cm
26. 7m 25cm
27.

| | | |
|---|---|---|
| 0.8 | 0.4 | 0.4 |
| 0.5 | 0.2 | 0.3 |
| 0.3 | 0.2 | 0.1 |

28. ஏதாவது 5க்கு நிறந்தீட்டுக.
29. i. VI ii. VII iii. X

**V.**
30. 1
31. 2
32. 3
33. 1
34. 2
35. 3
36. 1
37. 2
38. 2
39. 2
40. 3
41. 2
42. 3
43. 1
44. 3
45. 1
46. 3
47. 2
48. 2
49. 2
50. 1
51. 2
52. 3
53. 3
54. 1
55. 1
56. 1
57. 1
58. 2
59. 1

# வடக்கின் உதயம்



புதிய மீனவ கொள்கை வரைபுக்கெதிராக கையொப்பம் சேகரிக்கும் நிகழ்வு நேற்று மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்ட மீனவர்களின் ஏற்பாட்டில்,தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் கையொப்பம் சேகரிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
(படம்: மன்னார் குறூப் நிருபர்)

சிலாவத்துறை கடற்பரப்பில்

## சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த 07 பேர் கடற்படையினரால் கைது

(மன்னார் குறூப் நிருபர்)



சிலாவத்துறை கடற்பரப்பில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த 07 பேர் கடற்படையினரால் நேற்று முன்தினம் (13) அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாவத்துறை கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே சிலாவத்துறை கடல் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இரவு நீரில் மூழ்கி கடலட்டை பிடித்துக் கொண்டிருந்த 07 பேரை கைது செய்துள்ளனர். இதன்போது 02 படகுகள், டைவிங் கருவிகள் மற்றும் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட சுமார் 874 கடலட்டைகளும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னாரைச் சேர்ந்த 22-48 வயதுக்குட்பட்டவர்கள் என தெரியவருகின்றது. அவர்களின் உடைமைகள் மற்றும் கடலட்டைகள் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சிலாவத்துறை கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## மருமகனின் தாக்குதலால் மாமனார் உயிரிழப்பு

(கரவெட்டி தினகரன், நாகர்கோவில் விஷேட நிருபர்கள்)

யாழ்ப்பாணத்தில் மருமகனின் தாக்குதலுக்கு இலக்கான மாமனார் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கரவெட்டி வதிரி பகுதியைச் சேர்ந்த நேசராசா அன்ரன் (வயது 50) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினர் கோண்டாவில் பகுதியிலுள்ள உறவினர் வீட்டிற்கு சென்ற வேளை அவரது மருமகனுடன் (சகோதரியின் மகன்) ஏற்பட்ட முரண்பாடு காரணமாக கடுமையாக தாக்கப்பட்டுள்ளார்.

இதனால் மயக்கமுற்று இருந்தவரை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உறவினர்கள் அனுமதித்தனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மானிப்பாய் பிள்ளையார் கோயிலில் வழிபாட்டில் ஈடுபட்ட தென்னிந்திய நடிகை ரம்பா





(யாழ். விசேட நிருபர்)

தென்னிந்திய தமிழ் நடிகை ரம்பா யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து தனது குடும்பத்துடன் மானிப்பாய் மருதடி பிள்ளையார் கோயிலில் நேற்றைய தினம் வியாழக்கிழமை விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார்.

நடிகை ரம்பாவின் கணவர் இந்திரகுமார் பத்மநாதன் யாழ்ப்பாணம் மானிப்பாயை பூர்வீகமாகக் கொண்ட கனடா முதலீட்டாளராவார்.

இவரின் முயற்சியாக யாழ்ப்பாணத்தில் நொதேர்ன் யுனி (Nothern uni) தனியார் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நொதேர்ன் யுனியின் அனுசரணையில் எதிர்வரும் 21ஆம் திகதி யாழ்ப்பாணம் முற்றவெளியில் தென்னிந்திய பாடகர் ஹரிஹரன் பங்கேற்கவுள்ள பிரம்மாண்டமான இலவச இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விவசாய மேன்மை விருது வழங்கல் நிகழ்வும் கண்காட்சியும்



(ஓமந்தை விசேட நிருபர்)

முல்லைத்தீவு மாவட்ட செயலகமும் முல்லைத்தீவு விவசாய திணைக்களமும் இணைந்து நடாத்தும் விவசாய மேன்மை விருது வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும் மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் கலந்துகொண்டதுடன், சிறப்பு விருந்தினராக மாகாண விவசாயப் பணிப்பாளர் வடமாகாணம் ச.செந்தில்குமரன் கலந்து நிகழ்வை சிறப்பித்தார்.

## யாழில். மயங்கி விழுந்த இரு முதியவர்கள் உயிரிழப்பு

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில், நேற்றுமுன்தினம் புதன்கிழமை இருவேறு இடங்களில் திடீரென மயங்கி வீழ்ந்த முதியவர்கள் உயிரிழந்துள்ளனர்.

சங்கானை பகுதியிலுள்ள அரைக்கும் ஆலையில், அரைக்க கொடுத்துவிட்டு, கதிரையில் காத்திருந்தவர் திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

அவரை மீட்டு சங்கானை பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். பொன்னாலை மேற்கு சுழிபுரத்தை சேர்ந்த இரட்ணம் அருளானந்தம் (வயது 69) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அதேவேளை பலாலி பகுதியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த வேளை மயங்கி விழுந்த முதியவரை வீதியால் சென்றவர்கள் மீட்டு, தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

புன்னாலை கட்டுவான் வடக்கை சேர்ந்த செல்வம் சிவானந்தம் (வயது 81) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# அதிவேக நெடுஞ்சாலைகளிலிருந்து அதிரடிப்படையினரை விலக்கிக்கொள்ள மேற்கொண்டுள்ள தீர்மானம்

## அமைச்சர் டிரான் அலஸ் சபையில் விளக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அதிவேக நெடுஞ்சாலைகளில் பாது காப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த விஷேட அதிரடிப்படையினர் அதிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளனர் என பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் டிரான் அலஸ் பாராளு மன்றத்தில் தெரிவித்தார்.

அதிரடிப்படையினரின் சேவை அதிகமாக அங்கு தேவைப்படுவதில்லை என்ற காரணத்தினாலும் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்த வேண்டிய தேவை உள்ளதாலும் அவ்வாறு அவர்கள் அங்கிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார் .

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர் விஷேட அதிரடிப்படையினர் அதிவேக நெடுஞ்சாலைகளில் முன்னெடுக்கும் ஒரே ஒரு செயற்பாடு ஏதாவது வாகன விபத்துக்கள் ஏற்பட்டால் அதன் போது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது மாத்திரமே.

அவ்வாறில்லாவிட்டால் தீ அனர்த்தங்கள் ஏதும் இடம் பெற்றால் அதன் போது செயற்படுவது மட்டுமே அவர்களின் கடமையாகும்.

இந்த வருடத்தின் கடந்த 11 மாதங்களில் 164 தடவைகளே அவர்களின் ஒத்துழைப்புக்கள் பெறப்பட்டுள்ளன.

அவர்களை கடமையில் ஈடுபடுத்துவதற்காக ஒரு வருடத்துக்கு 260 மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது. விபத்துகளின் போது அவர்களுக்கு அறிவித்தால் அதன்போது மாத்திரமே அவர்களின் சேவை தேவைப்படுகிறது. இல்லாவிட்டால் அவர்கள் வெறுமனே அங்கு இருப்பதை குறிப்பிட வேண்டும். அதனால் தான் அவர்களை அங்கு கடமையிலிருந்து விலக்கிக் கொள்வதற்கு தீர்மானம் மேற்கொண்டோம்.

போதைப் பொருள் மாபியாவை இல்லாதொழிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சபையில் குறிப்பிட்டார். அந்த வகையில் அதற்காக ஈடுபடுத்த வேண்டிய விசேட அதிரடிப்படை வீரர்கள் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோருக்கான தேவை காணப்படுகிறது.

அதனால் தான் நெடுஞ்சாலையில் பாதுகாப்பு கடமையில் உள்ள 176 அதிரடிப்படையினரையும் நாம் அங்கிருந்து விலக்கிக் கொள்ள தீர்மானம் மேற்கொண்டோம். எந்த விதத்திலும் பொலிசாரை அங்கிருந்து நாம் விலக்கிக் கொள்ளவில்லை .அவர்கள் நியமித்தபடியே கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

எந்த ஒரு நாட்டிலும் தீ அனர்த்தங்களை கட்டுப்படுத்துவது தீயணைப்பு படையினரே.

அதிரடிப்படையினர் அதற்காக உருவாக்கப்பட்டவர்கள் அல்ல. தீயணைப்பு படையினருக்கு பதிலாகவே 2011 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை அதிவேக நெடுஞ்சாலையில் விசேட அதிரடிப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். தற்போது அவர்களை விலக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.



பேருவளை, அப்ரார் கல்வி நிலைய விஷேட கூட்டம் பேருவளை மககொடை ஸவாஹிர் ஹாஜியாரின் இல்லத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஸ்தாபகரும் பாராளு மன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் எழுதிய 'ஸிதமு' (சிந்திப்போம்) எனும் நூலின் பிரதிகளை மஹகொடை ஐ.எல்.எம் ஸம்ஸுத்தீன் வித்தியாலய நூல் நிலையத்திற்கு பேருவளை நகர சபை முன்னாள் உப தலைவர் ஹஸன் பாஸி மற்றும் பேருவளை நியுஸ் குழுமத்தின் ஆலோசகர் ஸவாஹிர் ஆகியோரிடம் கையளித்தபோது பிடிக்கப்பட்ட படம்.

# மாற்றுத்திறனாளிகளை தொழிலில் ஈடுபடுத்தும் செயற்றிட்டம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளை தொழிலில் ஈடுபடுத்துவது தொடர்பான செயற்றிட்டம் உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன் தலைமையிலும் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் சந்திரகலா புவனேஸ்வரனின் ஒழுங்கமைப்பிலும் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை (13) நடைபெற்றது. சமூக சேவை திணைக்களமும் JICA செயற்றிட்டமும் இணைந்து நடத்தும் இந்தத் திட்டத்தில் நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் 06 மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது. அத்துடன், எதிர்வரும் 2024ஆம் ஆண்டில் 25 வீதமான மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனும் தீர்மானமும் மேற் கொள்ளப்பட்டது.

## புதிய அதிபர்களுக்கு திருகோணமலையில் பிரியாவிடை நிகழ்வு



இலங்கை அதிபர் சேவை தரம் 111 க்கு புதிதாக நியமனம் பெற்று முன்சேவைப் பயிற்சியை நிறைவு செய்த திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று வியாழக்கிழமை சர்வோதய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் எம்.ஜவாத், ஏனைய அதிதிகளாக திருகோணமலை கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ரவி, மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் முனவ்வரா நளீம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (படம்: தோப்பூர் குறூப் நிருபர்)

# அக்கரைப்பற்றில் பயிற்சி வகுப்பு



**பாலமுனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் அனுசரனையோடு மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் மகா வித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை தலைமையில் நடைபெற்ற இவ்வகுப்பில் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றகுமத்துல்லா பிரதம அதிதியாகவும், உதவி ஆணையாளர்கள் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்

இதேவேளை, பயிற்சியில் கலந்து கொண்ட ஆசிரியர்கள் முன்னிலையில் பிரதம அதிதி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

குவைத் நாட்டின் நிதியுதவியில்

# தஸ்கர ஹக்கானியா வளாகத்திற்கு புதிய நீர் சுத்திகரிப்பு இயந்திரம்

## அல்ஹிமா அமைப்பிற்கு அதிபர் பாராட்டு



குவைத் நாட்டின் இலங்கைக்கான மனிதாபிமான உதவித்திட்டத்தின் கீழ் குவைத்திலுள்ள இஸ்லாமிய கெயார் நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டில் கெலிஓயா தஸ்கர ஹக்கானியா கல்வி வளாகத்திற்கு பல இலட்சம் ரூபா நிதியுதவியில் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டு மாணவர்களின் பாவனைக்காக அண்மையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

ஹக்கானியா கல்வி வளாகத்தின் தலைவர் அஷ்ஷெய்க் மௌலவி லபீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அல்ஹிமா இஸ்லாமிய அமைப்பின் இலங்கை பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூறுல்லாஹ் (நளீமி) அதிதியாக கலந்துகொண்டு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் ஹக்கானியா மத்ரஸா நிர்வாக சபை உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.


## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.**

2023.11.08 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:

1. பிரசித்த நொத்தாரசு எஸ்.ரி. பெரேரா அத்தாட்சிப்படுத்திய 2017.06.12ஆம் திகதிய 1703ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட நிரந்தர மேலதிகப் பற்று வசதி மீது 2023.09.12 வரையான வட்டியும் முதலுமாக 9,005,126.74 ரூபாயும் (ஒன்பது மில்லியன் ஐந்தாயிரத்து நூற்று இருபத்தாறு ரூபாய் எழுபத்து நான்கு சதம்) அத்துடன் 2023.09.13ஆம் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு 28.75 வீதப்படி 5,000,000.00 ரூபாய் (ஐந்து மில்லியன் ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் இல.119, குணசேகர மாவத்தை, மத்துமகல, வெலிசறை என்ற முகவரியிலுள்ள வரையறுக்கப்பட்ட சிறிபுர ∴பிறெய்ரர்ஸ் (தனியார்) நிறுவனத்தாரிடமிருந்து (இதன் பணிப்பாளர் - இல. 581/2, சீவலி பிளேஸ், பிட்டக்கோட்டே என்ற முகவரியைச் சேர்ந்த திரு. பரண பள்ளிய திஷாந்த நாகிந்த குருகே) வங்கிக்கு வருமதியாகவுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட ஈட்டுமுறி இல. 1703இன் பேரில் வருமதியாகவுள்ள மேற்குறித்த 9,005,126.74 ரூபாயையும் (ஒன்பது மில்லியன் ஐந்தாயிரத்து நூற்று இருபத்தாறு ரூபாய் எழுபத்து நான்கு சதம்) அத்துடன் 2023.09.13 தொடக்கம் விற்பனைத் திகதி வரையான மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய இங்கு கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரி அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பாணந்துறை மேற்தரக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

"கொங்கஹவத்த" என்றழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டீ.ஜே. டி சில்வா தயாரித்த 1979 டிசெம்பர் 18ஆம் திகதிய 976ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்படுள்ள காணித்துண்டு 4C என அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி 581/4, E.W. பெரேரா மாவத்தை என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்துடனும் அதன்கண் காணப்படும் கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளே பற்று, ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டை பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை எல்லைகட்கு உட்பட்ட 522 பிட்டக்கோட்டே மேற்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள பிட்டக்கோட்டே கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் காணித்துண்டுகள் 4B, 4D என்பவற்றையும் (பத்து அடிப் பாதைக்கான ஒதுக்கம்) கிழக்கில் பி. திசேரா மற்றும் இன்னொருவரின் காணியையும் தெற்கில் பாதை, எஸ். குருகே இன்னும் தெளிவாகச் சொன்னால் பரண பள்ளிய குருகே அர்னோலிஸ் அப்பு (சுரனெலிஸ் அப்பு எனப் பதியப்பட்டுள்ளது) என அறியப்படும் பரண பள்ளிய குருகே லன்ரின் என்பவரின் காணி என்பவற்றையும் மேற்கில் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜே டி சில்வா தயாரித்த 1976.07.08ஆம் திகதிய 604ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்படுள்ள காணித்துண்டு 3ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி பதினான்கு தசம் ஏழு பூச்சியம் பேர்ச்சுகள் (AO.RO.P14.70) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு தெல்கந்த, நுகேகொட காணிப்பதிவகத்தில் A 381/103 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த காணித்துண்டு உரிமம் பெற்ற நில அளவையாளர் மெர்வின் சமரநாயக்க தயாரித்த 2011.12.1ஆம் திகதிய 11646ஆம் இலக்க அண்மைய வரைபடத்தில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

"கொங்கஹவத்த" என்றழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் மெர்வின் சமரநாயக்க தயாரித்த 2011.12.1ஆம் திகதிய 11646ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்படுள்ள காணித்துண்டு 4C என அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி அதன்கண் காணப்படும் கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என அனைத்துடன் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளே பற்று, ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டை பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை எல்லைகட்கு உட்பட்ட 522 - பிட்டக்கோட்டே மேற்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள பிட்டக்கோட்டே கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் 976ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்படுள்ள காணித்துண்டு 4B மற்றும் 4D என அடையாளப்படுத்தப்பட்ட பத்து அடிப் பாதைக்கான ஒதுக்கம் என்பவற்றையும் கிழக்கில் பி.திசேரா மற்றும் பிறரின் காணியையும் தெற்கில் 581/4, E.W. பெரேரா மாவத்தை என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனை, சீவலி பிளேஸ் என்பவற்றையும் மேற்கில் 604ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்படுள்ள காணித்துண்டு 3 மற்றும் இல. 5/3, 3ஆவது ஒழுங்கை என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி பதினான்கு தசம் ஏழு பூச்சியம் பேர்ச்சுகள் (AO. RO.P14.70) பரப்பளவைக் கொண்டுள்ளது.

11646ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்படுள்ள காணித்துண்டு 4D மீதான வழியுரிமையையும் இக்காணி கொண்டுள்ளது.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,**

**R.A.D.P ரணசிங்க**
**சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**பாணந்துறை மேற்தரக் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



# வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| ABR-7968 | பஜாஜ் | 2018 | ராகம |
| ABO-7358 | பஜாஜ் | 2016 | அம்பாரா |
| AAK-5367 | பஜாஜ் | 2013 | ராகம |
| YQ-7556 | பஜாஜ் | 2011 | நுவரேலியா |
| QZ-9369 | பஜாஜ் | 2010 | குருநாகல் |
| QT-5412 | பஜாஜ் | 2009 | ராகம |
| QR-6453 | பஜாஜ் | 2008 | கண்டி |

| மோட்டார் வாகன்ம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| KU-3033 | டாடா | 2012 | ராகம |
| KW-0078 | ஹோண்டா | 2011 | கண்டி |
| KI-8143 | டொயோட்டா | 2007 | ராகம |
| KI-1816 | பியூஜியோட் | 2007 | கண்டி |
| HP-1234 | நசான் | 2001 | சிலாவ் |
| KC-0019 | மாருதி | 2005 | ராகம |
| KB-5738 | பெரோடுவா | 2005 | ராகம |
| 65-1275 | மிட்சுபிஷி | 1996 | ராகம |

| மோட்டார லாரி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| LJ-9563 | LANKA ASHOK LEYLAND | 2012 | அனுராதபுரம் |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம்
அது ஏல அடிப்படையில் இருக்கும்

| | |
|---|---|
| ராகம 0778 523 285 | திருகோணமலை 0773 382 612 |
| ரத்தினபுரி 0774 857 351 | கண்டி 0773 972 860 |
| நுவரெலியா 0777 717 562 | அனுராதபுரம் 0767 139 916 |
| அம்பாரா 0773 547 556 | குருநாகல் 0764 425 205 |
| எம்பிலிபிட்டிய 0773 610 188 | பாணடுரா 0775 215 263 |
| மாத்தறை 0743 601 121 | சிலாவ் 0770 288 804 |


இளைஞர், யுவதிகள்

# தொழில் முனைவோராக உருவாகி முன்னேற்றம் அடைய வேண்டும்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



இளைஞர், யுவதிகள் தொழில் முனைவோராக உருவாகி பொருளாதார முன்னேற்றத்தை அடைந்துகொள்ள வேண்டுமென, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஜே.கலாராணி தெரிவித்தார்.

நிறைந்து காணப்படுகின்ற வாய்ப்புகளையும் வசதிகளையும் பயன்படுத்திக்கொண்டு தொழில் முனைவோராக இளைஞர், யுவதிகள் உருவாக வேண்டுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

அக்ஷன் யுனிற்றி லங்கா தன்னார்வ உதவி ஊக்க நிறுவன செயற்றிட்டத்தின் கீழ் சாளம்பைக்கேணியில் ஆடை உற்பத்திக்கான இளையோர் ஆற்றல் அபிவிருத்தி தொழில் வள நிலைய செயற்பாடுகளை நேற்று வியாழக்கிழமை பார்வையிட்ட பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து வழிகாட்டல் கருத்து வெளியிட்ட அவர்,

"தொழில் வாய்ப்பின்றி இருக்கும் இளையோரை தொழில் முனைவோராக மாற்றுவது சமகாலத் தேவையாக உள்ளது. இந்த முயற்சி தனிப்பட்டவர்களினதும், குடும்பத்தினதும், சமூகத்தினதும் நாட்டினதும் பொருளாதாரத்தை தன்னிறைவு என்ற நிலைக்குக் கட்டியெழுப்ப உதவி புரியும். தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இது போன்ற ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களுக்கு இளைஞர், யுவதிகளை ஊக்குவித்து வருகின்றது.

இங்கு வவுணதீவு பிரதேசத்தில் யுவதிகளையும் பெண்களையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆடை உற்பத்தி தொழில் முனைவோர் முயற்சிகள் எதிர்காலத்தில் மாவட்டத்தின் ஆடை உற்பத்தித் துறையில் பெண்களின் ஆற்றல்களைப் பறைசாற்றுமென்பதில் ஐயமில்லை. இது ஒரு மினி ஆடைத் தொழிலகமாக பரிணமிக்கும் போது இந்தப்பிரதேசபெண்களின்முன்னேற்றத்தில் சிறந்த பொருளாதார கல்வி சமூக மாற்றத்தை இது ஏற்படுத்தும். அத்தகைய நோக்கத்தை அடைந்து கொள்வதற்கான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்க தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் தயாராக உள்ளது" என்றார்.

# மாற்றுத்திறனாளிகளுக்கான சைக்கிள் வண்டிகள் வழங்கல்

**பாலமுனை தினகரன் நிருபர்**



அட்டாளைச்சேனை பிரதேச செயலக சமூக சேவை திணைக்களத்தால் மாற்றுத்திறனாளிகளுக்கான சைக்கிள் வண்டிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹிஜா முஸாபிர் தலைமையில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எல்.ஜஃபர், முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் எம்.ஏ.எம். ஹைஸ், மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.எம்.றுமைஸா, ஏ.எல்.ஸம்ஸாத்பேகம், ஏ.சபானா ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு சைக்கிள் வண்டிகளை வழங்கி வைத்தனர்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

# வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### Bell Sugarcane Slew Loader இயந்திரத்திற்கான உதிரி பாகங்கள் வழங்குவதற்காக தேசிய போட்டி முறையிலான விலைமனுக்கோரல் (PR-7639/40/41)

**பெல்வத்த சீனித் தொழிற்சாலைக்கு Bell Sugarcane Slew Loader இயந்திரத்திற்கான உதிரி பாகங்கள் வழங்குவதற்கு** ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களிடமிருந்து வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக்குழு (DPC) தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. மீளளிக்கப்படாத கட்டணமாக **LKR 8,000.00** பணமாக செலுத்தி **2024 ஜனவரி 03** ஆம் திகதி வரை வேலை நாட்களில் **09.00 மணி முதல் 15.00** மணிவரை வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல-27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றினை சமர்ப்பித்து விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை விலைமனுததரினால் கொள்வனவு செய்ய முடியும்.

2. விலைமனுவுடன் மீளளிக்கப்படாத கட்டண வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும். இணைக்கப்படாத அத்தகைய விலைமனு நிராகரிக்கப்படும்.

3. விலைமனுக்களை **2024 ஜனவரி 04** ஆம் திகதி **14.00 மணிக்கு தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல.27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்ப 04** என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், நேரடியாக கையளிக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"பெல்வத்த சீனித் தொழிற்சாலைக்கு Bell Sugarcane Slew Loader இயந்திரத்திற்கான உதிரி பாகங்கள் வழங்குவதற்கான கேள்விமனுக்கோரல்"** எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.

4. அனைத்து மனுக்களுக்கும் **"மனுப்பாதுகாப்பு" ரூ.225,000.00 (இரண்டு இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய்)** இணைத்திருத்தல் வேண்டும் மேலும் விலைமனுக்கள் திறக்கப்பட்ட திகதியிலிருந்து **119 நாட்களுக்கு** செல்லுபடியாகும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வறையக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - தலைமை அதிகாரி (கொள்முதல்) இருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். **தொலைபேசி : +94 11 2 584 184 , +94 77 010 3359, தொலைநகல் : + 94 11 2500674, (மின்னஞ்சல் : sapumal@lscl.lk).**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல-27, மெல்போர்ன் ஒழுங்கை,**
**கொழும்பு 04.**

SELACINE

# இலங்கை புகையிரத சேவை

## கேள்வி மனுக்கோரல்

### இலங்கை புகையிரத திணைக்களத்துக்குரிய "கொழம்ப கெதர" தங்குமிடத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான பெறுகைக் குழு கேள்வி கோரல்

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கொழும்பு கோட்டை புகையிரத வளாகத்தில் மிதக்கும் சந்தை தொகுதியில் அமைந்துள்ள "கொழும்ப கெதர" தங்குமிட கட்டிடத்தின் தங்குமிட வசதிகளை நடாத்தி செல்வதற்காக ஐந்து வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதன் பொருட்டு கேள்விதாரர்களிடம் இருந்து முத்திரை இடப்பட்ட பெறுகைக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

01. **தகைமைகள்**

I. இந்த ஒப்பந்தம் தொடர்பில் குறித்த வியாபாரம் அல்லது நிறுவனமானது ,வியாபார பெயர் பதிவின் கீழ் / நிறுவனப்பதிவில் கீழ் இலங்கையினுள் பதிவு செய்யப்பட்டு செல்லுபடியாகும் சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்.

II. அனைத்து விண்ணப்பதாரிகளும்/நிறுவனங்களும் இலங்கையினுள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்/நிறுவனங்களில் ஒத்த சேவையினை வழங்கியமை தொடர்பில் குறைந்தபட்சம் இரு வருட அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

III. அனைத்து விண்ணப்பதாரிகள் / நிறுவனங்கள் சுற்றுலா சபையின் செல்லுபடியான பதிவு சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும். (விலைமனுகோரப்படும் திகதிக்கு).

IV. குறித்த வியாபாரத்தினை வெற்றிகரமாக நடாத்தி செல்வதற்கு போதுமான நிதி உறுதிப்பாடு காணப்படுவதினை கடந்த இரு வருடங்களிற்கான கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக அல்லது வங்கி கூற்றின் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும்.

**02. கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளல்.**

பெறுகை ஆவணங்களை 2024 ஜனவரி மாதம் 16 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை புகையிரத வர்த்தக மற்றும் சந்தைபடுத்தல் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். அதற்காக கொழும்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி உத்தியோகத்தரிற்கு மீளளிக்கப்படாத கேள்வி படிவக் கட்டணமாக ரூ.2,500/- பணத் தொகையைச் செலுத்தி, பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் பிரதி அத்தியட்சகர் (வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல்) இற்கு சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விபடிவக்கட்டணத்திற்கு மேலதிகமாக மீண்டும் செலுத்தப்படும் கேள்விமனுக்கோரலுக்கான பிணைத்தொகையாக ரூ. 610,000.00 வை திணைக்களத்திற்கு செலுத்த வேண்டும். அந்த விலைமனுகோரலுக்கான பிணைத்தொகையினை புகையிரத தலைமையகத்தின் பிரதான நிதி உத்தியோகத்தரிற்கு இலங்கையில் செல்லுபடியாகும் பண வடிவில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை (மூலப்பிரதி) கேள்விமனு விண்ணபத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

03. **கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்.**

மேற்படி 02 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்திசெய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல்மூலையில், "கொழம்ப கெதர தங்குமிடத்திற்கான விலைமனுகோரல்" என்று குறிப்பிட்டு அவ்வுறையை முத்திரையிட்டு 2024 ஜனவரி மாதம் 17 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னராக கிடைக்கக்கூடிய வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம், புகையிரத தலைமையகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவு தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் பிரதி அத்தியட்சகர் (வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல்) இன் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியிலோ உள்ளிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதன் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலினால் தாமதமானவை அல்லது தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

04. **கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்.**

2024 ஜனவரி மாதம் 17 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு மேற்படி மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரியோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியோ சமுகமளிப்பதற்கான அனுமதி வழங்கப்படும்.

05. கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்கூறிய கட்டிடத்தை பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுவதுடன் அதற்காக பிரதி பொதுமுகாமையாளரின் (வர்த்தகம்) அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

06. திணைக்கள பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

07. கேள்விதாரர்கள் தேவையான மேலதிக விவரங்களை இலங்கை புகையிரத சேவையின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
தொ.பே .இல - 011 2421281 (நீடிப்பு - 8235)

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**புகையிரத தலைமையகம்,**
**ஒல்கொட் மாவத்தை,**
**கொழும்பு 10.**

# இலங்கை புகையிரத சேவை

## கேள்வி மனுக்கோரல்

### இலங்கை புகையிரத திணைக்களத்துக்குரிய வேயங்கொடை புகையிரத நிலையத்தில் உள்ள கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான பெறுகைக்குழு கேள்விகோரல்

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் வேயங்கொடை புகையிரத நிலையத்தில் உள்ள கீழ்வரும் கடைகளை இரண்டு வருட காலத்திற்கு வியாபார நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு வழங்குவதன் பொருட்டு கேள்விதாரர்களிடம் இருந்து முத்திரை இடப்பட்ட பெறுகைக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொடரிலக்கம் | கடைகள் | அளவு (ச.அ) |
|---|---|---|
| 1 | மேல்மாடி கடை இல. 7 | 330 |
| 2 | மேல்மாடி கடை இல. 9 | 330 |
| 3 | மேல்மாடி கடை இல. 10 | 330 |
| 4 | மேல்மாடி கடை இல. 11 | 330 |
| 5 | மேல்மாடி கடை இல. 12 | 330 |
| 6 | மேல்மாடி கடை இல. 13 | 660 |
| 7 | கீழ்மாடி கடை இல. 14 | 240 |

01. **தகைமைகள்**

திணைக்கள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மிகவும் பொருத்தமான கேள்விதாரருக்கு குறித்த கடையினை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

02. **கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளல்.**

பெறுகை ஆவணங்களை 2024 ஜனவரி மாதம் 16 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை புகையிரத வர்த்தக மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலோ அல்லது வேயங்கொடை புகையிரத நிலையத்திலேயோ பெற்றுக் கொள்ளலாம். அதற்காக கொழும்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி உத்தியோகத்தரிற்கு அல்லது வேயங்கொடை புகையிரத நிலையத்திற்கு மீளளிக்கப்படாத கேள்வி படிவக் கட்டணமாக ரூ. 2,500/- பணத் தொகையைச் செலுத்தி, பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தலின் பிரதி அத்தியட்சகரிற்கு அல்லது வேயங்கொடை புகையிரத நிலையத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி படிவக் கட்டணத்திற்கு மேலதிகமாக அவ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் கேள்வி பிணையொன்றும் செலுத்தப்படவேண்டும். ஒரு விலைமனுகோரல் படிவத்தின் மூலம் ஒரு கடைக்கு மாத்திரமே விலைமனுகோரலினை சமர்ப்பிக்கலாம்.

03. **கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்.**

மேற்படி 02 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்திசெய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல்மூலையில், "வேயங்கொடை புகையிரத நிலையத்தில் உள்ள கடைகளுக்கான விலை மனுகோரல்" என்று குறிப்பிட்டு அவ்வுறையை முத்திரையிட்டு 2024 ஜனவரி மாதம் 17 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னராக கிடைக்கக் கூடிய வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம், புகையிரத தலைமையகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தலின் பிரதி அத்தியட்சகரின் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியிலோ உள்ளிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் அதன் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலினால் தாமதமானவை அல்லது தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

04. **கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்.**

2024 ஜனவரி மாதம் 17 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு மேற்படி மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரிக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதிக்கு சமுகமளிப்பதற்கான அனுமதி வழங்கப்படும்.

05. கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்கூறிய அனைத்து கடைகளையும் பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுவதுடன் அதற்காக வேயங்கொடை புகையிரத நிலையாதிபதியின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

06. திணைக்கள பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

07. கேள்விதாரர்கள் தேவையான மேலதிக விவரங்களை இலங்கை புகையிரத சேவையின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தொ.பே .இல - 011 2421281 (நீடிப்பு - 8235, )**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு ,**
**புகையிரத தலைமையகம்,**
**ஒல்கொட் மாவத்தை , கொழும்பு 10**

# இலங்கை புகையிரத சேவை

## கேள்வி மனுக்கோரல்

### கொழும்பு 10, ஒல்கோர்ட் மாவத்தை,கொழும்பு பொருட் களஞ்சியசாலை தொகுதியின் பொருட் களஞ்சியசாலை கட்டிடங்கள் மற்றும் கொழும்பிற்கு புறம்பாக அமைந்துள்ள பொருட் களஞ்சியசாலைகளை பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காகவோ அல்லது வியாபார நடவடிக்கைகளுக்காகவோ 05 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பெறுகைக் குழுகேள்வி கோரல்

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கொழும்பு பொருட்களஞ்சியசாலை தொகுதியில் மற்றும் கொழும்பிற்கு புறம்பாக அமைந்துள்ள புகையிரத நிலைய வளாகங்களில் காணப்படும் கீழ்வரும் பொருட் களஞ்சியசாலைகளை ஐந்து வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதன் பொருட்டு கேள்விதாரர்களிடம் இருந்து முத்திரை இடப்பட்ட பெறுகைக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

**கொழும்பு பொருட்களஞ்சியசாலை தொகுதியில் அமைந்துள்ள பொருட்களஞ்சியசாலைகள்**

| தொடரிலக்கம் | பொருட் களஞ்சியசாலை | அளவு (ச.அ) |
|---|---|---|
| 1 | C1-G | 1872 |
| 2 | C1-F | 3744 |
| 3 | C1-D | 3870 |
| 4 | C2-E | 5792 |

**கொழும்பிற்கு புறம்பாக அமைந்துள்ள பொருட் களஞ்சியசாலைகள்**

| தொடரிலக்கம் | களஞ்சியசாலைகள் அமைந்துள்ள பிரதேசம் | அளவு (ச.அ) |
|---|---|---|
| 1 | கட்டுகஸ்தோட்டை | 2600 |
| 2 | மீரிகம | 1711 |
| 3 | அம்பலாங்கொடை | 1280 |
| 4 | கடுகண்ணாவ | 8000 |
| 5 | மாதம்பே | 1960 |
| 6 | தலவாக்கலை i | 8000 |
| 7 | தலவாக்கலை ii | 1500 |
| 8 | ஹப்புத்தளை ஓய்வு மண்டப கட்டிடம் | 1593 |
| 9 | மாத்தளை | 730 |

01. **தகைமைகள்**

திணைக்கள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மிகவும் பொருத்தமான கேள்விதாரருக்கு குறித்த பொருட் களஞ்சியசாலையை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

02. கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளல். பெறுகை ஆவணங்களை 2024 ஜனவரி மாதம் 10 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை புகையிரத வர்த்தக மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலேயோ கொழும்பு பொருட் களஞ்சியசாலை பிரதிநிதியிடமிருந்தோ அல்லது குறித்த புகையிரத நிலையத்திலேயோ பெற்று கொள்ளலாம். அதற்காக கொழும்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி உத்தியோகத்தரிற்கு, கொழும்பு களஞ்சியசாலை பிரதிநிதியிற்கு அல்லது குறித்த புகையிரத நிலையத்திலேயோ மீளளிக்கப்படாத கேள்வி படிவக் கட்டணமாக ரூ. 2,500/- பணத் தொகையைச் செலுத்தி, பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தலின் பிரதி அத்தியட்சகரிற்கு அல்லது கொழும்பு பொருட் களஞ்சியசாலை பிரதிநிதியிற்கு அல்லது குறித்த புகையிரத நிலையத்திற்கோ சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி படிவக் கட்டணத்திற்கு மேலதிகமாக அவ்அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் கேள்வி பிணையொன்றும் செலுத்தப்பட வேண்டும். ஒரு விலைமனுகோரல் படிவத்தின் மூலம் ஒரு பொருட் களஞ்சியத்திற்கு மாத்திரமே விலைமனுக்கோரலினை சமர்ப்பிக்கலாம்.

03. **கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்.**

மேற்படி 02 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்தி செய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில், **களஞ்சியத்தின் பெயர் மற்றும் இல மற்றும் கொழும்பு பொருட் களஞ்சியசாலை கட்டிடங்களுக்கான / கொழும்பிற்கு புறம்பாக அமைந்துள்ள பொருட் களஞ்சியசாலைகள் விலை மனுகோரல்** என்று குறிப்பிட்டு அவ்வுறையை முத்திரையிட்டு 2024 ஜனவரி மாதம் 11 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னராக கிடைக்கக்கூடிய வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம், புகையிரத தலைமையகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவு தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் (வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தலின் பிரதி அத்தியட்சகரது உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியிலோ உள்ளிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் அதன்பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலினால் தாமதமானவை அல்லது தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

04. **கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்.**

2024 ஜனவரி மாதம் 11 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு மேற்படி மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரிக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதிக்கு சமுகமளிப்பதற்கான அனுமதி வழங்கப்படும்.

05. கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்கூறிய பொருட் களஞ்சியசாலைகளை பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுவதுடன் அதற்காக கொழும்பு பொருட்களஞ்சியசாலை பிரதிநிதியின் அல்லது குறித்த புகையிரதநிலையத்திலேயோ அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

06. திணைக்கள பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

07. கேள்விதாரர்கள் தேவையான மேலதிக விவரங்களை இலங்கை புகையிரத சேவையின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தொ.பே .இல - 011 2421281 (நீடிப்பு - 8235)**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு ,**
**புகையிரத தலைமையகம்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10**

## பெறுகை அறிவித்தல்

# நீர்கொழும்பு மாநகர சபை

**''நீர்கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் சேகரிக்கப்படும் குப்பைகளை D4 இயந்திரத்தைப் பயன்படுத்தி பரப்பிவிடுதல்''**

நீர்கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகளைக் கொட்டும் கொச்சிக்கடை ஓவிட்டியாவத்த குப்பை முற்றவெளிக்கு கொண்டுவரப்படும் குப்பைகளை பரப்புவதற்குத் தேவையான இயந்திரோபகரணங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக தகுதியான அனுபவம் வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கேள்வி விபரங்கள்**

கேள்விப் படிவக் கட்டணம் 2000.00 ரூபா மற்றும் இயைபுடைய வரிகள்
கேள்வி வைப்புக் கட்டணம் (மீளளிக்கப்படும்) 25,000.00 ரூபாவாகும்.
கேள்விப் படிவ விநியோகம் - 2023-12-15ஆம் திகதி முதல்
கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் - 2024-01-17ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை
கேள்விப் படிவங்களைத் திறத்தல் - 2024-01-17ஆம் திகதி பி.ப. 2.05 மணிக்கு

❖ கேள்விப் படிவங்களை இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''குப்பைகளை பரப்பிவிடுதல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தகைமைகள்**

I. பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்பதற்கான சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
II. போதுமான அளவு பணியாளர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கான இயலுமை இருத்தல் வேண்டும்.
III. போதுமான அளவு எண்ணிக்கையான வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்கள் இருத்தல் வேண்டும்.
IV. இயந்திரங்களைப் பயன்படுத்தி குப்பைகளை நசுக்குதல் தொடர்பில் முன் தகைமையைச் சமர்ப்பிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

01. வெட் வரியின் கீழ் பதிவு செய்துள்ளவர்கள் கேள்விப் படிவத்தின் இரு பிரதிகளிலும் குறித்த வெட் இலக்கம் மற்றும் தொகையை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
02. இரு பிரதிகளினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை 2024-01-17ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அவ்வாறல்லாவிடில் மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.
03. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் போது மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளை வெவ்வேறான உறைகளில் இட்டு (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியெனக் குறிப்பிட்டு) முத்திரைக் குறி பொறித்து சமர்ப்பித்தல் வேண்டும்.
04. வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான வேலை நேரங்களில் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
05. எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை நீர்கொழும்பு மாநகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது. கேள்விகள் தொடர்பில் நீர்கொழும்பு மாநகர சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
06. வெற்றிகரமான கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கேள்வி கையளிக்கப்படுவதற்கு முன் நீர்கொழும்பு மாநகர சபையுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளல் வேண்டும்.
07. கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் எழுத்துமூல அனுமதி வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் மட்டும் கலந்து கொள்ளலாம்.
08. மேலதிக தெளிவுபடுத்தல்கள் தேவையாயின் வேலை நேரங்களில் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களை மாநகர சுகாதாரத் திணைக்களத்தில் விசாரித்தறிந்து கொள்ளலாம்.

**பிரதான பொது சுகாதாரப் பரிசோதகர் - 031-2222262**

**W.A.D. பிரபாத் லக்ஷ்மன்,**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**நீர்கொழும்பு.**

**2023-12-14 ஆம் திகதி**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

109

### மிற்சுபிஸி கார்கள்
விற்பனைக்கு

NW-CAY-8412 MICRO PANDA CROSS MOTOR CAR 2017 BLACK JADE BLACK கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812 081033. 082623

122

### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்
விற்பனைக்கு

ABD-9276 BAJAJ, 2015, THREEWHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210 810 . 082065

**Repeat Your ad For Better Offers**

## வேலைவாய்ப்பு

325

### தொழில்துறை
பொது

சாதாரண பராமரிப்பு நிலையத்திற்கு நோயாளர்களைப் பராமரிப்பதற்கு பயிற்சி பெற்ற/ பெறாத ஆண்/ பெண் ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். தினச் சம்பளம் ரூ. 2000/ = தேவைப்படும் ஆவணங்கள் கிராம அதிகாரி சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையுடன் இன்றே அழையுங்கள். 0752306797, 011 7 604526, 0766542999. 082353

**For classified advertisements and for replies**

received in response to advertisements published under Lake House box numbers

**+94 112429342**
**+94 112429343**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகம் – களுத்துறை

1. தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகத்தின் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் - 2024
2. தர்கா நகர் பிரதேச வைத்தியசாலைக்கு சமைத்த உணவு வழங்குதல் - 2024
3. அலுத்கம பிரதேச வைத்தியசாலைக்கு சமைத்த உணவு வழங்குதல் - 2024

மேற்கூறப்பட்ட வேலை விடயங்களுக்காக தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகத்தின் பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

* தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகத்தின் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான விண்ணப்பதாரர்கள் 03 வருட அனுபவத்தைக் கொண்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றுடன் விலைக்கோரல் ஆவணங்களுக்காக 2000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை இந்த அலுவலகத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

** தர்கா நகர் பிரதேச வைத்தியசாலை மற்றும் அலுத்கம பிரதேச வைத்தியசாலைகளுக்கு 2024/2025ஆம் வருடங்களில் சமைத்த உணவு வழங்குவதற்காக தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இரண்டு வைத்தியசாலைகளுக்கும் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வெவ்வேறாக எழுத்துமூலமான வேண்டுகோள் செய்தல் வேண்டும் என்பதுடன் இதன்பொருட்டு வெவ்வேறாக 2500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை இந்த அலுவலகத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

1. மேற்கூறப்பட்ட 03 வேலை விடயங்களுக்குமான விலைக்கோரல் ஆவணங்கள் 2023-12-15ஆம் திகதி முதல் 2023-12-29ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விநியோகிக்கப்படும்.
2. விலைமனுக்களைப் பெற்றுக்கொள்பவர்களின் ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை / செல்லுபடியாகும் சாரதி உரிமம் / வெளிநாட்டுக் கடவுச் சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைக்கோரல் தொடர்பான இறுதி தீர்மானத்தை எடுக்கும் உரிமையை தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
4. அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
5. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2024-01-02ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் பணிப்பாளர், தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகம் எனும் பெயருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
6. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உங்களால் சமர்ப்பிக்கப்படும் விலைக்கோரல் ஆவணங்களுக்கு இயைபான வகையில் வேலை விடயத்தை பின்வரும் வகையில் குறிப்பிடுதல் வேண்டும்.
   I. "சிற்றுண்டிச்சாலை சேவை வழங்குதல் - 2024" தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகம்
   II. "சமைத்த உணவு வழங்குதல் 2024/2025" பிரதேச வைத்தியசாலை, அலுத்கம
   III. "சமைத்த உணவு வழங்குதல் 2024/2025" பிரதேச வைத்தியசாலை, தர்கா நகர்

மேற்படி வேலைகள் தொடர்பிலான சகல விபரங்களையும் விலைமனு ஆவணங்களுடன் பெற்றுக்கொள்ளலாம்.
தொலைபேசி இலக்கம்: 034-2222264 / 034-2222001 நிர்வாகப் பிரிவின் நீடிப்பு 333/237

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகம், களுத்துறை.**

நீர் வழங்கல் அமைச்சு

## தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

DNCWS

# பெறுகை அறிவிப்பின் திருத்தம்

**2023.12.01** தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட Supply & Delivery of Advanced Water Treatment Plant Lot 01 - contract No: **DNCWS/PRO/2023/Advanced Water Filter Systems/Lot 01** සහ Supply & Delivery of Advanced Water Treatment Plant" Puttalam District WT/04 Contract No: **DNCWS/PRO/2023/Advanced Water Filter Systems/WT 04** குறித்த மனு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதயான **2023.12.15** தவிர்க்க முடியாத காரணத்தினால் **2023.12.22 ஆம் திகதி மு.ப.10.00 மணி** வரை நீட்டிக்கப்பட்டுள்ளது மேலும், அன்றைய தினம் **மு.ப.10.15** மணிக்கு மனுக்கள் திறக்கப்படும். ஏனைய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளில் எந்த மாற்றமும் இடம்பெறவில்லை என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகை குழு,
தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,
இல-1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொட.
2023.12.15

# இலங்கை புகையிரத சேவைகள்

## கொள்முதல் அறிவித்தல்

**இலங்கை புகையிரத சேவையில் வடக்கு மாவட்டத்தில் IPW/ அனுராதபுரம் பிரிவுக்கு 2,000 டிராக் க்யூப்ஸ் பேலாஸ்ட் (CUBES OF TRACK BALLAST) வழங்குவதற்கான கொள்முதல்**
**கொள்முதல் இலக்கம் : SRS/F.7955**

01. இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களக் கொள்வனவுக் குழு (மேஜர்) தவைரினால் போட்டிமுறையிலான ஏலமுறையில் அடிப்படையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுக்கு டிராக் க்யூப்ஸ் பேலாஸ்ட் (CUBES OF TRACK BALLAST) வழங்குவதற்காக வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன. இந்த மனு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திற்கும் தனித்தனியாக வழங்கப்படும்.

| பொருள் | இடம் | கியூப் எண்ணிக்கை | விநியோக காலம் (மாதம்) |
|---|---|---|---|
| 01. | அனுராதபுரம் ஆலை | 1,000 | 06 |
| 02. | மிஹிந்தலை ஆலை | 1,000 | 06 |

02. மீள்ச் செலுத்தப்படாத **ரூ.11,150/-** ஆவணக் கட்டணத்தினை செலுத்தி **பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்) அலுவலகத்திலிருந்து 2024.01.29 ஆம் திகதி பி.ப.3.00** மணி வரை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
03. விலைமனுக்கள் **2024.01.10 ஆம் திகதி பி.ப.02.00 (இலங்கை நேரப்படி)** மணிக்கு மூடப்படும்.
04. மனுதாரர்கள் அவர்களின் விலைமனுவின் ஒரு பகுதியாக **ரூ.440,000/- (இலங்கை ரூபாய் நான்கு இலட்சத்தி நாற்பது ஆயிரம்)** மனுப் பாதுகாப்பு பிணையாக சமர்ப்பிக்க வேண்டும்.
05. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிந்தவுடன் **பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்) அலுவலகத்தில்** உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றலாம்.
06. மூடப்பட்ட மனுக்கள் பதிவு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கப்பட வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் (கொள்முதல்),**
**ஓல்கொட் மாவத்தை,**
**கொழும்பு 10,**

07. மனு ஆவணங்களை பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்) அலுவலகத்தில் இலவசமாகப் பரிசீலனை செய்ய முடியும்.

தொலைபேசி இல : 94(11) 2438078, 94(11) 2436818
தொலைநகல் இல : 94 (11) 2432044
மின்னஞ்சல் : srs.slr@gmail.com / tender2@railway.gov.lk
இணையத்தளம் : www.railway.gov.lk

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),
இலங்கை புகையிரத சேவைகள்.
கொள்முதல் இல.: SRS/F.7955

www.adz.lk
it's what you want

SLTB

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

# இலங்கைத் தேயிலைச் சபை

## விலைமனுக்கோரல் (IFB)

### மோட்டார் வாகனங்கள் (02) இரண்டினை வழங்குவதற்கான விலைமனுக்கோரல்
### ஒப்பந்த இலக்கம் : PROC/MOTORVH/SLTB/23

கொழும்பு 03, காலி வீதி இல-574 இல் அமைந்துள்ள இலங்கை தேயிலை சபை கொள்முதல் குழுவின் தலைவரினால், **2023.12.18 ஆம் திகதி பி.ப.2.00** மணி வரை மோட்டார் வாகனங்கள் (02) இரண்டினை வழங்குவதற்காக புகழ்பெற்ற / அங்கீகரிக்கப்பட்ட வழங்குனர்கள் விநியோகஸ்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

**தகுதி வரம்பு**

1. மனுதாரர் இலங்கையின் வணிகப் பதிவினைப் பெற்றிருக்க வேண்டும்.
2. வாகனம் 2016.01.01 வருடத்திற்கு க்குப் பிறகு தயாரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்
3. கீழே உள்ள தொழில்நுட்ப விவரக்குறிப்புகளின்படி மோட்டார் வாகனங்கள் (02) இரண்டினை வழங்கக்கூடியதாக இருத்தல்.

| | | |
|---|---|---|
| **Engine Capacity** | Motorcars | 1600CC (Maximum)<br>Electric Vehicles – Not below 80KW |
| **Fuel/Engine Type** | Motorcars | Petrol/Hybrid |
| **Transmission Type** | Motorcars | Manual/Auto |
| **Wheel Type** | Motorcars | 02 Wheel |

4. குத்தகைதாரர், இலங்கையில் புகழ்பெற்ற வாகனப் பிராண்டுகளின் வாகன முகவராக அல்லது குறைந்தபட்சம் 10 வாகனங்களை வாடகைக்கு வழங்கும் நிறுவனம் அல்லது இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனத்தின் உரிமையாளராக இருத்தல் வேண்டும்.

**மனுக்களின் மதிப்பீடு**

தரம் மற்றும் செலவு அடிப்படையிலான தேர்வு (QCBS)

1. மனுதாரர் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூ.3,000/-** ஐ செலுத்தி தமது உத்தியோகப்பூர்வ கடிதத்தின் மூலம் வேண்டுகோளளிப்பதால் **2023.12.15 ஆம்** திகதி முதல் ஒரு மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். **கொள்முதல் பிரிவு, இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03** எனும் முகவரியில் மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். சகலவிதமான கொடுப்பனவுகளும் **இல.574, காலி வீதி, கொழும்பு 03** எனும் முகவரியில் அமைந்துள்ள **இலங்கைத் தேயிலைச் சபையின்,** நிதிப் பிரிவின் பொருளாளரிடம் செலுத்தப்பட வேண்டியதுடன், பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் முதற் பிரதியை இணைத்து **2023.12.27** ஆம் திகதி வரை **மு.ப.10.00 முதல் பி.ப.3.00 மணிக்கு** இடையில் **இல.574, காலி வீதி, கொழும்பு 03** என்ற முகவரியில் அமைந்துள்ள **இலங்கைத் தேயிலைச் சபையின் பிரதான காரியாலயத்தில்** பெற்றுக்கொள்ளும் மனு ஆவணங்களின் சமர்ப்பிக்க வேண்டும். மனுக்களை முன்வைக்க வேண்டியது இலங்கைத் தேயிலைச் சபையில் பெற்றுக்கொண்ட ஆவணங்கள் மூலமாக மாத்திரமேயாகும். மேற்குறிப்பிட்ட முகவரியில் மனு ஆவணங்களை இலவசமான பரீசீலனை செய்ய முடியும்.
2. மனுக்கள் முடிவடையும் திகதியிலிருந்து **120 நாட்களுக்கு** செல்லுபடியாகும். 02 மோட்டார் வாகனங்களுக்கான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் இலங்கைத் தேயிலைச் சபையின் தலைவரின் பெயருக்குப் பெற்றுக்கொண்ட **ரூ.240,000/-** பெறுமதியான மனுப்பாதுகாப்பு தொகையுடன் மனுக்களை முன்வைக்க வேண்டும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசி நாளிலிருந்து **148 நாட்கள்** வரை செல்லுபடியாகும்.
3. மனுக்களின் **"அசல்"** மற்றும் **"நகல்"** பிரதிகளை கடித உறையலிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் **"2023 ஆம் ஆண்டுக்காக இலங்கைத் தேயிலைச் சபைக்கு மோட்டார் வாகனங்களை வழங்குவதற்கான விலைமனுக்கோரல்"** எனக்குறிப்பிட்டு **2023.12.28 ஆம்** திகதி **பி.ப 2.00 மணிக்கு** அல்லது அதற்கு முன்னர் **தலைவர், கொள்முதல் குழு, இல.574, காலி வீதி, கொழும்பு 03** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது மேற்குறிப்பிட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும்.
4. மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்த பின்னர், **இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03, கொள்முதல் பிரிவில்** மனுக்கள் திறக்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதநிதிகள் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.
5. மனுப் பிரதிகள் இரண்டுடன், மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 02 (இரண்டு) மோட்டார் வாகனங்களுகாக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் பெற்றுக்கொண்ட **ரூ.240,000/-** பெறுமதியான மற்றும் மனுக்கள் திறக்கப்பட்ட நாளிலிருந்து **120 நாட்களுக்கு** செல்லுபடியாகும் மனுப் பாதுகாப்புடன் **தலைவர், கொள்முதல் பிரிவு, இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்புதல் வேண்டும்.
6. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை **கொள்முதல் பிரிவு, இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03 இல் பெற்றுக்கொள்ள முடியும். (தொலைபேசி 011 2587814, 2586863, 2582122).**

தலைவர்,
கொள்முதல் குழு,
**இலங்கைத் தேயிலைச் சபை,**
இல.574, காலி வீதி,
கொழும்பு 3.

# 2024ம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

பிரதான செயலாளர் அலுவலகம் - மேல் மாகாணம் வாகன பழுதுபார்த்தல் விடயங்களை மேற்கொள்வதற்காக மற்றும் டயர் கொள்வனவு செய்வதற்காக நிறுவனங்களை பதிவு செய்தல். மேல் மாகாண பிரதான செயலாளர் அலுவலகத்திற்கு சொந்தமான வாகனங்களை பழுது பார்ப்பதற்காக மற்றும் டயர் கொள்வனவு செய்வதற்காக கீழே விபரிக்கப்படும் பொருட்கள் மற்றும் சேவை வழங்கும் மேல் மாகாணத்திற்குள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும், பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- வாகன பழுதுபார்த்தல் விடயங்கள் (இயந்திரம்)
- வாகன வளிச்சீராக்கி விடயங்கள் மற்றும் பழுதுபார்த்தல் விடயங்கள்
- வாகன சேர்விஸ் செய்தல்
- வாகன குஷன் செய்தல்/டின்ட் செய்தல்
- வாகனங்களில் மின் உபகரண பொருத்துதல் மற்றும் பழுதுபார்த்தல்.
- டயர்

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள்.**

1. மீளளிக்கப்படாத ரூ. 1000.00 விண்ணப்பப்பவுக் கட்டணத்தை பிரதம செயலாளர் அலுவலகத்தின் நிதிப்பிரிவில் கணக்காளர் (கொடுப்பனவுகள்) இற்கு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து விண்ணப்பத்தை அவ் அலுவலகத்தின் கணக்காளர் (நிர்வாகம்) இடம் 2023.12.18 முதல் 2024.01.16 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
2. வழங்குநராக பதிவு செய்வதற்காக பிரதான செயலாளர் அலுவலகத்தில் விநியோகிக்கும் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து குறித்த ஆவணங்களை இணைத்து விண்ணப்பங்களை உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024" என்று குறிப்பிட்டு 2024.01.17 பி.ப. 2.00 இற்கு முன் தலைவர், சிறிய பெறுகைக் குழு, பிரதான செயலாளர் அலுவலகம் (4ம் மாடி), 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல, என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.
3. பதிவு செய்வதற்காக கவனத்தில் கொள்ளப்படுவது வியாபார பெயர் பதிவுச் சான்றதழில் குறிப்பிடப்படும் வழங்கல்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்காக மாத்திரம் என்பதால் விண்ணப்பத்துடன் வியாபார பெயர் பதிவுச் சான்றிதழின் போட்டோப் பிரதியொன்றை அனுப்புதல் கட்டாயமானது.
4. விலைமனுக்களுக்காக கேள்வி கோரும்போது விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முடியாதுவிடின் அதுபற்றி எழுத்துமூலம் அறிவிக்க வேண்டியதுடன், அவ்வாறு மூன்று (03) முறை பதில் அளிக்காதிருத்தல், பிழையான தகவல்கள் / ஆவணங்களைச் சமர்ப்பித்தல், கோரப்படும் சேவை மற்றும் பொருட்களை சரியான நேரத்தில் வழங்குவதற்கு தவறுதல் போன்ற காரணங்களால் வழங்குநர்கள் வழங்கல் பட்டியலில் இருந்து நீக்கும் அதிகாரம் பிரதான செயலாளர் அலுவலகத்திற்கு உரியது.
5. 2024ம் ஆண்டிற்காக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் - பெறுகைக் குழுவினால் பரீட்சித்துப் பார்த்து பதிவு மேற்கொள்ளப்படும். மேலதிக விபரங்களை 011 - 2093249 தொ.பே. இலக்கத்தை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**சிறிய பெறுகைக் குழு,**
**பிரதான செயலாளர் அலுவலகம் (மே.மா)**
**2023.12.15**

## மக்கள் வங்கி

**மக்கள் வங்கி தம்புள்ள கிளை -138**

**1986 ஆம் வருட இல. 32 சட்ட பிரகாரம், திருத்தப்பட்ட 1961 ஆம் வருட இல. 29 கொண்ட மக்கள் வங்கி சட்டத்தின் 29D சரத்தின் கீழான முன்மொழிவு**

1986 ஆம் வருட இல. 32 சட்ட பிரகாரம், திருத்தப்பட்ட 1961 ஆம் வருட இல. 29 கொண்ட மக்கள் வங்கி சட்டத்தின் 29D சரத்தின் கீழ், மக்கள் வங்கி பணிப்பாளர் சபையினரின் 31.07.2023 திகதிய கீழ்வரும் முன்மொழிவு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பேரில் நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

மக்கள் வங்கியின் பெயரில் மாத்தளை பிரசித்திபெற்ற நொத்தாரிசு திருமதி எஸ்.கே. அபேகோன் என்பவரால் 2017.12.28 ஆம் திகதி சான்றுபடுத்தப்பட்ட இல. 11637 கொண்ட அடமானத்தின் பேரில் அறவிடப்பட வேண்டிய நிலுவை செலுத்துகைகள் மற்றும் 2019.03.19 ஆம் திகதி சான்றுபடுத்தப்பட்ட இல. 11985 கொண்ட அடமானத்தின் பேரில் அறவிடப்பட வேண்டிய நிலுவை செலுத்துகைகள் மற்றும் 2021.03.19 ஆம் திகதி சான்றுபடுத்தப்பட்ட இல.12603 கொண்ட அடமானத்தின் பேரில் அறவிடப்பட வேண்டிய நிலுவை செலுத்துகைகள் கம்முல்லே கெதர விஜித குமாரிஹாமி மற்றும் கஹவலகே சரத் ரூபசிங்க பெரேரா ஆகியோர்களால் செலுத்த தவறியுள்ளதன் காரணத்தால் மேற்படி அடமானத்தின் பேரில், இரண்டு கோடியே ஐம்பத்திரண்டு இலட்சத்து பன்னிரண்டாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தேழு ரூபாய் ஆறுசதம் (ரூ.25,212,977.06) தொகை மக்கள் வங்கிக்கு அறவிடப்படவேண்டியுள்ளதன் பேரில் மேற்படி இரண்டு கோடியே ஐம்பத்திரண்டு இலட்சத்து, பன்னிரண்டாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தேழு ரூபாய் ஆறு சதம் (ரூ. 25,212,977.06) தொகை மற்றும் மூப்பத்தேழு இலட்சத்து அறுபத்து மூவாயிரத்து தொண்ணூற்று ஐந்து ரூபா முப்பது சதம் (ரூ.3,763,095.30) தொகைக்காக 2023.05.22 ஆம் திகதியில் இருந்து நூற்றுக்கு முப்பத்தொன்று தசம் ஐந்து நான்கு வட்டி வீதம் (31.54%) பிரகாரம் மற்றும் அறுபது இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா பதினாறு சதம் (ரூ.6,040,000.16) தொகைக்காக 2023.05.22 ஆம் திகதியிலிருந்து நூற்றுக்கு பதினான்கு தசம் பூச்சியம் நான்கு வட்டி வீதம் (14.04%) பிரகாரம் மற்றும் ஐம்பத்தேழு இலட்சத்து பதினாறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு ரூபா அறுபத்தேழு சதம் (ரூ.5,716,666.67) தொகைக்காக 2023.05.22 ஆம் திகதியிலிருந்து நூற்றுக்கு எட்டு தசம் ஏழு ஐந்து வட்டி வீதம் (8.75%) பிரகாரம் மற்றும் ஐந்து இலட்சத்து மூவாயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று ரூபா இருபத்தெட்டு சதம் (ரூ.503,333.28) தொகைக்காக 2023.05.22 ஆம் திகதியிலிருந்து நூற்றுக்கு இருபத்தொன்பது தசம் நான்கு நான்கு வட்டி வீதம் (29.44%) பிரகாரம் மற்றும் ஐந்து இலட்சத்து முப்பதாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தேழு ரூபா முப்பது சதம் (ரூ.530,967.30) தொகைக்காக 2023.05.22ஆம் திகதியிலிருந்து நூற்றுக்கு இருபத்தொன்பது தசம் நான்கு நான்கு வட்டி வீதம் (29.44%) பிரகாரம் (29.44%) பிரகாரம் மற்றும் ஐந்து இலட்சத்து பத்தொன்பதாயிரத்து நாற்பத்தேழு ரூபா அறுபது சதம் (ரூ.519,047.60) தொகைக்காக 2023.05.22ஆம் திகதியிலிருந்து நூற்றுக்கு இருபத்தாறு தசம் ஒன்பது நான்கு வட்டிவீதம் (26.94%) பிரகாரம் மற்றும் மூன்று இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து முந்நூற்று எட்டு ரூபா எண்பத்து நான்கு சதம் (ரூ.332,308.84) தொகைக்காக 2023.05.22 ஆம் திகதியிலிருந்து நூற்றுக்கு இருபத்தொன்பது தசம் நான்கு நான்கு வட்டி வீதம் (29.44%) பிரகாரம் மற்றும் எட்டு இலட்சத்து பதினாறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு ரூபா அறுபத்தாறு சதம் (ரூ.816,666.66) தொகைக்காக 2023.05.22 ஆம் திகதியிலிருந்து நூற்றுக்கு இருபத்தொன்பது தசம் நான்கு நான்கு வட்டி வீதம் (29.44%) பிரகாரம் மற்றும் இரண்டு இலட்சத்து தொண்ணூற்றிரண்டாயிரத்து முந்நூற்று எண்பத்தொன்பது ரூபா நான்கு சதம் (ரூ. 292,389.04) தொகைக்காக 2023.05.22ஆம் திகதியிலிருந்து நூற்றுக்கு இருபத்தொன்பது நான்கு நான்கு வட்டி வீதம் (29.44%) பிரகாரம் ஏல விற்பனை திகதி வரை மென்மேலும் வட்டி மற்றும் மக்கள் வங்கி சட்டம் 29L பிரிவின் கீழ் அறவிடப்பட வேண்டிய தொகைகள் மற்றும் கட்டணங்கள் உள்ளடங்கலாக அமைவதுடன், யாதேனும் செலுத்துகைகள் பெறப்பட்டிருப்பின் அவை கழிக்கப்பட்டு, அறிவிடுதற்கு இரண்டு கோடியே ஐம்பத்திரண்டு இலட்சத்து பன்னிரண்டாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தேழு ரூபா ஆறு சதம் (ரூ. 25,212,977.06) தொகை அறவீடு செய்யப்படுவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட இல. 24, டொரிங்டன் வீதி, கண்டி ஏலதாரர் சொக்மன் மற்றும் சமரவிக்ரம கம்பனியாரால் இல. 11637 கொண்ட அடமானம் மற்றும் இல. 11985 கொண்ட அடமானம் மற்றும் இல. 12603 கொண்ட அடமானம் என்பவைக்கிணங்க மக்கள் வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்து மற்றும் அதனோடிணைந்தவைகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட வேண்டும் என்பதை 1986ம் வருட இல. 32 கொண்ட சட்ட பிரகாரம், திருத்தப்பட்ட 1961ஆம் வருட இல. 29 கொண்ட மக்கள் வங்கி சட்டத்தின் 29D பிரிவின், கீழான அதிகாரங்களின் பிரகாரம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கின்றது.

**அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்து பற்றிய விபரம்**

மத்திய மாகாணத்தின், மாத்தளை மாவட்டத்தின், தம்புள்ள பிரதேச செயலாளர் பிரிவின், தம்புள்ள பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, பல்லேகம் பிரிவில் கிராம அலுவலர் அமைந்துள்ள, அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையார் ஏ.எம் அனுரரத்ன என்பவரால் 2003.08.03 ஆம் திகதி நிலஅளவை செய்யப்பட்டு, அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட இல. 1870 கொண்ட நில வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாக இல. 01 கொண்ட வெவ பாமுல எனும் பெயர் கொண்ட ஒரு ஏக்கர் 10 பேர்ச்சர்ஸ் (ஏக்கர் 01 ரூட் 0 பர்ச்சர்ஸ் 10) பரப்பளவைக் தன்னகத்தே கொண்ட காணிக்கான நிலவரைபட பிரகாரம் எல்லைகளாவன:

| | |
|---|---|
| வடக்காக | : ரன்தெனிய குளக்கட்டின் அதனோடிணைந்த பாதுகாக்கப்பட்ட பிரதேசம் |
| கிழக்காக மற்றும் தெற்காக | : ரன்தெனிய வான் கால்வாய் அதனோடிணைந்த பாதுகாக்கப்பட்ட பிரதேசம் |
| மேற்காக | : D.W. லொக்குபண்டா உரிமை கோருகின்ற காணி |

என்ற வகையில் மேற்படி இவ் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணி மற்றும் அதற்குரித்தான கட்டடங்கள், மரஞ்செடிகொடிகள் மற்றும் பயிர்செய்கைகள் ஆகிய அனைத்தும் உள்ளடங்கும்.

மேற்படி காணி மாத்தளை மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இல: LDO/L/20/139 கொண்ட பக்கவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்**
**பிரதேச முகாமையாளர்**
**மக்கள் வங்கி**
**பிரதேச தலைமை அலுவலகம்**
**இல.76, தர்மபால மாவத்தை**
**மாத்தளை.**

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK Pride of the Nation

## இலங்கை வங்கி

### ஏலவிற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 22ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

இல. 310, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரியிலுள்ள வரையறுக்கப்பட்ட ஹம்சா ட்ரேட்ஸ் (தனியார்) நிறுவனத்தின் கடன் பொறுப்புகளுக்காக வரி மதிப்பீட்டு இல. 306, 308, 310, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரியிலுள்ள ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.10.27ஆம் திகதிய 2356ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.10.24ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய முதல் நிலுவையையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த M/S T & H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம். எச். துசித்த கருணாரத்ன அவர்கள் 2024.01.04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

உரிமம் பெற்ற நில அளவையாளர் K. கனகசிங்கம் தயாரித்த 2015.11.18ஆம் திகதிய 4511ஆம் இலக்க வரைப்படத்தில் காணித்துண்டு N என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளே பற்று, கொழும்பு பிரதேச செயலகம் மற்றும் கொழும்பு மாநகர சபை நிர்வாக எல்லைகட்குட்பட்ட கொழும்பு மாளிகாவத்தை மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு, மாளிகாவத்த மேற்கு 15ஆம் வட்டாரம், ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ளது. வடக்கில் இல.312, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்ட நிலமனையையும் கிழக்கில் இல. 368/10, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்ட நிலமனையையும் தெற்கில் இல.312, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்ட நிலமனை, உரிமம் பெற்ற நில அளவையாளர் M.I. சமீர் தயாரித்த 1977.05.21 ஆம் திகதிய, வரைபட இல. 570B இல் உள்ளதும் இல. 302, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டு B5, வரைபட இல. 2579 இல் உள்ள காணித்துண்டு AY என்பவற்றையும் மேற்கில் வரைபட இல. 570B இல் உள்ளதும் இல.302, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டு B5 மற்றும் ஸ்ரீ சங்கராஜ மாவத்தை என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி பதினொன்று தசம் ஒன்று இரண்டு பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.11.12) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டுள்ளதோடு கொழும்பு காணிப்பதிவகத்தில் D168/107 என்ற இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய காணித்துண்டானது கீழே விபரிக்கப்பட்டுள்ள காணிகளின் ஒன்றிணைப்பு ஆகும்.

உரிமம் பெற்ற நில அளவையாளர் K. கனகசிங்கம் தயாரித்த 2012.05.15ஆம் திகதிய 2579ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு AX என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி இலக்கங்கள். 306, 308, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்துடன் மேற்குறிப்பிடப்பட்டவாறு ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ளது. வடக்கில் வரைபட இல. 570B இல் உள்ளதும் இல. 302, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டு B1, இல.312, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்ட நிலமனை என்பவற்றையும் கிழக்கில் இல. 368/10, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்ட நிலமனையையும் தெற்கில் இல.290, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்ட நிலமனை, வரைபட இல. 570B இல் உள்ளதும் இல. 302, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டு B5, காணித்துண்டு AY என்பவற்றையும் மேற்கில் வரைபட இல. 570B இல் உள்ளதும் இல. 302, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டு B5, காணித்துண்டு AY, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, வரைபட இல. 570B இல் உள்ளதும் இல. 310, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டு B1 என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி ஒன்பது தசம் இரண்டு ஐந்து பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.9.25) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டுள்ளதோடு கொழும்பு காணிப்பதிவகத்தில் D 70/53 என்ற இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

உரிமம் பெற்ற நில அளவையாளர் K. கனகசிங்கம் தயாரித்த 2015.01.19ஆம் திகதிய 4229ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு X என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி இல.310, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்துடன் மேற்குறிப்பிடப்பட்டவாறு ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ளது. வடக்கில் இல.312, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்ட நிலமனையையும் கிழக்கில் வரைபட இல. 2579இல் உள்ளதும் இலக்கங்கள். 304,306,308, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டு AXஐயும் தெற்கில் வரைபட இல. 2579 இல் உள்ளதும் இலக்கங்கள். 304, 306, 308, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டு AXஐயும் மேற்கில் ஸ்ரீ சங்கராஜ மாவத்தையையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி ஒன்று தசம் எட்டு ஏழு பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.1.87) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டுள்ளது.

காணித்துண்டு X என அடையாளப்படுத்தப்பட்ட மேற்கூறிய காணித்துண்டானது கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவை ஆகும்.

உரிமம் பெற்ற நில அளவையாளர் M.I. சமீர் தயாரித்த 1977.05.21ஆம் திகதிய வரைபட இல.570B இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு B1 அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி இல. 310, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்துடன் மேற்குறிப்பிட்டவாறு மருதானையிலுள்ள ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ளது. வடக்கில் இல. 312, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்ட நிலமனையையும் கிழக்கில் காணித்துண்டு B6 ஐயும் தெற்கில் காணித்துண்டு B2ஐயும் மேற்கில் ஸ்ரீ சங்கராஜ மாவத்தையையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி இரண்டு தசம் பூச்சியம் ஆறு பேர்ச்சுகள் (ஏ0. றூ0.பே.2.06) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டுள்ளதோடு கொழும்பு காணிப்பதிவகத்தில் D 127/93 என்ற இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**பணம் செலுத்தும் முறை :** ஏலத்தில் வெற்றிபெறுபவர் ஏலம்கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்

1. கொள்வனவு விலையிலிருந்து 10% (பத்து வீதம்)
2. VAT கட்டணங்கள் (பொருத்தமாயின்)
3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்)
4. ஏலதாரருக்கான தரகுப் பணமாக 2.5% (இரண்டு தசம் ஐந்து வீதம்)
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்
6. பிற கட்டணங்களும் அறவீடுகளும்

ஏலம் நடைபெற்றதிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% (பத்து வீதத்தை) செலுத்த வேண்டும் என்பதோடு விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% (எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும். மேலும், விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வனவாளர் செலுத்த வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காதவிடத்து ஏல் நாளன்று செலுத்தப்பட்ட அனைத்துப் பணங்களையும் செல்லுபடியற்றதாக அறிவித்து ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

**ஆதனத்தைச் சென்றடையும் வழி :** பஞ்சிகாவத்தைச் சந்தியிலிருந்து ஸ்ரீ சங்கராஜ மாவத்தையூடாக 50 மீற்றர்கள் பயணித்தால் வீதியின் வலது புறத்தில் உள்ள ஆதனம் இருக்குமிடத்தை அடையமுடியும்.

"ஏலவிலைகூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் பெருநிறுவன அறவிடற் பிரிவில் பார்வையிட முடியும். தொலைபேசி இலக்கம் - 0112386079.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.

**திருமதி. A.C.H. அத்துக்கோரல**
**சிரேஷ்ட முகாமையாளர்**
**பெருநிறுவன அறவிடற் பிரிவு**

**இலங்கை வங்கி**
**பெருநிறுவன அறவிடற் பிரிவு**
**03ஆம் மாடி**
**இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01.**

1975 BOC www.boc.lk
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

**For classified advertisements and for replies**

**received in response to advertisements published under Lake House box numbers**

**+94 112429342**
**+94 112429343**

## இலங்கை வங்கி

### ஏலவிற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 22ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

1. கடன் வசதி தொடர்பு இலக்கம்: 80081505,82508636, 86430462 மற்றும் 86845917 அதன் பதிவு அலுவலகம் எண்,

தல்கஹபொத்த வீதி, பிபிலா
தெனிய, உடுபத்தவில்

அதன் பதிவு அலுவலகம் எண், இல. 127, கொக்கோ பில்டிங், கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14 என்ற முகவரியில் பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலகத்தைக் கொண்டுள்ள வரையறுக்கப்பட்ட M/S ப்ளு சிப் எஸ் எல் (தனியார்) நிறுவனத்தாரின் (பதிவு இல. P.V. 87612) ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.11.24 ஆம் திகதிய 2360 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.11.23ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய முதல் நிலுவையையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் நிலமனையையும் இல.50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரி அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்ன அவர்கள் 2024.01.05 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பாரென. இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

"கொன்கஹமுல வத்த மற்றும் கொஸ்கஹமுல வத்த" என்று அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எம்.ஜே.கோம்ஸ் தயாரித்த 2002.09.28 ஆம் திகதியிடப்பட்ட 5528 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட துண்டு A என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு மேல்மாகாணம், குருநாகலை மாவட்டம், கட்டுகம்பொல ஹற்பற்று தெற்கு, கட்டுகம்பொல கோரளை, உடுபத்தாவை பிரதேச சபை எல்லைகளுள், பிபிலதெனிய பிரதேச செயலகப் பிரிவில், 1505ஆம் இலக்க கிராம சேவையாளர் பிரிவில் பிபிலதெனியாவில் அமைந்துள்ளது. மேற்குறிப்பிட்ட காணித்துண்டு A வடக்கில் கால்வாயையும் கிழக்கில் ஆர்.டி.ஏ.சோமபால என்பவரின் காணிகள் மற்றும் துண்டு B என அடையாளமிடப்பட்ட பாதை ஒதுக்கத்தையும் தெற்கில் நிமல் என்பவருக்குச் சொந்தமான அதே காணியின் எஞ்சிய பாகத்தினையும் மேற்கில் ஆர்.டி.அகிலிஸ் என்பவரின் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டானது அங்குள்ள மண், மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள். மற்றும் அனைத்துடனும் மூன்று ஏக்கர்கள் மற்றும் இருபது பேர்ச்சுகள் (ஏ3. ஆர்0.பே20) பரப்பளவுடன் A156/137 குளியாப்பிட்டிய காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உரிமம் பெற்ற நில அளவையாளர் எம்.ஜே.கோம்ஸ் தயாரித்த 2012.08.23 ஆம் திகதியிடப்பட்ட 12990 ஆம் இலக்க வரைபடத்தில் "கொன்கஹமுல வத்த மற்றும் கொஸ்கஹமுல வத்த" என்று அழைக்கப்படும் காணியானது மேல்மாகாணம், குருநாகலை மாவட்டம், கட்டுகம்பொல ஹற்பற்று தெற்கு, கட்டுகம்பொல கோரளை, உடுபத்தாவை பிரதேச சபை எல்லைகளுள், பிபிலதெனிய பிரதேச செயலகப் பிரிவில், 1505ஆம் இலக்க கிராம சேவையாளர் பிரிவில் பிபிலதெனியாவில் அமைந்துள்ளது. மேற்குறிப்பிட்ட காணியானது வடக்கில் கால்வாயையும் கிழக்கில் கால்வாய், ஆர்.டி.ஏ.சோம்பால என்பவரின் காணிகள் மற்றும் 5528ஆம் இலக்க வரைபடத்தில் பாதைக்கான துண்டு B தெற்கில் ஆர்.டி.ஏ.சோமபால என்பவரின் காணியையும், நிமல் என்பவருக்குச் சொந்தமான அதே காணியின் எஞ்சிய பாகத்தினையும், ஆர்.டி.அகிலிஸ் என்பவரின் காணியையும் மேற்கில் ஆர்.டி.அகிலிஸ் என்பவரின் காணியையும் கால்வாயையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டானது அங்குள்ள மண், மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்துடனும் மூன்று ஏக்கர்கள் மற்றும் இருபது பேர்ச்சுகள் (ஏ3.ஆர்0.பே20) பரப்பளவைக் கொண்டுள்ளது.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை**

"கொன்கஹமுல வத்த மற்றும் கொஸ்கஹமுல வத்த" என்று அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எம்.ஜே.கோம்ஸ் தயாரித்த 2002.09.28ஆம் திகதியிடப்பட்ட 5528 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட துண்டு B (பாதை) என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு மேல்மாகாணம் குருநாகலை மாவட்டம், கட்டுகம்பொல ஹற்பற்று தெற்கு, கட்டுகம்பொல கோரளை, உடுபத்தாவை பிரதேச சபை எல்லைகளுள், பிபிலதெனிய பிரதேச செயலகப் பிரிவில், 1505ஆம் இலக்க கிராம் சேவையாளர் பிரிவில் பிபிலதெனியாவில் அமைந்துள்ளது. மேற்குறிப்பிட்ட காணித்துண்டு B வடக்கில் ஆர்.டி.ஏ.சோமபால என்பவரின் காணிகளையும் கிழக்கில் ஐ.எம். ஆரியரத்ன என்பவரின் காணிகளையும் தெற்கில் பிரதேச சபையின் வீதியையும் மேற்கில் ஆர்.டி.ஏ.சோமபால என்பவரின் காணிகளையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டானது மூன்று ஏக்கர்கள் இரண்டு ரூட்ஸ் ஆனால் பொது வழியாகப் பயன்படுத்துவதற்கு மூன்று ரூட்ஸ் மற்றும் இரண்டு பேர்ச்சுகள் (ஏ0.ஆர்2.பே2) பரப்பளவுடன் A106/57 குளியாப்பிட்டிய காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிட்ட மூன்றாவது அட்டவணை**

மேற்குறிப்பிட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள காணி மற்றும் வளாகத்தில் இப்போது இணைக்கப்பட்டுள்ள பின்வரும் தொழிலகம் மற்றும் இயந்திரங்களுடன்.

| No. | Descriptions | Quantity | Value |
|---|---|---|---|
| 01. | Oil transfer pump 3" 2" centrifugal type delivery head-17m 5HP | 2 | 125,000/- |
| 02. | Bleached oil filter pump with motor pump 2"*2 1/2 centrifugal delivery head-17 m 5HP | 1 | 110,000/- |
| 03. | Hydrogenation process vessel gear box with motor 15 HP. | 1 | 360,000/- |
| 04. | 15 HP.1,440 rpm Flame.proof motor class C | 1 | 125,000/- |
| 05. | Hydrogenation cooler vessel 10HP*1,440 rpm Flam proof motor | 1 | 90,000/- |
| 06. | Feed pump with motor size 3"x2" centrifugal type delivery head - 17m motor 5HP | 1 | 256,000/- |
| 07. | Fatty acid circulation pump centrifugal type size 2" x 1" motor 7.5 HP | 1 | 350,000/- |
| 08. | Final oil pump centrifugal type size 2"x1" motor 7.5 HP | 1 | 350,000/- |
| 09. | Chill water circulation pump centrifugal type size 2"x1" motor 10 HP | 1 | 85,000/- |
| 10. | 205 * 125 I section beam (75 No.s) | 450/75bars | 2,212,500/- |
| 11. | 205 * 100 I section beam (141 No.s) | 850/141bars | 2,961,000/- |
| 12. | 150*75 I section beam (41 No.s) | 250/41 bar | 1,301,750/- |
| 13. | 200 *100 'C' Channel M.S. | 150/25 bars | 475,000/- |
| 14. | 100*50 'C' M.S. Channel (34 No.s) | 200/34 bars | 249,900/- |
| 15. | 75*32 M.S. Lipid Channel (207 No.s) | 1200/207bars | 496,800/- |
| 16. | 65*65 6 M.S. Angle (134 No.s) | 800/134bars | 623,100/- |
| 17. | 6 mm M.S. plate 8"*4" | 90 | 1,777,500/- |
| 18. | 12 mm M.S.plate 8"*4" | 10 | 395,000/- |
| 19. | 10 mm M.S. Plate 8"*4" | 10 | 335,000/- |
| 20. | 5mm chequreed plate 8"*4" | 120 | 1,860,000/- |
| 21. | 100*4*2 Lipid Channel | 500/56 bars | 187,600/- |
| 22. | 0.45 thick, galvanized coated amana sheet colourd 16"x3" | 280 | 68,600/- |
| 23. | 3" M.S Pipe 'C' class | 50 | 725,000/- |
| 24. | 3" M.S Flange 'C' class 150 | 150 | 262,500/- |
| 25. | 3" M.S Bend 'C' Class | 150 | 247,500/- |
| 26. | 3" Ball valve flange end | 25 | 675,000/- |
| 27. | 2" MS Pipe 'C' class | 150 | 1,275,000/- |
| 28. | 2" M.S. Flange class 150 | 250 | 362,500/- |
| 29. | 2" steam globe valve,flange end,cast steel graphite rope | 25 | 575,000/- |
| 30. | 2" ball valve flange end cast steel S.S. ball high temp teplone | 50 | 500,000/- |
| 31. | 2" S.S. pipe grade 316 | 25 | 575,000/- |
| 32. | 2" S.S. 316 flange class 150 | 100 | 750,000/- |
| 33. | 2" S.S. 316 elbow | 75 | 131,250/- |
| 34. | 2" Ball valve weldable type | 25 | 256,250/- |
| 35. | 100 TPD Edible Oil Deodorizing complete unit with multi function. | 1 | 35,082.900/- |
| 36. | Fraction section process vessel-mild steel fabrication cylindrical type bottom bcone type size 2m, height 4m | 1 | 9,996,000/- |
| 37. | Hydrogenation process vessel -mild sreel fabrication cylindrical vessel dish end top & bottom equipped with thermic fluid heating coils arrangement | 1 | 7,825.000/- |
| 38. | Hydrogenation process vessel- Hydrogenation cum bleacher mild steel fabrication cylindrical vessel dish end top & bottom equipped with thermic fluid heating coils arrangement | 1 | 5,825,000/- |
| 39. | Hydrogenation process catch hall | 1 | 1,994,100/- |
| 40. | Chilling plant-serial No. 00CL/004/9270 | 1 | 3,705,000/- |
| | | **Total** | **85,557,750/** |

"ஏலவிலை கூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் பன்னல கிளை முகாமையாளரைத் தொடர்புகொள்வதன் மூலம் பார்வையிட முடியும். தொலைபேசி இலக்கம் - 037-2246080"

மேற்குறிப்பிட்ட அட்டவணை வரிசை முறையில் உள்ளது.

பணம் செலுத்தும் முறை : ஏலத்தில் வெற்றிபெறுபவர் ஏலம்கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையிலிருந்து 10% (பத்து வீதம்)
2. பெறுமதிசேர் வரிக் (VAT) கட்டணங்கள் (பொருத்தமாயின்)
3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்)
4. ஏலதாரருக்கான தரகுப் பணமாக 2.5% (இரண்டு தசம் ஐந்து வீதம்)
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்
6. பிற கட்டணங்களும் அறவீடுகளும்

ஏலம் நடைபெற்றதிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% (பத்து வீதத்தை) செலுத்த வேண்டும் என்பதோடு விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% (எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும். மேலும், விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வனவாளர் செலுத்த வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காதவிடத்து ஏல நாளன்று செலுத்தப்பட்ட அனைத்துப் பணங்களையும் செல்லுபடியற்றதாக அறிவித்து ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

**இலங்கை வங்கி**
**பன்னல**

**திரு.பி.டி.எஸ்.ஆர்.ஜெயசிறி**
**முகாமையாளர்**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை கிரிக்கெட்டின் ஆலோசகர் பதவிக்கு சனத் ஜயசூரிய நியமனம்

இலங்கை கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் ஆலோசகராக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் இடம்பெற்றிருப்பதோடு அவர் இலங்கை கிரிக்கெட் சபையின் உயர் செயல்திறன் நிலையத்துடன் நேரடியாக பணியாற்றவுள்ளார்.

இலங்கை தேசிய அணி மற்றும் 19 வயதுக்கு உட்பட்ட அணிகள் அண்மைய நாட்களில் மோசமான தோல்விகளை சந்தித்த நிலையில் அணியின் பயிற்சிக் குழாம் மற்றும் உயர் செயல்திறன் நிலையம் பின்னடைவை சந்தித்துள்ளன.



இலங்கை தேசிய அணி அண்மையில் ஆசிய கிண்ணம் மற்றும் அதனைத் தொடர்ந்து நடந்த உலகக் கிண்ண போட்டிகளில் மோசமான தோல்வியை சந்தித்ததோடு இதனால் சம்பியன்ஸ் கிண்ண தொடருக்கான தகுதியையும் இழந்தது.

இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணியும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று வரும் ஆசிய கிண்ணத் தொடரில் தோல்விகளை சந்தித்து குழு நிலையுடனேயே வெளியேறியது.

இந்நிலையில் இலங்கையின் தற்போதைய கிரிக்கெட் கட்டமைப்பு தொடர்பில் மதிப்பாய்வு செய்து அதனை அபிவிருத்தி செய்வதற்கான சிறந்த திட்டமொன்றை வகுக்கவும், இளையோர் முதல் தேசிய மட்டம் வரை நேர்தியான கட்டமைப்பையும், அபிவிருத்தியையும் மேற்கொள்ளும் நோக்குடனும் சனத் ஜயசூரியவுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை அணியின் மோசமான தோல்விகளை அடுத்து அதிரடி மாற்றங்கள் இடம்பெற்று வரும் நிலையிலேயே ஜயசூரியவின் இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது. ஏற்கனவே உபுல் தரங்க தலைமையில் புதிய தேர்வுக் குழு ஒன்றை விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ நியமித்துள்ளார்.

சனத் ஜயசூரிய முன்னதாக இலங்கை அணியின் தேர்வுக் குழு தலைவராக செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை கிரிக்கெட்:

# இறுதியில் அசோகாவுடன் யாழ். மத்தி பலப்பரீட்சை





பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக்கு உட்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் பிரிவு 2 குழு பி கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி இன்று (15) கொழும்பு, அசோகா வித்தியாலயத்தை பண்டாரகம கிரிக்கெட் மைதானத்தில் எதிர்கொள்ளவுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி தனது குழுவில் இரண்டாவது இடத்தைப் பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றது. காலிறுதியில் ஹேனகம மத்திய கல்லூரி அணியை எதிர்கொண்ட யாழ். மத்தி போட்டியில் முடிவு கிடைக்காத போதும் முந்தைய போட்டியில் பெற்ற புள்ளிகள் அடிப்படையில் அரையிறுதிக்கு முன்னேறியது.

அம்பலங்கொடை பீ. டி. எஸ். குலரத்ன கல்லூரிக்கு எதிரான அரையிறுதியில் வெற்றியீட்டியே யாழ். மத்திய கல்லூரி அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. கொழும்பு, அசோகா வித்தியலயம் தனது குழுவில் 4 ஆவது இடத்தை பிடித்து காலிறுதிக்கு முன்னேறியபோதும் காலிறுதிப் போட்டியில் ஜாஎல, கிறிஸ் கிங் கல்லூரியையும் தொடர்ந்து அரையிறுதியில் கண்டி கிங்ஸ்வுட் கல்லூரியையும் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

யாழ். மத்திய கல்லூரி அணிக்கு நிஷான்தன் அஜே தலைமை வகிப்பதோடு கொழும்பு, அசோகா வித்தியாலய அணிக்கு உமேஷ் கெல்தரா தலைவராக செயற்படுகிறார்.

## சர்வதேச செய்திகள்

# அமெரிக்காவுடனான முறுகலுக்கு மத்தியிலும் காசா மீது இஸ்ரேல் தொடர்ந்தும் தாக்குதல்

## மழையால் பலஸ்தீனர்களுக்கு மேலும் நெருக்கடி

காசா போரில் கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்கும்படி அமெரிக்கா தனது கூட்டாளியான இஸ்ரேலை வலியுறுத்தி வரும் சூழலில் இரு தரப்புக்கும் இடையில் முறுகல் அதிகரித்து வருகின்றபோதும் காசா மீதான இஸ்ரேலின் உக்கிரத் தாக்குதல்கள் நேற்றைய (14) தினத்திலும் நீடித்தது. அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் ஜெரூசலத்திற்கு விஜயம் மேற்கொள்ளும் நிலையிலேயே விரிசல் அதிகரித்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் காசா இடையிலான போர் தற்போது மூன்றாவது வாரமாக நீடித்து வரும் நிலையில் இஸ்ரேலின் முழு முற்றுகையில் உள்ள காசாவின் பெரும் பகுதி வான், தரை மற்றும் கடல் மார்க்கமாக நடைபெறும் தாக்குதல்களில் அழிவை சந்தித்துள்ளது. இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 18,600ஐ தாண்டியுள்ளது. உயிரிழந்தவர்களில் சிறுவர்கள் மற்றும் பெண்களே அதிகமாக உள்ளனர்.

காசா எங்கும் நேற்றுக் காலை இடம்பெற்ற வான் தாக்குதல்களில் குறைந்தது 19 பேர் கொல்லப்பட்டதாக அந்தப் பகுதியின் சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இதில் கடந்த புதன்கிழமை இரவு தெற்கு காசாவின் ரபாவில் இஸ்ரேலிய போர் விமானங்கள் இரு வீடுகளை தாக்கி தரைமட்டமாக்கியுள்ளன. அப்போது அந்த வீடுகளுக்குள் வீட்டு உரிமையாளர்கள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் என பெரும் எண்ணிக்கையானோர் இருந்துள்ளனர்.

இதனால் 27 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு காயமடைந்த மேலும் பலர் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர். இதில் சிறுவர்கள் உட்பட நால்வர் இடிபாடுகளில் சிக்கி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த புதன்கிழமை இரவும் காசா பகுதியில் கடும் மழை மற்றும் காற்று வீசியதால் ஏற்கனவே இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் வசிக்கும் மக்கள் மேலும் நெருக்கடியை சந்தித்துள்ளனர். இவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் கூடாரங்கள் சீரற்ற காலநிலையால் கிழிந்தும், கூடாரங்களுக்கு நீர் தேங்கியும் உள்ளது. மக்கள் குளிரினால் அவதிப்பட்டு வருகின்றனர்.

கடும்மழையும் புயல்காற்றும் சில இடங்களில் வெள்ளத்தை ஏற்படுத்தின.

ஜபாலியா அகதிகள் முகாம் வெள்ளத்தில் முழுமையாக மூழ்கியதாக அங்கு வசிப்போர் கூறினர். ரபாவிலும் மழையால் பல பிரச்சினைகள் நிலவுகின்றன.

வடக்கு காசாவைத் தொடர்ந்து தெற்கு காசவின் பிரதான நகரான கான் யூனிஸை மையப்படுத்தி இஸ்ரேல் போர் நடவடிக்கையை தீவிரப்படுத்தி இருக்கும் நிலையில் பெரும்பாலானவர்கள் தற்போது மேலும் தெற்காக எகிப்து எல்லையை ஒட்டிய ரபா பகுதியில் அடைக்கலம் பெற்று வருகின்றனர்.

காசா பகுதியின் சுமார் 85 வீதமானவர்களான 1.9 மில்லியன் மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி இருக்கும் நிலையில் ரபா பகுதியில் தற்போது ஒரு மில்லின் பேர் வரை அடைக்கலம் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது.



62 சதுர கிலோமீற்றர் பகுதியைக் கொண்ட ரபாவில் தற்போது ஒரு சதுர கிலோமீற்றர் பகுதிக்குள் சுமார் 16,000 பேர் சிக்கி உள்ளனர். இது நியூயோர்க் (11,313), டோக்கியோ (6,158) மற்றும் லண்டன் (5,598) நகரங்களை விடவும் சனநெரிசல் மிக்க பகுதியாக மாறியுள்ளது. எனினும் இவ்வாறு அடைக்கலம் பெற்ற மக்கள் ஏற்கனவே பட்டினியால் தவித்து வரும் நிலையில் குளிராலும் வாடி வருகின்றனர்.

"நாங்கள் ஐந்து நாட்களை வெட்ட வெளியில் கழித்தோம். இப்போது கூடாரங்களில் நீர் நிரம்பியுள்ளது" என்று இடம்பெயர்ந்த குடியிருப்பாளர் ஒருவரான பிலால் அல் கசாஸ் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

கடுமையான காற்று பலவீனமான கூடாரங்களை தூக்கி எறியும் நிலையில் அவைகளை பலப்படுத்துவதற்கு மேலும் பிளாஸ்டிக் போர்வைகளை பயன்படுத்தி வருகின்றனர். "எங்கே நாம் புலம்பெயர்வது? எமது கௌரவம் போய்விட்டது. பெண்கள் எங்கே ஆறுதல் அடைவார்கள்? எந்த குளியலறையும் இங்கே இல்லை" என்று 41 வயது கசாஸ் கூறினார்.

இந்நிலையில் மூளைக்காச்சல், மஞ்சள் காமாலை மற்றும் மேல் சுவாசக்குழாய் தொற்று போன்ற நோய்கள் தீவிரம் அடையும் அச்சுறுத்தல் இருப்பதாக ஐ.நா எச்சரித்துள்ளது.

காசாவில் மருத்துவ கட்டமைப்பு முழுமையாக சீர்குலைந்துள்ளது. சிறுவர்களுக்கான தடுப்பூசிகள் தீர்ந்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளது ஹமாஸ் நிர்வாகம், அது பேரழிவு மிக்க சுகாதார விளைவுகளை ஏற்படுத்தும் என்று எச்சரித்துள்ளது.

"தொற்றுநோய்ச் சூறாவளி ஆரம்பித்துள்ளது," என்று யுனிசெப் அமைப்புக்கான தலைமைப் பேச்சாளர் ஜேம்ஸ் எல்டர் தெரிவித்துள்ளார்.

நவம்பர் 29 முதல் டிசம்பர் 10 ஆம் திகதி வரை ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே வயிற்றுப்போக்குச் சம்பவங்கள் 66 வீதம் கூடி 59,895ஆகப் பதிவாகியுள்ளன. இதே காலகட்டத்தில் எஞ்சிய மக்களிடையே வயிற்றுப்போக்குச் சம்பவங்கள் 55 வீதம் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

காஸாவில் போர் காரணமாக அனைத்து கட்டமைப்புகளும் சேவைகளும் முடங்கிவிட்டதால் இந்த எண்ணிக்கை முழுமையாகக் கணக்கிடப்படவில்லை என்று அந்த ஐநா அமைப்பு கூறியது.

வடக்கு காசாவில் உள்ள கமால் அத்வான் வைத்தியசாலையின் வார்டுகள் மீது இஸ்ரேல் படை துப்பாக்கிச் சூடு நடத்துவதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

போர் வெடிப்பதற்கு தூண்டுதலான இஸ்ரேல் மீது ஒக்டோபர் 7 ஆம் திகதி பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்து மேற்குக் கரையிலும் பதற்ற சூழல் அதிகரித்துள்ளது. இதில் ஜெனின் நகர் மீது இஸ்ரேலிய படைகள் தொடர்ந்து மூன்றாவது நாளாக நேற்று நடத்திய சுற்றிவளைப்புகளில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது.



பாதுகாப்பு படைகளை இலக்கு வைத்து வீதியில் வெடிபொருட்கள் வைக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே படையினர் இந்தத் தேடுதல்களில் ஈடுபட்டு வருவதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க அரசு இஸ்ரேலுக்கு பல பில்லியன் டொலர் இராணுவ உதவிகளை வழங்கி வரும் நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இதுவரை இல்லாத வகையில் இஸ்ரேலுக்கு கடும் வார்த்தை பிரயோகங்களை கடந்த புதனன்று (13) பயன்படுத்தி இருந்தார். காசாவில் இஸ்ரேல் கண்மூடித்தனமாக குண்டுகளை வீசுவதாகவும் அதற்கான சர்வதேச ஆதரவு பலவீனம் அடைந்திருப்பதாகவும் பைடன் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் இஸ்ரேல் தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருக்கும் நிலையில் "நாம் முடிவு வரையும், வெற்றிவரையும் செல்வோம். அதற்கு குறைவாக எதுவும் இல்லை" என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உறுதி அளித்துள்ளார்.

சர்வதேச ஆதரவுடனோ அல்லது இல்லாமலோ ஹமாஸுக்கு எதிரான போர் தொடர்ந்து நடத்தப்படும் என்று இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் எலி கொஹேன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பைடனின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜென் சுலிவன் நெதன்யாகு மற்றும் அவரது போர் அமைச்சரவையுடன் பேசுவதற்காக நேற்று ஜெரூசலத்தை சென்றடைந்தார்.

இந்த சுற்றுப்பயணத்திற்கு முன்னர் வோல் ஸ்ட்ரீட் ஜெர்னல் பத்திரிகைக்கு உரையாற்றிய சுலிவன், இந்த விஜயத்தில் போரை முடிப்பதற்கான கால எல்லை பற்றி பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக குறிப்பிட்டார். சுலிவன் இஸ்ரேலில் "கடுமையான தீவிர பேச்சுவார்த்தையில்" ஈடுபடுவார் என்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சின் பேச்சாளர் ஜோன் கிர்பி தெரிவித்தார்.

போருக்குப் பின்னர் காசாவை நிர்வகிப்பது தொடர்பிலும் அமெரிக்க அரசுடன் நெதன்யாகு முரண்பட்டு வருகிறார்.

எனினும் ஹமாஸ் அல்லது போராட்ட தரப்புகள் இன்றி காசா அல்லது பலஸ்தீனம் தொடர்பான எந்த ஒரு ஏற்பாடும் மாயமானது என்று ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே தெரிவித்துள்ளார்.

ஜெரூசலத்தை தலைநகராகக் கொண்ட சுதந்திர பலஸ்தீன நாட்டை பெறும் பலஸ்தீன மக்களின் உரிமையை எட்டுவதற்கு வழிவகுக்கக்கூடிய பேச்சுவார்த்தைகளுக்கு ஹமாஸ் தயாராக உள்ளது என்றும் அவர் கூறினார்.

கொள்கை மற்றும் புள்ளிவிபர ஆராய்ச்சிகான பலஸ்தீன மையத்தினால் புதன்கிழமை வெளியிடப்பட்ட கருத்துக் கணிப்பில், பலஸ்தீன பகுதிகளின் 78 வீதமான மக்கள் ஹனியேவுக்கு ஆதரவை வெளியிட்டுள்ளனர். இதுவே போருக்கு முன்னர் 58 வீத ஆதரவே இருந்துள்ளது.

காசா பொதுமக்களின் உயிரிழப்பு அதிகரித்து வரும் நிலையில் இஸ்ரேல் மீதான சர்வதேச அழுத்தமும் அதிகரித்து வருகிறது. அமெரிக்க உளவுப் பிரிவை மேற்கோள்காட்டி சி.என்.என். தொலைக்காட்சி வெளியிட்டிருக்கும் செய்தியில், கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் காசாவில் இஸ்ரேல் பயன்படுத்திய வானில் இருந்து தரையை தாக்கும் வெடி பொருட்களில் கிட்டத்தட்ட பாதி அளவானவை பொதுமக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வழிகாட்டப்படாதவை என்று தெரிவித்துள்ளது.

# 17 வாகனங்கள் மோதி 16 பேர் உயிரிழப்பு

வெனிசுவெலா நெடுஞ்சாலையில் 17 வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக மோதிக் கொண்டதில் 16 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 6 பேர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர்.

தலைநகர் கரகஸையும் நாட்டின் கிழக்குப் பகுதியையும் இணைக்கும் நெடுஞ்சாலையில் விபத்து நேர்ந்தது.

நெடுஞ்சாலையில் ஒரு சிறு விபத்துக் காரணமாக வாகனங்கள் நின்று போயின. அந்த சமயத்தில் வேகமாக வந்த கனரக வாகனம் ஒன்று கார்களில் மோதியது. அடுத்தடுத்த வாகனங்கள் வரிசையாக நின்ற வாகனங்களில் மோதின.

சம்பவத்தில் பஸ் ஒன்று தீப்பிடித்துக்கொண்டது.

விபத்து நடந்த இடத்தில் தீப்பற்றி எரிவதைக் காட்டும் படங்கள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டன.



நெடுஞ்சாலையில் அஸ்பால்ட் கலவை இடும் பணிகள் நடந்துவருவதால் அவசரச் சேவைகள் வருவதிலும் தாமதம் ஏற்பட்டது.

# 20 ஆண்டு சிறைக்குப் பின் நிரபராதியான ஆஸி. பெண்

அவுஸ்திரேலியாவில் கேத்லீன் போல்பிக் என்ற பெண் 20 ஆண்டுகள் சிறையில் கழித்த பின் தாம் குற்றமற்றவர் என்று நிரூபித்துள்ளார்.

25 ஆண்டுகளாகக் குழந்தைக் கொலையாளி என்ற பழியைச் சுமந்து வந்த அவர் அவுஸ்திரேலியாவில் மிக மோசமாக வெறுக்கப்பட்ட பெண் என்று கூறப்படுகிறது.

2003ஆம் ஆண்டு தனது மூன்று பிள்ளைகளையும் மற்றொரு பிள்ளையையும் அவர் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. உலகம் முழுதும் அந்தச் செய்தி பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது.

20 ஆண்டுகள் சிறையில் கழித்த அவர் மன்னிக்கப்பட்டு சென்ற ஜூன் மாதம் விடுதலை செய்யப்பட்டார். அவரது குற்றத்தை நிரூபிக்கப் போதிய ஆதாரங்கள் இல்லை என்று கூறி வழக்கு மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மீண்டும் விசாரிக்கப்பட்டது. அதில் அவர் குற்றமற்றவர் என்பது புலனானது.

அவுஸ்திரேலியாவின் வரலாறு காணாத அளவு அதிக தொகை அவருக்கு இழப்பீடாகக் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"நான் பட்ட துன்பம் யாருக்கும் நேரக் கூடாது. குற்றமற்றவர் என்று நிரூபிக்கும் நாள் வரும் என்று நம்பிக்கையுடன் காத்திருந்தேன்," என்கிறார் போல்பிக்.





இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 15ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# தினகரன்

## கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## பெறுகை அறிவித்தல்

## ஊவா மாகாண கல்வித் திணைக்களம்

### ஊவா மாகாண சபை

ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் வரிசை கல்வி அமைச்சின் சாதாரண கல்வி புதுப்பித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் (GEMP) கீழ் செயற்படும் கீழ்க்காணும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) பதிவுடன் தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2024.01.08 பி.ப. 2.00 வரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | வேலை இலக்கம் | கைத்தொழிலின் பெயர் | சிவில் வேலைகளின் பெறுமதி மில்லியன் | தேவைப்படும் குறைந்த பட்ச CIDA தரம் மற்றும் துறை | நிர்மாண காலம் மாதங்கள் | கேள்விப் பிணைத் தொகை ரூ. | கேள்வி ஆவணக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | ENG/ GEMP/ 1/2023/88 | ஊவா தேசிய கல்வி விஞ்ஞான பீட இருமாடி மகளிர் விடுதிக் கட்டிடம் (2nd Block) பழுது பார்த்தல் | 8.15 | C7 | 120 | 41,000.00 | 6,000.00 |
| 02 | ENG/ GEMP/ 1/2023/110 | ஊவா தேசிய கல்வி விஞ்ஞான பீட பிரதான மண்டப பழுதுபார்த்தல் | 9.58 | C6 | 120 | 48,000.00 | 6,000.00 |
| 03 | ENG/ GEMP/ 1/2023/111 | ஊவா தேசிய கல்வி விஞ்ஞான பீட 140x30 இருமாடி ஆண்கள் விடுதிக் கட்டிடம் பழுதுபார்த்தல் | 29.69 | C5 | 120 | 149,000.00 | 6,000.00 |
| 04 | ENG/ GEMP/ 1/2023/112 | ஊவா தேசிய கல்வி விஞ்ஞான பீட மகளிர் விடுதிக் கட்டிடத்தை பழுதுபார்த்தல் | 10.59 | C6 | 120 | 53,000.00 | 6,000.00 |

மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் குறைந்தபட்ச சீடா (CIDA) பதிவுடன் மற்றும் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாத வெற்றிகரமான, தகைமையுடைய கேள்விதாரர்கள் கேள்வி வழங்கலுக்காக தகைமை பெறுவர்.

03. கேள்வி மதிப்பீட்டின் போது கீழ்க்காணும் தகைமைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

I. கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் கைத்தொழிலை நிறைவேற்றி இருத்தல் அல்லது அக்கைத்தொழிலின் பெறுமதியில் 60% இற்கு மேல் கூடுதலான பெறுமதியுடைய அதற்கு சமமான கட்டிடமொன்றை நிறைவேற்றிய அனுபவம்

II. கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்படி நிர்மாண சிவில் வேலைக்கு சமமான, நடத்தி சென்ற சாதாரண வருமானம்.

III. கேள்விதாரர்கள் தற்போது நிர்மாண விடயங்களை நடத்திச் செல்கின்ற கைத்தொழில்களின் நிதி மற்றும் அக்கைத்தொழில்களின் பௌதீக முன்னேற்றம்

IV. நிதி ஆற்றல்

04. 1987 இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும். (இல.400, டி.ஆர்.விஜேவர்தன மாவத்த, கொழும்பு - 10) பதிவுச்சான்றிதழை இணைத்தல் வேண்டும். பதிவுத் சான்றிதழ் பதிவு உறுதி செய்யாத கேள்விகள் நிராகரிக்கப்படும்.

05. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் அலுவலகத்திற்கு எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து பெறுகை மாதிரிப் பத்திரங்களின் முழுமையான ஆங்கில மொழி பிரதியொன்றை 2023.12.15 முதல் 2024.01.05 வரை அலுவலக நேரங்களில் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு கேள்வி ஆவணக் கட்டணத்தை ஊவா மாகாண கல்விப் பணிப்பாளரின் பெயரில் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்திய பின்பு பெற்றுக் கொள்ள முடிவதுடன் அறவிடல் இன்றி பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. சகல கேள்வியுடனும் கேள்விப் பிணையொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும். கேள்விப் பிணையை காசாக செலுத்துவதாயின் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு சமமானதாக இருத்தல் வேண்டும். கேள்விப் பிணைக்காக அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்விப் பிணைத் தொகை போன்று இருமடங்கு பெறுமதியுடைய இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட பிணைமுறியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். இப்பிணை, கேள்விப் பத்திரத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனுமதிபெற்ற மாதிரியின் பிரகாரம் நிபந்தனையற்று கோரும் போது செலுத்தப்படும் பிணையாக இருத்தல் வேண்டும் கேள்விப் பிணைமுறி 2024.05.31 வரை செல்லுபடியாதல் வேண்டும். (கேள்விப் பிணைத் தொகையை காசாக செலுத்துவதாயின் அதனை 2024.01.05 பி.ப. 3.00 இற்கு முன்பு செலுத்துதல் வேண்டும்)

07. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் குறித்த பெறுகைக்குழுவிற்கு 2024.01.08 பி.ப. 2.00 இற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன் கேள்விப் பத்திரங்களில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்று குறிப்பிட்டு வேறுவேறாக இரு உறைகளில் இட்டு இவ் உறைகள் இரண்டையும் ஒரு கடித உறையில் இட்டு, அம் மூன்று உறைகளிலும் இடதுபக்க மேல் மூலையில் குறித்த கைத்தொழிலின் பெயரைக் குறிப்பிட்டு பொறியிட்டு, தலைவர், பெறுகைக்குழு, ஊவா மாகாண கல்வித் திணைக்களம், வெலகெதர வீதி, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். குறித்த மேலதிக விபரங்களை, ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் பாடசாலை கட்டிடப்பிரிவு (தொ.பே. இலக்கம் 055-2229635) இடம் பெற்றுக்கொள்ளலாம்.

08. நகல்பிரதி, மூலப்பிரதியின் சகல பக்கங்களும் உறுதி செய்யப்பட்ட போட்டோப்பிரதியாக இருத்தல் வேண்டும்.

09. கேள்வி செல்லுபடியாகும் காலம் 2024.03.15 பி.ப. 2.00 வரையானதாக இருத்தல் வேண்டும்.

10. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.12.27 பி.ப. 2.00 இற்கு ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

11. 2024.01.08 பி.ப. 2.00 இற்கு பதுளை, ஊவா மாகாண கல்வித் திணைக்களப் பணிமனையில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

12. கிடைக்கப்பெறும் கேள்விப் பத்திரங்களில் தகைமையான கேள்விப் பத்திரத்தை ஏற்றுக்கொள்ளல் அல்லது பூர்த்தியற்று சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திரங்களை நிராகரிக்கும் முழுமையான உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியதுடன், பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானம் ஆகும்.

**ஏ.எச்.ஆர். அமரதாச**
**பெறுகைக்குழுவின் தலைவர்**
**ஊவா மாகாண கல்வித் திணைக்களம்**
**வெலகெதர வீதி, பதுளை, தொ.பே/ பெக்ஸ் இல: 055-2222713**
**மின்னஞ்சல்: upedbuilding@gmail.com**
**2023.12.11**

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

## இலங்கைச் சுங்கம்

### சுங்கத் திணைக்களத்தின் இரத்தினக்கல் மதிப்பிடும் பிரிவிற்குத் தேவையான Portable Energy Dispersive X —Ray Fluorescence Spectrometer (EDXRF machine) கொள்வனவு செய்வதற்காக பொருத்தமான நிறுவனத்தைத் தெரிவு செய்வதற்கான பெறுகை

### தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் முறை (NCB)

சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் சார்பில் திணைக்கள (சிறியளவு) பெறுகைக் குழுவின் தலைவரினால் சுங்கத் திணைக்களத்தின் இரத்தினக்கல் மதிப்பிடும் பிரிவிற்குத் தேவையான Portable Energy Dispersive X —Ray Fluorescence Spectrometer (EDXRF machine) கொள்வனவு செய்வதற்காக பொருத்தமான நிறுவனத்தைத் தெரிவு செய்வதற்காக தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | பெறுகையின் பெயர் | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | விலைக்கோரல் இறுதி நாள் | |
|---|---|---|---|---|
| | | | திகதி | நேரம் |
| Cus/Log/S/6/30/2023 | சுங்கத் திணைக்களத்தின் இரத்தினக்கல் மதிப்பிடும் பிரிவிற்குத் தேவையான Portable Energy Dispersive X — Ray Fluorescence Spectrometer (EDXRF machine) கொள்வனவு செய்தல் | ரூபா 100,000.00 | 2024-01-05 | பி.ப. 2.00 மணி |

1. தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
2. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை சுங்கப் பணிப்பாளர் (சேவை மற்றும் வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2023-12-15ஆம் திகதி முதல் 2024-01-04ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணிவரையில் பின்வரும் முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-01-05ஆம் திகதி அல்லது அதற்கு முன்னரான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணிவரையில் 1000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி சுங்கத் திணைக்களத்தின் 06ஆம் மாடியிலுள்ள சேவை மற்றும் வழங்கல் பிரிவிற்கு எழுத்துமூலமான கோரிக்கையைச் சமர்ப்பித்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மட்டுமே செலுத்துதல் வேண்டும்.
4. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2024-01-05ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது சேவை வழங்கல் பிரிவில் இதற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2024-01-05ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பித்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்ளலாம். சகல விலைமனுக்களும் 100,000.00 ரூபாவுக்கான விலைக்கோரல் பிணை முறியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
   **சுங்கப் பணிப்பாளர் (சேவை மற்றும் வழங்கல்),**
   **6ஆம் மாடி, இலங்கைச் சுங்கம்,**
   **இல. 40, பிரதான வீதி,**
   **கொழும்பு-11**
5. விலைக்கோரலைக் கையளித்ததில் தொடர்பில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள (சிறியளவிலான) பெறுகைக் குழு,**
**இலங்கைச் சுங்கம்,**
**இல. 40, பிரதான வீதி, கொழும்பு 11.**
**தொலைபேசி இல. 011-2221680 / தொலைநகல்: 011-2436096**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

### இலங்கை போக்குவரத்து சபைக்காக புதிய ரயர் கருவிகளை வழங்கல்

**Procurement No.: MT/04/09/CT/545**

1. 2024.01.05 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் இபோச இற்கு புதிய ரயர் கருவிகளை வழங்குவதற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார். விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும். கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை,பெறுகைப் பிரிவின் பிரதான பெறுகை முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் (தொலைபேசி: 011 7706110, 0771056204, தொலைபேசி/தொலைநகல்: 011 2588457). மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணமான 150,000 ரூபாவை செலுத்திய பின்னர், 2023.12.15 ஆம் திகதியிலிருந்து 2024.01.04 ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.

| விளக்கம் | விலைமனுப் பிணை (ரூபாவில்) |
|---|---|
| Supply of 23712 Nos. (08 months requirement) New Tyre Kits to SLTB on minimum 30 days credit basis.<br><br>(48 Nos. of size 7.50 x 16,<br>3648 Nos. of size 8.25 x 20<br>19568 Nos. of size 9.00 x 20<br>448 Nos. of size 10.00 x 20) | i) For bidders offering new tyre kits of sizes 7.50 x 16, 8.25 x 20 and 10.00 x 20 only Rs. 2.5 Mn<br>ii) For bidders offering new tyre kits of sizes of sizes 9.00 x 20 only Rs.15 Mn<br>iii) For bidders offering new tyre kits of all 04 sizes Rs.17.5 Mn |

2. ரயர் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏகநியமிக்கப்பட்ட உள்ளூர் பிரதிநிதிகள் மாத்திரம் அல்லது ரயர் உற்பத்தியாளர்களில் தரஅங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் இந்த விலைமனுவிற்கு உரித்தாளர்கள் ஆவர்.
3. உள்ளூர் முன்னுரிமையானது விலைமனு மதிப்பீட்டு காரணியாகும்.
4. 2023.12.22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைப் பிரிவில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
5. விலைமனுக்கள் 2024.06.05 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். இருப்பினும், ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் திகதியிலிருந்து 8 மாத கால எல்லைக்கு சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் நிலையாகவிருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் மேலே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் 2024.07.05 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் இபோச இனால் சமர்ப்பிக்கப்படும் முதலாவது எழுத்துமூலமான கோரிக்கையின் பேரில் மாற்ற இயலாததும் நிபந்தனையற்ற வகையில் ரொக்கப் பணமாக மாற்றக் கூடியதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் பதிவு பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்காற்றல் ஆணைக்குழுவுடன் பதிவு பெற்ற காப்புறுதி முகவராண்மையொன்றினால் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
7. 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னராக ஒவ்வொரு விலைமனுதாரரும் முகவரொருவராக அல்லது பிரதிநிதியாக அல்லது எந்தவொரு விலைமனுதாரருக்கும் பெயர் குறிப்பிட்டவராக அல்லது சார்பாக இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறான மூலப்பிரதி சான்றிதழை சமர்ப்பிப்பதற்கு தவறும் விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. விலைமனு ஆவணங்களின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்பமிடப்பட்டு அவரது இலட்சினை பதிக்கப்படல் வேண்டும்.
9. விலைமனுக்கள் 2024.01.05 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இரு பிரதிகளில் பத்தரமுல்ல, II ஆம் கட்டம், ''செத்சிரிபாய", 7 ஆம் மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கணக்கிடல் பிரிவில் இந்நோக்கத்திற்காக பேணப்படும் விலைமனுப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Bid for the Supply of 23712 Nos. New Tyre Kits to SLTB" என குறிப்பிடப்படல் வேண்டும்.
10. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கணக்குப் பிரிவில் விலைமனுக்களை மூடிய பின்னர் அவைகள் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வ அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு,**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**7 ஆம் மாடி, ''செத்சிரிபாய", II ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல.**

**விசாரணைகள்:** பிரதான பெறுகை முகாமையாளர், இபோச பெறுகைப் பிரிவு, தொலைபேசி: 011 7706111, 0771956204. தொலைபேசி/ தொலைநகல்: 011 2588457

# மீரிகம பிரதேச சபை

## 2024ஆம் வருடத்தில் ஆதனங்களை குத்தகைக்கு விடுவதற்கான பிராந்திய பெறுகை அறிவித்தல்

மீரிகம பிரதேச சபைக்குரித்தான இங்கு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இறைச்சிக் கடைகள், மீன் கடைகள் மற்றும் பொது மலசலகூடங்களின் விற்பனை உரிமை மற்றும் சபைக்குரித்தான பொதுக் காணியின் விளைச்சல்களை 2024-01-01ஆம் திகதி முதல் 2024-12-31ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. கேள்விப் படிவங்கள் வழங்கப்படுதல் : 2023-12-15ஆம் திகதி முதல் 2023-12-28ஆம் திகதி வரை (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை)
    கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுதல் : 2023-12-29ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை
    கேள்விப் படிவங்கள் திறக்கப்படுதல் : 2023-12-29ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு

03. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகைகளை மீரிகம பிரதேச சபை பிரதான அலுவலகத்திற்குச் செலுத்தி கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறைந்தபட்ச கேள்வித் தொகைக்குக் குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். அவ்வாறான கேள்விதாரர்களின் கேள்விப் பிணைத் தொகை மற்றும் கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டு கேள்விகளைச் சமர்ப்பிக்காத கேள்விதாரர்களின் வைப்புத் தொகை சபைக்குரித்தாக்கப்படும்.

05. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை 2023-12-29ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். உரிய விண்ணப்பக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையை மீரிகம பிரதேச சபை பிரதான அலுவலகத்திற்குச் செலுத்தி 2023-12-28ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும் போது விண்ணப்பதாரர்கள் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து தமது ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும் என்பதுடன் இதற்கு முன் பிரதேச சபைக்குரித்தான ஆதனங்களின் விற்பனை உரிமையை குத்தகைக்கு எடுத்து உடன்படிக்கையை மீறியுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட மாட்டாது.

07. கேள்வி விண்ணப்பங்களை வெவ்வேறாகப் பூர்த்தி செய்ததன் பின் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என்பவற்றை வெவ்வேறான இரு உறைகளில் இட்டு அவ்விரு உறைகளினதும் பின்புறத்தில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையினுள் இட்டு முத்திரைக் குறி பொறித்து அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு முத்திரைக் குறியிடப்பட்ட கேள்விகளை ''செயலாளர், மீரிகம பிரதேச சபை, மீரிகம'' எனும் முகவரிக்கு 2023-12-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் மீரிகம பிரதேச சபை பிரதான அலுவலகத்திற்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

08. கேள்விகள் 2023-12-29ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீரிகம பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் இதில் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

09. உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டமையை உங்களுக்கு அறிவித்ததன் பின் 14 நாட்களுக்குள் விண்ணப்பித்த தொகையின் 50% தொகையை பாதுகாப்பு வைப்பாக சபையில் வைப்புச் செய்து உடன்படிக்கையொன்றிற்கு வரவேண்டும். இதற்குப் புறம்பாக விண்ணப்பித்த தொகையின் 50% இற்குச் சமமான ஆதன பிணையொன்றை (விளைச்சல் குத்தகை தவிர்ந்த) வைத்தல் வேண்டும்.

10. சபைக்குரித்தான பொதுக் காணிகளின் விளைச்சல்களை குத்தகைக்கு வழங்குவதானது வருடாந்தம் குத்தகைக்கு வழங்கப்படும் காணியை சபையின் ஏதாவது ஒரு பொது வேலைக்காக தேவைப்படும்போது மீளப் பெற்றுக்கொள்ளும் நிபந்தனையுடனாகும்.

11. கேள்வியை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் என்பன கேள்விக் குழுவின் தீர்மானமாகும் என்பதுடன் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

12. மேலும் விபரங்கள் தேவையானால் மீரிகம பிரதேச சபையின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு விசாரித்தறியலாம்.
    தொலைபேசி இல. 0332273206, 0332273282

**அட்டவணை**

| தொ. இல. | ஆதனங்களின் விபரம் | குறைந்த பட்ச கேள்வித் தொகை | கேள்விப் பிணை தொகை | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | மீரிகம வாரச்சந்தை மற்றும் நாளாந்த சந்தை | 2,400,000.00 | 240,000.00 | 1,000.00 |
| 02 | மீரிகம இல. 1 கோழியிறைச்சிக் கடை | 1,212,000.00 | 121,200.00 | 1,000.00 |
| 03 | மீரிகம இல. 2 கோழியிறைச்சிக் கடை | 1,303,200.00 | 130,320.00 | 1,000.00 |
| 04 | மீரிகம ஆட்டிறைச்சிக் கடை | 64,575.00 | 6,457.50 | 1,000.00 |
| 05 | மீரிகம சபைக்குரிய வாரச்சந்தை இடப்பரப்பின் மீன் தட்டு (இல. 1) | 79,275.00 | 7,927.50 | 1,000.00 |
| 06 | மீரிகம சபைக்குரிய வாரச்சந்தை இடப்பரப்பின் மீன் தட்டு (இல. 2) | 78,855.00 | 7,885.50 | 1,000.00 |
| 07 | மீரிகம சபைக்குரிய வாரச்சந்தை இடப்பரப்பின் மீன் தட்டு (இல. 3) | 78,855.00 | 7,885.50 | 1,000.00 |
| 08 | மீரிகம சபைக்குரிய வாரச்சந்தை இடப்பரப்பின் மீன் தட்டு (இல. 4) | 78,855.00 | 7,885.50 | 1,000.00 |
| 09 | மீரிகம சபைக்குரிய வாரச்சந்தை இடப்பரப்பின் மீன் தட்டு (இல. 5) | 78,855.00 | 7,885.50 | 1,000.00 |
| 10 | மீரிகம பொது நூலக சிற்றுண்டிச்சாலை | 13,755.00 | 1,375.50 | 1,000.00 |
| 11 | பழைய பஸ் நிலைய மலசலகூடம் | 12,000.00 | 1,200.00 | 1,000.00 |
| 12 | சுற்றுவட்ட மலசலகூடம் (வாரச் சந்தை இடப்பரப்பு) | 15,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 13 | லீலெண்டிவத்த மலசலகூடம் | 15,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 14 | மீரிகம சுது போதிய அருகிலுள்ள சபைக்குரித்தான பொது ஆதனம் | 1,500.00 | 150.00 | 1,000.00 |
| 15 | லீலெண்டிவத்த காணியில் கெட்டகெல மரம் அமைந்துள்ள பொதுக் காணி பகுதியின் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் (45 பேர்ச்) | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 16 | லீலெண்டிவத்த காணியில் நெல்லி மரம் அமைந்துள்ள பொதுக் காணியின் பகுதியின் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் (80 பேர்ச்) | 10,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 17 | டெனி விகபொல பாலர் பாடசாலை காணியின் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 25,000.00 | 2,500.00 | 1,000.00 |
| 18 | கீனதெனிய பொது மலசலகூடம் | 2,000.00 | 200.00 | 1,000.00 |
| 19 | நில்திய செவன பொதுக் காணி (90 பேர்ச்) குத்தகைக்கு வழங்குதல் | 7,500.00 | 750.00 | 1,000.00 |
| 20 | 08 ஏக்கர் தவசி வத்த சபைக்குரித்தான பகுதியின் தேங்காய் விளைச்சல் | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 21 | நால்ல டொனால்ட் தோட்ட குளத்திற்குரித்தான பகுதியின் தேங்காய் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 3,000.00 | 300.00 | 1,000.00 |
| 22 | கங்கொடயாய ஏலக் காணியின் தேங்காய் விளைச்சல் (22.4 பேர்ச்) | 3,000.00 | 300.00 | 1,000.00 |
| 23 | அடுபே மொட்டவெவவத்த 1ஆம் கட்டம் சபைக்குரித்தான பகுதியின் தேங்காய் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் (01 ஏக்கர் 2.68 பேர்ச்) 04 தென்னை மரங்கள் | 15,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 24 | வல்போதலே கிறீன்விலேஜ் 1ஆம் கட்ட சபைக்குரித்தான 1ஆம் கட்டம் 17 பகுதியின் தேங்காய் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் (01 ஏக்கர்) 08 தென்னை மரங்கள் | 7,500.00 | 750.00 | 1,000.00 |
| 25 | தெமட்டவத்த மெதவத்த சபைக்குரித்தான பகுதியின் தேங்காய் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் (120 பேர்ச்) 07 தென்னை மரங்கள் | 10,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 26 | தெத்னாகம பொரலுகொட எஸ்டேட் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் (17 பேர்ச்) | 3,000.00 | 300.00 | 1,000.00 |
| 27 | கண்டலம பின்னகொல்ல தோட்டத்தை குறுகிய கால பயிர்ச்செய்கை (37.7 பேர்ச்) குத்தகைக்கு வழங்குதல் | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 28 | கண்டலம மினிமலுவ பன்சலவிற்கு முன்னாலுள்ள காணி இசுறு ஏல ஆதன ஏலக் காணியின் பொது பகுதியின் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் (43 பேர்ச்) | 2,500.00 | 250.00 | 1,000.00 |
| 29 | மதுருபிட்டிய நாசெவன வத்த (60 பேர்ச்) குறுகிய கால பயிர்ச்செய்கைக்கு குத்தகைக்கு வழங்குதல் | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 30 | நால்ல உலுகெதரவத்த (82 பேர்ச்) குறுகிய கால பயிர்ச்செய்கைக்கு | 4,000.00 | 400.00 | 1,000.00 |
| 31 | நால்ல ஹைவே சிட்டி (47 பேர்ச்) 01 தென்னை மரம் குறுகிய கால பயிர்ச்செய்கைக்கு | 15,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 32 | நால்ல சிட்டிகேட் தோட்ட (33 பேர்ச்) குறுகிய கால பயிர்ச்செய்கைக்கு | 7,500.00 | 750.00 | 1,000.00 |
| 33 | நால்ல நிக்ஸ்போட் குறூப் (120 பேர்ச்) குறுகிய கால பயிர்ச்செய்கைக்கு | 10,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 34 | நால்ல ஜம்புகஹா தோட்டம் (50 பேர்ச்) ஒரு தென்னை மரம் குறுகிய கால பயிர்ச்செய்கைக்கு | 3,000.00 | 300.00 | 1,000.00 |
| 35 | நால்ல கொஸ்கஸ் தோட்டம் (20 பேர்ச்) குறுகிய கால பயிர்ச்செய்கைக்கு | 3,000.00 | 300.00 | 1,000.00 |
| 36 | லோலுவாகொட ரன்முசு உயன (50 பேர்ச்) விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 37 | மஹாமோருவத்த, நால்ல கென்ரிச் காணியில் சபைக்குரித்தான பொதுக் காணியின் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 4,000.00 | 400.00 | 1,000.00 |
| 38 | லோலுவாகொட கிராமத்தில் அமைந்துள்ள அரங்கட (வாகொட வத்த எஸ்டேட்) சபைக்குரித்தான பொதுக் காணியின் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 15,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 39 | நியதஹலவத்த லோலுவாகொட (33.2 பேர்ச்) குறுகிய கால பயிர்ச்செய்கை | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 40 | வல்போதலேவத்த கடுவகெலே (3 ரூட், 11.90 பேர்ச்) தென்னங்கன்று பயிர்ச்செய்கை சகிதம் குறுகிய கால பயிர்ச்செய்கை | 15,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 41 | பாதுராகொட ஏகாம்பரம்வத்த கிராம சபைக்குரித்தான பகுதியின் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 10,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 42 | வேபடமுல்ல ரெக்கல்ல தோட்ட (தரிசு நிலம்) காணியை குறுகிய கால பயிர்ச்செய்கைக்கு குத்தகைக்கு வழங்குதல் | 7,500.00 | 750.00 | 1,000.00 |
| 43 | வேபடமுல்ல காக்கெலேவத்த சபைக்குரித்தான பகுதியின் தேங்காய் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் (04 தென்னை மரங்கள்) | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 44 | பிரன்க்ளென் தோட்டம் சபைக்குரித்தான பகுதியின் தென்னை விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் (1 ஏக்கர், 14 தென்னை மரங்கள்) | 10,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 45 | பல்லலேவெல உப அலுவலகத்தின் காணியின் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 46 | நுங்கமுவ சிசில் செவன காணியின் சபைக்குரித்தான பகுதியின் தேங்காய் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் (06 தென்னை மரங்கள் தரிசு நிலம்) | 3,000.00 | 300.00 | 1,000.00 |
| 47 | உடுகம ஜேதவன தோட்ட காணியின் சபைக்குரித்தான பகுதியின் தேங்காய் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் (75 பேர்ச்) 15 தென்னை மரங்கள் | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 48 | கும்பல்ஒலுவ ஏலக்காணியின் சபைக்குரித்தான பகுதியின் தேங்காய் விளைச்சல் (.52 பேர்ச்) 10 தென்னை மரங்கள் | 7,000.00 | 700.00 | 1,000.00 |
| 49 | கும்பல்ஒலுவ தோட்டக் காணியின் சபைக்குரித்தான பகுதியின் தேங்காய் விளைச்சல் (.58 பேர்ச்) 11 தென்னை மரங்கள் | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 50 | மதரபிடிகொடெல்ல காணியில் சனசமூக நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (15 பேர்ச்) குறுகிய கால பயிர்ச்செய்கைக்கு குத்தகைக்கு வழங்குதல் | 3,000.00 | 300.00 | 1,000.00 |
| 51 | பனாவல கிராமத்தில் அமைந்துள்ள பனாவலவத்த பொதுக் காணியின் (ஹோம்லேண்ட் நிறுவனத்தினால் ஏலமிடப்பட்ட காணியின் பொதுக் காணி) விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 52 | பனாவல கிராமத்தில் அமைந்துள்ள தம்ரோவத்த சபைக்குரித்தான பொதுக் காணி | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 53 | குரீகொட்டுவ கிராமத்தில் அமைந்துள்ள பிரைம் யுனிக் சபைக்குரித்தான ஆதனத்தின் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 10,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 54 | ஹங்ஜபொலயில் அமைந்துள்ள வின்டிரோஸ்வத்த சபைக்குரித்தான ஆதனத்தின் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 55 | குரீகொட்டு கிராமத்தில் அமைந்துள்ள நிக்கொல்லவத்த பொதுக் காணியின் (பிரைம் 1, 11, 111) விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 10,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 56 | பனாவல கிராமத்தில் அமைந்துள்ள டபிள்யூ.பீ. ரூப்பசிங்க அவர்களால் ஏலமிடப்பட்ட புதிய காணி | 10,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 57 | கீனவல ஹரிதஉயன சபைக்குரித்தான பகுதியின் தேங்காய் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 58 | கீனவல எஸ்டேட்டை குத்தகைக்கு வழங்குதல் (34 பேர்ச்) 02 தென்னை மரங்கள் | 1,500.00 | 150.00 | 1,000.00 |
| 59 | வேவல்தெனிய துத்திரிஹேன தோட்டத்தின் சபைக்குரித்தான பகுதியின் தேங்காய் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 25,000.00 | 2,500.00 | 1,000.00 |
| 60 | தங்கோவிட்ட மடபாவிட (சியம்பலகஹ தோட்டம், தொடில்லகஹ தோட்டம், அம்பகஹ தோட்டம்) சபைக்குரித்தான பகுதியின் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் - 03 தென்னை மரங்கள், 02 காட்டு ஈரப்பலா, 01 பலா மரம் (சரிவுடன் உள்ள காணி) | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 61 | மக்கதிகொட பொல்ஹேன எஸ்டேட் (18 பேர்ச் - 24 தென்னை மரங்கள்) சபைக்குரித்தான பகுதியின் தேங்காய் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 15,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 62 | ரதாவடுன்ன ஹெடிதெனிகந்த பொல்ஹேனவத்த 23.75 பேர்ச். (01 கஜு மரம், 2 தென்னை மரங்கள்) விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 63 | வேவல்தெனிய இஹலகம தெஹிகங்க கும்புரவத்த (10 பேர்ச்) விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 3,000.00 | 300.00 | 1,000.00 |
| 64 | வேவல்தெனிய பஹலகம தெல்கஹவத்த மற்றும் கலபடவத்த கோம்பகஹவத்த (25.9 பேர்ச்) குத்தகைக்கு வழங்குதல் | 1,000.00 | 100.00 | 1,000.00 |
| 65 | தங்ஓவிட்ட குருந்துவத்த (30 பேர்ச்) வெற்றுக் காணியை குத்தகைக்கு வழங்குதல் | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 66 | தங்ஓவிட்ட மடபாவிட்ட ஹவ்லாகல கந்த (18 பேர்ச்) குத்தகைக்கு வழங்குதல் | 1,500.00 | 150.00 | 1,000.00 |
| 67 | தங்ஓவிட்ட மடபாவிட்ட ஹவ்லாகல கந்த (27 பேர்ச்) குத்தகைக்கு வழங்குதல் | 1,500.00 | 150.00 | 1,000.00 |
| 68 | வேவல்தெனிய இஹலகம தெல்கஹவத்த எனும் முல்லதெனிய தோட்டம் (25 பேர்ச்) விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 69 | மடபாவிட்ட கொன்னகஹலந்த எனப்படும் ஹொரகஸ்மங்கட ஆசிரிபுர காணியின் (38.95) விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 70 | எல்ல முல்ல வேலபடவத்த (27.5 பேர்ச்) விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 3,000.00 | 300.00 | 1,000.00 |
| 71 | தங்ஓவிட்ட குருந்துவத்த (1 றூட், 8.55 பேர்ச்) விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 72 | வீரசூரிய கந்த, வீரசூரிய கந்த எஸ்டேட் (3 ரூட், 1.9 பேர்ச்) விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 15,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 73 | வீரசூரிய கந்த, வீரசூரிய கந்த எஸ்டேட் (24.5 பேர்ச்) விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 74 | ஹெடிதெனிகந்த, கந்தகெலேவத்த (19.7 பேர்ச்) விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 2,000.00 | 200.00 | 1,000.00 |
| 75 | வேவல்தெனிய பஹலகம (ஹெப்பிலேண்ட் எஸ்டேட்) (34.85 பேர்ச்) விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 6,000.00 | 600.00 | 1,000.00 |
| 76 | லோலுவாகொட கெமிலஸ்வத்த (2ஆம் கட்டம்) தம்ரோ நிறுவனத்திற்கு அருகிலுள்ள காணியின் தேங்காய் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 77 | லோலுவாகொடயில் அமைந்துள்ள வளவ்வத்த (45 பேர்ச்) எனப்படும் குருந்துவத்த | 5,000.00 | 500.00 | 1,000.00 |
| 78 | சத்துட்டு உயன சபைக்குரித்தான பொதுக் காணி | 5,000.00 | 500.00 | 1,000.00 |

❖ வாரச்சந்தை, நாளாந்தச் சந்தை, இறைச்சிக் கடைகள் மற்றும் மீன் வாடிகளுக்கான கேள்விகளைப் பெற்றுக்கொள்பவர் அவர்களே நீர்க் கட்டணம் மற்றும் மின்சாரக் கட்டணப் பட்டியல்களைச் செலுத்துதல் வேண்டும்.

❖ மலசலகூட முறைமைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் நீர்க் கட்டணம், மின்சாரக் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் கலி பவுசர் மூலம் இயைபுடைய சேவைகளை செய்து கொள்ளல் வேண்டும்.

**பீ.ஜீ.என்.பி. ஜசின்தா,**
**செயலாளர் மற்றும் அதிகாரம் வாய்ந்த கடமைகளை**
**நிறைவேற்றும் அதிகாரி,**
**மீரிகம பிரதேச சபை.**

# பெறுகை அறிவித்தல்

## பேலியகொடை நகர சபை

பேலியகொடை நகர சபைக்கு சொந்தமான நவலொக்க வைபவ மண்டபத்திற்காக கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மேசை மற்றும் கதிரைகளை வழங்குவதற்கு தகுதியுடையவர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வரிசை இலக்கம் | தேவையான பொருட்கள் | அளவு | வைப்புத் தொகை (மீளளிக்கப்படும்) | படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) |
|---|---|---|---|---|
| 01 | வைபவ மண்டப கதிரைகள் | 180 | ரூபா 1,300.00 | ரூபா 500.00 |
| 02 | வைபவ மண்டப மேசைகள் (10 கதிரைகள் வைக்கக் முடியுமான வட்ட மேசை) | 18 | ரூபா 700.00 | ரூபா 500.00 |

வழங்கல்களை மேற்கொள்வதற்காக உங்களது முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023.12.15 ஆம் திகதி தொடக்கம் 2023.12.29 ஆம் திகதி வரை பி.ப. 3.00 வரை என்னால் ஏற்கப்படும். விலைமனுக்களை திறப்பது 2023.12.29 ஆம் திகதி பி.ப. 3.00 க்கு பேலியகொடை நகர சபை அலுவலக வளவில் மேற்கொள்ளப்படுவதோடு அந்த சந்தர்ப்பத்திற்கு நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

1. இது தொடர்பில் குறித்த விண்ணப்பப் படிவங்கள் பிணை வைப்பு மற்றும் படிவக் கட்டணத்தை செலுத்திய பின் 2023.12.28 ஆம் திகதி பி.ப. 3.00 வரை பேலியகொடை நகர சபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
2. அலுவலகத்தினால் வழங்கப்படுகின்ற விண்ணப்பங்களை 02 பிரதிகளைக் கொண்டதாக தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு உறைகளில் வலது மற்றும் மேல் மூலையில் "மூலப் பிரதி" மற்றும் "நகல் பிரதி" என குறிப்பிட்டு அந்த உறைகள் 02ஐயும் ஒரு உறையில் இட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் "வைபவ மண்டபத்திற்காக மேசை கதிரை வழங்கல்" என்று குறிப்பிட்டு 2023.12.29 ஆம் திகதி பி.ப. 3.00 க்கு முன்னர் செயலாளர், பேலியகொடை நகர சபை, பேலியகொடை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு கொண்டுவந்து இடுவதற்கு முடியும்.
3. இது தொடர்பில் குறித்த வளாகத்தை பரீட்சிப்பதற்கு அலுவலக நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை வருகை தர முடியும்.
4. வைபவ மண்டப மேசை மற்றும் கதிரையை வழங்குவது தொடர்பில் 05 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதோடு வழங்கும் பொருட்களுக்கு 03 ஆண்டுகளுக்கு மேல் உத்தரவாதக் காலம் ஒன்று பெற்றுத்தருதல் வேண்டும்.
5. அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர் கொள்வனவுக் கோரல் கிடைத்து 02 வாரங்களுக்குள் குறித்த உபகரணங்களை வழங்கி குறித்த இடங்களில் பொருத்துதலை மேற்கொள்ளல் வேண்டும் என்பதோடு அதன் பின்னர் பணக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.
6. இந்த அறிவித்தல் நிபந்தனைகள் மற்றும் மற்ற ஆவணங்கள் இந்த அறிவித்தலில் ஒரு பகுதியாக கருத்தில் கொள்ளல் வேண்டும்.
7. நிறுவனங்களால் முன்வைக்கப்படும் விலைமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை மற்றும் பெறுகை தொடர்பில் எடுக்கப்படும் இறுதி முடிவு பேலியகொடை நகர சபை வசமானதாகும்.
8. மேலதிக விபரங்களை தேவையெனில் அலுவலக நேரங்களில் இந்த அலுவலகத்திற்கு வந்து அல்லது 011-2911105 என்ற தொலைபேசி இலக்கத்தில் பெறுகை அதிகாரியை அழைத்து பெற்றுக்கொள்ள முடியும்.

**2023.12.15**
**பேலியகொடை நகர சபை**
**011-2911105**

**கே. தரங்கா கம்லத்**
**நகர சபை செயலாளர் மற்றும் பேலியகொடை நகர சபையின் அதிகாரம், பணிகள், செயற்பாடுகளை செயற்படுத்தும் அதிகாரி**
**பேலியகொடை நகர சபை**

# தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்

## பாதுகாப்பு அமைச்சு

## வெற்றிடங்கள்

### மட்டுப்படுத்தல் நடவடிக்கை மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைக்கும் திட்டம் (RLVMMP) AIIB மூலம் நிதியளிக்கப்பட்டது

ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) மூலமான நிதியளிக்கப்பட்ட மட்டுப்படுத்தல் நடவடிக்கை மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைக்கும் திட்டத்தின் (RLVMMP) திட்ட முகாமைத்துவ பிரிவுக்காக (PMU) பின்வரும் நிலைக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பாதுகாப்பு அமைச்சின் கீழ் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் இந்தத் திட்டத்தை செயல்படுத்தும் நிறுவனமாகும். பதுளை, கண்டி, மாத்தளை, கேகாலை, இரத்தினபுரி, நுவரெலியா, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் குருநாகல் மாவட்டங்களின் நிலச்சரிவை குறைக்கும் வேலைகள் (இடங்கள்) மற்றும் ரயில் தண்டவாளத்தை ஒட்டிய உறுதியற்ற இடங்கள் இந்தத் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்படும். கட்டம் 1இன் கீழ் அச்சுறுத்தலான 24 தளங்கள் மட்டுப்படுத்தப்படும்/ சீராக்கப்படுவதோடு கட்டம் 11இல் சமநிலைத் தளங்கள் மட்டுப்படுத்தப்படும்/ சீராக்கப்படும்.

1. **உள்ளக கணக்காய்வாளர்** (PS4 – 1 பதவி)
   1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணி பட்டத்தை வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தல்

      அல்லது

      தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு இணையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தகைமை

      அல்லது

      தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட இணை அங்கத்துவம்/ அதனையொத்த தகைமையை பெற்றிருத்தல்

      அத்துடன் தொடர்புடைய துறையில் குறைந்தது 8 ஆண்டுகள் தகைமைக்குப் பின்னரான அனுபவம்.
   2. குறைந்தது 8 ஆண்டுகள் வகுப்பு III/II பதவியில் அனுபவத்துடன் அரச கணக்கு சேவை வகுப்பு III/II இன் அதிகாரி ஒருவராக இருத்தல். வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களில் உள்ளக கணக்காய்வு அனுபவம் விரும்பத்தக்கதாகும்.

**பொது நிபந்தனைகள்**

ஒப்பந்த அடிப்படையில் ஓர் ஆண்டுக்காக ஆரம்ப ஆட்சேர்ப்பு அமைவதோடு அதனைத் தொடர்ந்து திருப்திகரமான செயல்திறனைப் பொறுத்து ஆண்டுதோறும் புதுப்பிக்கத்தக்கது.

01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின்படி பதவிக்கான சம்பளங்கள் மற்றும் மற்ற நிபந்தனைகள் அமையும்.

மாதச் சம்பளத்தின் ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. இற்கு தொழில் வழங்குநர் 12% மற்றும் 3% பங்களிப்புச் செய்வதோடு ஊ.சே.நி. இற்காக ஊழியர் 8% பங்களிப்புச் செய்வார்.

விண்ணப்பங்கள் மூடப்படும் திகதியில் 65 வயதுக்குள் இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களை அனுப்புதல்:**

தகுதியுடைய அபேட்சகர்கள் இந்த விளம்பரத்தின் 10 நாட்களுக்குள் தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் இரு உறவினர் அல்லாத நடுவர்களின் பெயர்கள் மற்றும் தொடர்பு விபரங்களோடு பூர்த்தி செய்யப்பட்ட சுயவிபரக்கோவையுடன் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிப்பதற்கு கோரப்படுகின்றனர்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு கீழுள்ள முகவரிக்கு கிடைப்பதற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்**
**மட்டுப்படுத்தல் நடவடிக்கை மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைக்கும் திட்டம் (RLVMMP)**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்**
**99/1, ஜாவத்த வீதி, கொழும்பு 05**

தொ.பே.: 0112559869

### மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

**1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம்**

**பிரிவு 55**

மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில் வல்கம வபக்கு என்னும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 820013 கண்ட இல. 03 பத்திர இல. 01 துண்டு இல. 304ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 119/2, சித்ரா ஒழுங்கை, வல்கம, மாத்தறை (விலாசம்) எனும் விலாசத்தைக் கொண்ட சமிந்த திலான் ராஜபக்ஷ விதான கமகே (முழுப்பெயர்) எனும் ஆள் 2022.01.22 மரணமடைந்துள்ளார் அவரது உரித்தாளர் எவரேனும் இல. 360, பல்லிமுள்ளை, மாத்தறை என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 2024.01.15ஆந் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

### சன்வின் அடகு நிலையம்

**பொரலஸ்கமுவ கிளை**

**வியாபார நடவடிக்கைகளை முடிவுறுத்தல்**

பொரலஸ்கமுவ, கொழும்பு வீதி, இல 03 எனுமிடத்தில் நடத்திச் செல்லப்படும் சன்வின் அடகு நிலையத்தை 2023 டிசெம்பர் 31 முதல் வியாபார நடவடிக்கைகளை முடிவுறுத்துவதாக கவலையுடன் அறிவிக்கின்றோம். வாடிக்கையாளர்களாக உங்களுக்கு ஏற்படும் சிரமத்திற்காக கவலைப்படுவதுடன் உங்களது மீட்கப்படாத அடகுப் பொருட்களை மீட்டுக்கொள்வதற்காக நிறுவனத்தில் இருந்து விபரங்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

**மேலதிக விபரங்களுக்கு தொ.பெ. இல**
**0112725342 / 0112518861**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

### மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

**1998 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம்**

**பிரிவு 55**

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் பிட்டிப்பன என்னும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 520006 பத்திர இல. 0036 துண்டு இல. 0036 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த 556/1/42, 5ஆம் ஒழுங்கை, பிட்டிப்பன நகரம், ஹோமாகம (விலாசம்) என்னும் விலாசத்தைக் கொண்ட யஹம்பத் ஆராய்ச்சிகே டோனா மில்லி பத்மினி (முழுப் பெயர்) என்னும் ஆள் 2010.09.05 ஆம் திகதியன்று மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் ஹோமாகம புகையிரத நிலைய வீதி, 1ஆம் ஒழுங்கை 6ஆம் இலக்கம் என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 2023.12.22 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**

### மரணசாசனமில்லாத சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

**1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம் பிரிவு 55**

கொழும்பு மாவட்டத்தின் இரத்மலானை பிரதேச செயலாளர் பிரிவில் கல்கிஸை எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 521004 துண்டு இல. 02 பத்திர இல. 01 துண்டு இல. 193 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த

**இல. 10/4, விஹார வீதி, கல்கிசை எனும் விலாசத்தைக் கொண்ட விக்ரம சூரிய மஹமாலகே குமாரதாச அபொன்சு**

எனும் ஆள் மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினம் முதல் எதிர்வரும் ஒரு மாதம் கடந்து செல்லும் முன் இல. 5/3, 3ம் லேன் இரத்மலானை என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு சமுகம் தரவும்

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

Repeat Your Ad For Better Offers

GOVERNMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

MINISTRY OF TRANSPORT & HIGHWAYS

## ROAD DEVELOPMENT AUTHORITY

### INVITATION FOR BIDS

| NO. | CONTRACT NAME |
|---|---|
| 1 | Improvement of Kinnaiyady Road, in Batticaloa. |
| 2 | Improvement of Mavadivembu Road, in Batticaloa. |
| 3 | Improvement of Boartvady Road, Nediyamadu School Cross Road, School Ground Cross Road, Kaluvankerny in Batticaloa. |

Bids are hereby invited for above works under the National Competitive Bidding procedure. Interested bidders are requested to refer the RDA and Ministry of Transport and Highways, Web page on **www.rda.gov.lk** from 15.12.2023 to 20.12.2023.

## மன்னிப்புக்கோரல்

இல.173/B, போகம் 05 கோமரன்கல்ல, கலென்பிந்துனுவெவ முகவரியில் வசிக்கும் ஏக்கநாயக்க முதியன்சேலாகெ நயோமி சுரங்கிகா ஏக்கநாயக்க ஆகிய நான், 2023.03.23ம் திகதி செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி மருந்தகத்தை நடத்திச் சென்ற காரணத்தினால் கஹட்டகஸ்திகிலிய கௌரவ நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதால் தண்டனை விதிக்கப்பட்டதாகவும் அதன் காரணமாக பொது மக்களுக்கு ஏதேனும் சிரமங்கள் ஏற்பட்டிருப்பின் அதுபற்றி மன்னிப்பு கோருவதாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இல.07, இஹலகம கலென்பிந்துனுவெவ என்ற முகவரியில் வசிக்கும் மல்கி தேவிந்திகா லக்மாலி செனவிரத்ன ஆகிய நான், 2023.03.23ம் திகதி மருத்துவ சிட்டை இன்றி மருந்துகளை விநியோகித்தல் மற்றும் மருந்தாளரால், மருந்துகள் விநியோகிக்கப்படாமை போன்ற விடயங்களுக்காக கஹட்டகஸ்திகிலிய கௌரவ நீதவான் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டதால் தண்டனை விதிக்கப்பட்டதாகவும் அதன் காரணமாக பொது மக்களுக்கு ஏதேனும் சிரமங்கள் ஏற்பட்டிருப்பின் அதுபற்றி மன்னிப்புக்கோருவதாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அபிவிருத்தி லொத்தர் சபை

**நிதி அமைச்சு**

### விலைமனுவிற்கான அழைப்பு

**மின்னல் பாதுகாப்பு முறையை வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல்**

**விலைமனு இல.:** DLB/PRO/2023/31

01. அபிவிருத்தி லொத்தர் சபைக்காக மின்னல் பாதுகாப்பு முறையை வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் ஆகியவற்றிற்காக ஆர்வமும் தகுதியுமுடைய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பாக கீழ்மட்ட பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
02. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறைக்கமைவாக நடாத்தப்படும்.
03. 2023.12.15 ஆம் திகதியிலிருந்து 2024.01.03 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக (15% பெசேவ அடங்கலாக) 2,300 ரூபாவை செலுத்திய பின்னர், கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர் த சில்வா மாவத்தை (யூனியன் பிளேஸ்), 356 ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகை பிரிவிற்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று இலவசமாக பரீட்சிக்கப்பட்டு கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
04. விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ளவாறு விலைமனுக்கள் விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
05. விலைமனுக்கோரல் ஆவணங்களில் தேவைப்படுத்தப்பட்டவாறு அனைத்து விபரமான தகவலையும் விலைமனுதாரர்கள் வழங்கல் வேண்டும்.
06. கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர் த சில்வா மாவத்தை (யூனியன் பிளேஸ்), 356 ஆம் இலக்கத்தின் அபிவிருத்தி லொத்தர் சபையில் 2023.12.22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு தள விஜயம் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
07. விலைமனு நிபந்தனைகளின் பிரகாரம், விலைமனுக்கள் இரு பிரதிகளில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Supplying , Installation and Commissioning of Lightning Protection System" என குறிப்பிடப்பட்டு 2024.01.04 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு பிந்தாமல் தலைவர், கீழ்மட்ட பெறுகைக் குழு, அபிவிருத்தி லொத்தர் சபை, 356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, கொழும்பு-02, இலங்கை என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் எந்தவொரு விலைமனுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
08. விலைமனுக்கள் பதிவுத் தபால் மூலம் 2024.01.04 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர் த சில்வா மாவத்தை, 356 ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் கீழ்மட்ட பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024.01.04 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு மூடப்பட்டு விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மூடும் நேரத்தின் பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
09. www.dlb.lk என்ற அபிவிருத்தி லொத்தர் சபையின் இணையதளத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பார்வையிடலாம்.

**தலைவர்,**
**கீழ்மட்ட பெறுகைக் குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை**
**(யூனியன் பிளேஸ்),**
**கொழும்பு-02.**

தொலைபேசி: 011 4824824
www.dlb.lk
15.12.2023

## இலங்கை வங்கி

### ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 22ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

1. கடன் தொடர்பு இலக்கம் - 88155374, 88156274

இல. 456, கனஹேன, பத்தரமுல்ல என்ற முகவரியிலுள்ள சுபாஸ் அன்ட் சேச்சில் கார் சென்ரர் நிறுவனத்தின் கடன் பொறுப்புகளுக்காக இல. 456, கனஹேன, பத்தரமுல்ல என்ற முகவரியில் அமைந்துள்ள ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.10.27 ஆம் திகதிய 2356ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.10.24 ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய முதல் நிலுவையையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T & H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. துசித்த கருணாரத்ன அவர்கள் 2024.01.08ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை

கனேவத்தை என அறியப்படும் கனஹேன என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.என்.ஏ. அல்விஸ் தயாரித்த 2018.09.25ஆம் திகதிய 6953ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு X1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி இல. 186/B, கடுவெல வீதி எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் ஹேவாகம் கோரளை, பள்ளே பற்று, கடுவெல மாநகரசபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைகட்குட்பட்ட 492B பத்தரமுல்ல வடக்கு கிராம சேவகர் பிரிவிலுள்ள கடுவெல வீதி மருங்கில் பத்தரமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ளது. வடக்கில் கடுவெல வீதி, காணித்துண்டு X2 என்பவற்றையும் கிழக்கில் காணித்துண்டுகள் X2, X3 என்பவற்றையும் தெற்கில் காணித்துண்டு X3ஐயும் மேற்கில் பாதை, கடுவெல வீதி என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி 6953ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினேழு தசம் ஒன்பது பூச்சியம் (A0.R0.P17.90) பேர்ச்சுகள் அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் நான்கு ஐந்து மூன்று (0.0453) ஹெக்டயர் பரப்பளவையும் அதனகத்துக் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளதோடு ஹோமாகம காணிப் பதிவகத்தில் B 345/113 என்ற இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கனேவத்தை என அறியப்படும் கனஹேன என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.என்.ஏ. அல்விஸ் தயாரித்த 2018.09.25ஆம் திகதிய 6953ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு X3 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி இல. 186/1, கடுவெல வீதி எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் ஹேவாகம் கோரளை, பள்ளே பற்று, கடுவெல மாநகரசபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைகட்குட்பட்ட 492B பத்தரமுல்ல வடக்கு கிராம சேவகர் பிரிவிலுள்ள கடுவெல வீதி மருங்கில் பத்தரமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ளது. வடக்கில் காணித்துண்டுகள் X1, X2 மற்றும் வீதி என்பவற்றையும் கிழக்கில் வீதி மற்றும் 1321ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 2 என்பவற்றையும் தெற்கில் 1321ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 2 மற்றும் வீதி என்பவற்றையும் மேற்கில் வீதி மற்றும் காணித்துண்டு X1 என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி பன்னிரண்டு தசம் மூன்று ஐந்து (A0.R0.P12.35) பேர்ச்சுகள் அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் மூன்று ஒன்று இரண்டு (0.0312) ஹெக்டயர் பரப்பளவையும் அதனகத்துக் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளதோடு ஹோமாகம காணிப் பதிவகத்தில் B 1587/62 என்ற இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணம் செலுத்தும் முறை : ஏலத்தில் வெற்றிபெறுபவர் ஏலம்கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையிலிருந்து 10% (பத்து வீதம்)
2. VAT கட்டணங்கள் (பொருத்தமாயின்)
3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்)
4. ஏலதாரருக்கான தரகுப் பணமாக 2.5% (இரண்டு தசம் ஐந்து வீதம்)
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்
6. பிற கட்டணங்களும் அறவீடுகளும்

ஏலம் நடைபெற்றதிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% (பத்து வீதத்தை) செலுத்த வேண்டும் என்பதோடு விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% (எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும். மேலும், விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வனவாளர் செலுத்த வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காதவிடத்து ஏல நாளன்று செலுத்தப்பட்ட அனைத்துப் பணங்களையும் செல்லுபடியற்றதாக அறிவித்து ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.
ஆதனத்தைச் சென்றடையும் வழி : கடுவெல வீதி என அறியப்படும் புதிய கொழும்பு – கண்டி வீதியிலுள்ள பத்தரமுல்ல பேருந்து நிலையத்திலிருந்து கடுவெல நோக்கி 750 மீற்றர்கள் பயணித்தால் பத்தரமுல்ல கூட்டுறவுச் சங்கத்துக்கு நேரெதிராக வீதியின் வலது புறத்தில் ஆதனங்கள் இருக்குமிடத்தை அடையமுடியும். காணித்துண்டு X1 ஆனது அதன் வடக்கு எல்லையையும் வீதியையும் நோக்கியவாறு அமைந்திருக்க காணித்துண்டு X3 அதன் கிழக்கு மற்றும் மேற்குப் புற எல்லைகளையும் வீடுகளுக்குச் செல்லும் உட்பாதைகளையும் நோக்கியவாறு காணித்துண்டு X1இற்குப் பின்புறம் அமைந்துள்ளது. மாலபே சந்தியிலிருந்து புதிய கொழும்பு – கண்டி வீதியினூடாக 3.7கி.மீ பயணித்தும் இவ்வாதனங்களை அடைய முடியும். இவ்வழியில் வரும்போது ஆதனங்கள் வீதியின் இடதுபுறத்தே அமைந்திருக்கும். இவ்வாதனங்களுக்கு இட்டுச் செல்லும் பாதைகள் அரசினதும் தனியாரதுமாக இருப்பதோடு மோட்டார் வாகனத்தில் பயணிக்கக்கூடிய வசதியையும் பாதை ஒதுக்கங்கள் மீதான வழியுரிமையையும் கொண்டுள்ளன.

"ஏலவிலைகூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் தலைநகரக் கிளையின் அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வைப் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளரைத் தொடர்புகொள்வதன் மூலம் பார்வையிட முடியும். தொலைபேசி இலக்கம் - 0112329087"

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.

**W.M.H.A.S.S.B. ஏக்கநாயக்க**
**சிரேஷ்ட முகாமையாளர்**
**அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வை**

**இலங்கை வங்கி**
**தலைநகரக் கிளை**
**திகதி:**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## வெற்றிடங்கள்

**கழிவுபொருள் முகாமைத்துவ அதிகாரசபை (மேல் மாகாணம்)**

### உதவிப் பணிப்பாளர் (சட்டம்) – நிரந்தர

பதவிக்காக கீழே காணப்படும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சம்பள அளவு:** ரூ. 53,175 - 10 x 1375 - 15 x 1,910 - 95,575 - MM 1-1 மற்றும் அரசின் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

**கல்வித் தகைமைகள்:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் LLB பட்டத்துடன்

**அனுபவம்:** சட்டத்தரணியாக இரண்டு வருட (02) அனுபவம்.

**வேறு விடயங்கள்:**
1. இது நிரந்தர நியமனமாகும் 03 வருட தகுதிக்கான காலத்திற்கு உட்பட்டது.
2. சேர்த்துக் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் அடிப்படை சம்பளத்தில் 10% ஊழியர் சேமலாப நிதிக்கு அவர்களால் செலுத்தப்பட வேண்டியதுடன் (15% ஊழியர் சேமலாப நிதிக்கும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கும்) அதிகார சபையினால் செலுத்தப்படும்.
3. சேர்த்துக் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகள் நிறுவன நிதிக்கோவை, மேல் மாகாண நிதி சட்டதிட்டங்கள், மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு கட்டளைகள், இலங்கை அரசினால் அல்லது மேல்மாகாண சபையினால் விதிக்கப்பட்டுள்ள அல்லது அவ்வவ்போது விதிக்கப்படுகின்ற கட்டளைகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கு இணங்குதல் வேண்டும்.

**சேர்த்துக் கொள்ளும் முறை:**
கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபையின் தலைவரால் கோரப்படும் நேர்முகத் தேர்வு சபையின் முன்னிலையில் நேர்முகத்தேர்விற்கு உட்படுத்தப்படும். தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள், முறையாகப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் விண்ணப்பங்கள் கிடைத்ததாக அல்லது நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்படமாட்டாது.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை:**
தமது விபரங்கள் அடங்கிய உங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2024.01.01ம் திகதி அல்லது அதற்கு முன் கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபை (மே.மா) தும்போவில, கரதியான, பிலியந்தலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

தற்போது அரச / மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் தமது சேவைத் தலைமையூடாக அனுப்புதல் வேண்டும்.

நேர்முகத்தேர்விற்காக சமுகமளித்தல் சார்பாக எந்த கொடுப்பனவுகளும் செலுத்தப்படமாட்டாது. அத்துடன் எந்த விதத்திலும் நேர்முகத் தேர்வு சபைத் தீர்மானத்திற்கு வற்புறுத்தல்களை மேற்கொள்ளல் அப்பதவியை பெறுவதற்கு தகைமையற்றதாகக் கருதப்படும்.

மேல் மாகாணத்திற்குள் வசிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

**தலைவர்,**
**கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபை (மே.மா)**
**2023.12.15ம் திகதி**

## இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397ஆம் அத்தியாயம்) 21ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

இலக்கம் 310, ஸ்ரீ சங்கராஜா மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரியில் அமைந்துள்ள ஹம்சா ரெடர்ஸ் நிறுவனத்தாரின் பொறுப்புகளுக்காக வரிமதிப்பீட்டு இலக்கம் 15/2, 15/4, பிட்டகந்த வீதி, மஹய்யாவ, கண்டி எனும் முகவரியிலுள்ள அடமானம் வைக்கப்பட்ட ஆதனம்.

2023.11.08ஆம் திகதியன்று இடம்பெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை பிரத்தியேகமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:

1. பிரசித்த நொத்தாரிசு எல்.எஸ்.அதாவுதா அத்தாட்சிப்படுத்திய 2008.07.14ஆம் திகதியிடப்பட்ட 6304ஆம் இலக்க முதன்மை ஈட்டு முறி, இ.டபிள்யு.எஸ். பீ.ஏகநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2010.12.02ஆம் திகதியிடப்பட்ட 120ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் 2014.03.17ஆம் திகதியிடப்பட்ட 856 ஆம் இலக்க ஈட்டு முறி ஆகியவற்றின் பேரில் இலக்கம் 310, ஸ்ரீ சங்கராஜா மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரியில் அமைந்துள்ள ஹம்சா ரெடர்ஸ் நிறுவனத்தார் பெற்றுக்கொண்ட நிரந்தர மேலதிகப்பற்று வசதி 9,000,000.00 ரூபாய் (ஒன்பது மில்லியன் ரூபாய்) மீது 2023.10.16 வரையான வட்டியும் முதலுமாக 15,843,609.08 ரூபாய் (பதினைந்து மில்லியன் எண்ணூற்று நாற்பத்து மூவாயிரத்து அறுநூற்றொன்பது ரூபாய் எட்டு சதம்) அத்துடன் 2023.10.17ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரையில் 9,000,000.00 ரூபாய் (ஒன்பது மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு பதினேழு தசம் நான்கு ஆறு (17.46%) என்ற வீதத்தில் திரட்டப்பட வேண்டிய மேலதிக வட்டியும் வங்கிக்கு வருமதியாகவுள்ளது.
2. மேற்குறிப்பிட்ட 6304, 120 மற்றும் 120 ஆம் இலக்க ஈட்டு முறிகளின்பேரில் நிலுவையாகவுள்ள 15,843,609.08 ரூபாயையும் (பதினைந்து மில்லியன் எண்ணூற்று நாற்பத்து மூவாயிரத்து அறுநூற்றொன்பது ரூபாய் எட்டு சதம்) அத்துடன் 2023.10.17ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்ட மேலதிக வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய அட்டவணையில் கீழுள்ள முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3 விஹார மாவத்தை கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எச்.எம்.ரீ.கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவிற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி நிறுவன அறவீட்டு கிளையின் தொடர்பு முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை

01. "டாப்பிங்டன் எஸ்டேட்" என அழைக்கப்படும் வளாகத்தின் உரிமம் பெற்ற நில அளவையாளர் சி.டி.அதிஹெட்டி தயாரித்த 2007.05.18ஆம் திகதியிடப்பட்ட 4441Bஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட துண்டு 03 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைகளுள் கங்காவட்ட கோரளை பிரதேச செயலகப் பிரிவில், மாபனவத்துர கிராம உத்தியோகத்தர் பிரிவில் மஹய்யாவ எனும் இடத்தில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டானது வடக்கில் இல.19/1, பிட்டகந்த வீதி வளாகத்தினைப் பிரிக்கும் தடுப்பு சுவரினையும் கிழக்கில் குறிப்பிட்ட வரைபடத்தில் காணித்துண்டு 02 மற்றும் காணித்துண்டு 05 இனையும் தெற்கில் 15/5, பிட்டகந்த வீதி என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட வளாகத்தினையும் மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 06 என அடையாளமிட்ட வீதியையும் மேற்கில் குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 4 ஐயும் வழி மீதான உரிமையுடன் அக்காணியில் காணப்படும் அனைத்துடனும் குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 5 ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டானது பத்து தசம் மூன்று பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0-ஆர்0-பே10.30) அல்லது 0.02605 ஹெக்டேயர்கள் பூச்சியம் தசம் இரண்டு ஆறு பூச்சியம் ஐந்து ஹெக்டேயர்கள் பரப்பளவுடன் A 360/255 கண்டி காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
02. "டாப்பிங்டன் எஸ்டேட்" என அழைக்கப்படும் வளாகத்தின் உரிமம் பெற்ற நில அளவையாளர் சி.டி.அதிஹெட்டி தயாரித்த 2007.05.18ஆம் திகதியிடப்பட்ட 4441B ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட துண்டு 04 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைகளுள் கங்காவட்ட கோரளை பிரதேச செயலகப் பிரிவில், மாபனவத்துர கிராம உத்தியோகத்தர் பிரிவில் மஹய்யாவ எனும் இடத்தில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டானது வடக்கில் 19/1, பிட்டகந்த வீதி என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்தினையுடைய வளாகத்தினைப் பிரிக்கும் தடுப்பு சுவரினையும் கிழக்கில் குறிப்பிட்ட வரைபடத்தில் காணித்துண்டு 03 இனையும் தெற்கில் மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் காணிதுண்டு 06 மற்றும் 07 இனையும் மேற்கில் அரசின் புகையிரத வீதிக்கான ஒதுக்கம் என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ளது. அக்காணியில் காணப்படும் அனைத்துடனும் இக்காணித்துண்டானது பதினொரு பேர்ச்சுகள் (ஏ0-ஆர்0-பே11) அல்லது 0.02782 ஹெக்டேயர்கள் பூச்சியம் தசம் இரண்டு ஏழு எட்டு இரண்டு ஹெக்டேயர்கள் பரப்பளவுடன் A 360/255 கண்டி காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட துண்டு 3 மற்றும் 4 என்பவை உரிமம் பெற்ற நில அளவையாளர் என்.எஸ்.எல். பெர்னாண்டோ தயாரித்த 1970.10.24 ஆம் திகதியிடப்பட்ட 967ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 10 மற்றும் உரிமம் பெற்ற நில அளவையாளர் என்.எஸ்.எல். பெர்னாண்டோ தயாரித்த 969ஆம் இலக்க வரைப்படத்திலுள்ள காணியினது பகுதியும் தொகுதியுமாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

**ஏ.சி.எச்.அத்துகோரளை**
**மூப்புநிலை முகாமையாளர்**
**நிறுவன அறவீடு**

**இலங்கை வங்கி**
**நிறுவன அறவீட்டுப் பிரிவு**
**3ம் தளம்**
**இல-01, இலங்கை வங்கி மாவத்தை**
**கொழும்பு-01**

CDU/TS/2023/21&22

# இலங்கை சுங்கம்

## கையகப்படுத்தப்பட்ட பண்டங்களின் கேள்வி விற்பனை

கையகப்படுத்தப்பட்ட வாகனங்கள்/ தங்கம்/தங்க ஆபரணங்கள்/ மின்னியல்/ இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் சில நானாவித பண்டங்கள் ஆகியனவற்றின் கேள்வி விற்பனையானது இலங்கை சுங்க மத்திய அகற்றல் பணியகத்தில் 2023 டிசம்பர் 21 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

விற்பனை செய்யப்படவுள்ள பண்டங்களின் பட்டியலை 2023 டிசம்பர் 18 ஆம், 19 ஆம் மற்றும் 20 ஆம் திகதிகளில் மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் மீளளிக்கப்படாத தொகையாகிய 25 ரூபாவைச் செலுத்திய பின்னர் இலங்கை சுங்க 3 ஆம் மாடியின் மத்திய அகற்றல் பணியகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், விற்பனையாகவுள்ள பண்டங்களின் பட்டியலானது 2023 டிசம்பர் 18 ஆம் திகதியிலிருந்து www.customs.gov.lk என்ற சுங்க உத்தியோகபூர்வ இணையதளத்தில் காட்சிப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்கட்கு பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**011-2430795**
**011-2143434 நீடிப்பு 7300**

**சுங்க பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை சுங்கம்,**
**'சுங்க இல்லம்',**
**இல.: 40, பிரதான வீதி,**
**கொழும்பு-11.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## பொதுமக்கள், அரசியல் கட்சிகள், அமைப்புகள், ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர்களிடம் எழுத்துமூலமான கருத்துக்களைக் கோருவதற்கான காலத்தை நீடித்தல்

தேர்தல் சட்டங்களை மறுசீரமைப்பு, சிபார்சுகளை மேற்கொள்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு எழுத்துமூல கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை அனுப்புமாறு கோரி 2023 நவம்பர் மாதம் 15 ஆம் திகதி வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான இறுதித்திகதி 2023 டிசம்பர் 15 ஆம் திகதி முதல் 2024 சனவரி 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறியத் தருகின்றேன்.

அதன் பிரகாரம் தேர்தல் சட்டங்களை மறுசீரமைப்பு தொடர்பான உங்களது கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை 2024.01.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் sec.coi@presidentsoffice.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது கடிதவுறையின் இடப்பக்க மேல் மூலையில் **"தேர்தல் மறுசீரமைப்பு"** எனக் குறிப்பிட்டு, தேர்தல் சட்டங்களை மறுசீரமைப்பு சிபார்சுகளை மேற்கொள்வதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயலாளரின் பின்வரும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்க முடியும்.

உங்களது பதிலளிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பாடல் தகவல்கள் மற்றும் உள்ளடக்கப்பட முடியுமான தனிப்பட்ட தகவல்கள் அந்தரங்கமானவையெனக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**செயலாளர்**
**தேர்தல் சட்டங்களை மறுசீரமைப்பு சிபார்சுகளை மேற்கொள்வதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு**

**முகவரி: இலக்கம் 21, SEMA கட்டிடம்**
**சனாதிபதி மாவத்தை**
**கொழும்பு 01.**

**15.12.2023**

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/05/ PT/6507 | Engine Spares for Terberg Terminal Tractors | 50,000.00 | 1000.00 | 2024.01.30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6487(EL) | Spare Gantry Motor for Mitsui Transfer Cranes | 250,000.00 | 3,500.00 | 2024.01.30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6550(EL) | 250 Nos. Reefer Socket Interior Assembly for Reefer Sockets of ECT | 90,000.00 | 1,000.00 | 2024.01.30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6555(EL) | 05 Nos. Stop Solenoid Valve Repair Kit for Wartsila SL26 Engines | 15,000.00 | 1,000.00 | 2024.02.01 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6557(MP) | 3008KG of Wire Rope Lubricant for Container Cranes in JCT & ECT | 110,000.00 | 3,500.00 | 2024.02.01 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/23/ PT/09/135 (KC) | 84000 (KGS) of Coconut Oil | 750,000.00 | 12,500.00 | 2024.01.04 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/02/062 | 15 Nos. MS Plates 2400 X 1200 X 25MM | 29,000.00 | 1,000.00 | 2024.01.04 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/03/034 | 15 Nos. Motor Tyres 1800 X 25 40 PLY Tubeless | 135,000.00 | 3,500.00 | 2024.01.04 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/10/063 | 06 Nos. of Bearing 60 240 MM | 22,500.00 | 1,000.00 | 2024.01.05 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/16/065 | 08 Nos. Air Compressors for UD Nissan Prime Movers | 20,000.00 | 1,000.00 | 2024.01.05 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/02/061 | Spares for HYVA Garbage Compactor | 20,000.00 | 1,000.00 | 2024.01.05 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/04/070 | Mild Steel Plates LR 'A' 6000 X 1500 X 6MM – 10 Nos. | 70,000.00 | 1,000.00 | 2024.01.08 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/02/059 | 900 Nos. Motor Tyres 1100 X 20 16 PLY | 875,000.00 | 12,500.00 | 2024.01.08 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/16/066 | 12 Nos. of Cutlass Bearings for the Propeller Shafts of the Launches Pilot 11, 12 and 13 | 24,000.00 | 1,000.00 | 2024.01.08 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/05/066 | Hydraulic Pump Units for the Aquamaster US 3001 CP Propulsion Units of Tug Gotainbara & Nandimithra | 17,000.00 | 1,000.00 | 2024.01.09 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/01/068 | Spares for Terberg Terminal Tractors | 23,000.00 | 1,000.00 | 2024.01.09 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/17/067 | Mild Steel Plates LR Grade "A" | 150,000.00 | 3,500.00 | 2024.01.09 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/02/063 | Spares for Mercedes Benz Engine | 20,000.00 | 1,000.00 | 2024.01.10 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/15/051 | MS Angle | 17,000.00 | 1,000.00 | 2024.01.10 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/03/062 | 5000PKT-Photocopy Paper A4 Size 80 GSM (500 Sheets/Packet) | 53,000.00 | 1,000.00 | 2024.01.10 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/07/060 | Spares for UD Nissan Prime Movers | 23,000.00 | 1,000.00 | 2024.01.11 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் (பிசிஏ 03 படிவத்தையும்) சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவத்திற்கான பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 டிசம்பர் 15 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக் கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலேகுறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப் பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

# அறிவித்தல்

## நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

### 2024ஆம் வருடத்தில் கட்டிடங்களை நிர்மாணித்தல், பராமரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

நாடெங்கிலும் அமைந்துள்ள நீதிமன்றக் கட்டிடங்கள் மற்றும் அமைச்சின் நிர்மாணம், பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தத்தை கையளிக்கும் பொருட்டு நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சில் பதிவு செய்துகொள்வதற்கு விரும்பும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பின்வரும் மாதிரிக்கமைவாக தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் சகிதம் இந்த அமைச்சிற்கு அல்லது பிராந்திய செயலாளர் அலுவலகங்களுக்கு ரொக்கப் பணமாக 2,000.00 ரூபா (மீளளிக்கப்படாதது) வைப்பை நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் பெயரில் அரச வருமானத் தலைப்பு 2003.99.00 இலக்கத்திற்கு வரவாகும் வகையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இணைத்து அனுப்புதல் வேண்டும். (இதன்பொருட்டு காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என அறிவிக்கப்படுகின்றது.)

விண்ணப்பப் படிவங்களை பின்வரும் மாதிரியின் பிரகாரம் 2024 ஜனவரி மாதம் 05ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நீதி அமைச்சின் 01ஆம் மாடியில் உள்ள பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பங்களை ''தலைவர், பெறுகைக் குழு, வழங்கல் பிரிவு, நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, இல. 19, சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10'' எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இது தொடர்பாக தெளிவுபடுத்தல் தேவையானால் அலுவலக நேரத்தினுள் 0112 438178 எனும் தொலைபேசி இலக்கத்தில் பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களைத் தொடர்புகொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2024ஆம் வருடத்தில் நிர்மாணம் மற்றும் பராமரித்தலுக்காக ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

**செயலாளர்,**
**நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு,**
**கொழும்பு 10.**

### விண்ணப்பப் படிவம்

**நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு**
**2024ஆம் வருடத்தில் கட்டிடங்களை நிர்மாணித்தல், பராமரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் (20 மில்லியன் ரூபாவிற்குக் குறைந்த ஒப்பந்தங்களுக்கு)**

1. உரிமையாளரின் / உரிமையாளர்களின் / நிறுவனத்தின் பெயர்:
2. முகவரி:
3. வியாபாரத்தின் தன்மை (தனிநபர் / கூட்டு வியாபாரம் / வரையறுக்கப்பட்ட நிறுவனம் போன்றன):
4. தொலைபேசி இலக்கம்: தொலைநகல் இலக்கம்:
5. CIDA நிறுவனத்தின் பதிவுத்துறை மற்றும் தரம்:
6. CIDA நிறுவனத்தின் பதிவு காலாவதியாகும் திகதி:
7. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பும் மாவட்டம்:
8. தற்போது பதிவு செய்து கொண்டுள்ள ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களம்:
9. வெட் பதிவு இலக்கம் / பதிவுச் சான்றிதழின் பிரதி:
   (வெட் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை இணைக்கவும்)
10. விலைக்கோரலின் போது கவனத்திற்கொள்வதற்கு விரும்பும் பிரிவு / பிரிவுகள் (குறித்த கூட்டினுள் ✓ அடையாளமிடவும்)

| | |
|---|---|
| தச்சு வேலை மற்றும் தளபாடம் ☐ | தோட்ட அலங்காரம் ☐ |
| அலுமினிய கட்டுருவாக்கம் ☐ | மரம் வெட்டுதல் மற்றும் கவ்வாத்து செய்தல் ☐ |
| மின்னியல் வேலை ☐ | நீர்க்குழாய் திருத்தவேலை ☐ |
| சகல சிவில் பொறியியல் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு ☐ | ELV முறைமை ☐ |

(தச்சு வேலை, தோட்ட அலங்காரம் மற்றும் மரம் வெட்டுதல் மற்றும் கவ்வாத்து செய்தல் என்பவற்றுக்கு CIDA பதிவு தேவையில்லை)

மேற்கூறிய தகவல்கள் உண்மையென சான்றுபடுத்துவதோடு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது விடயம் பிழை எனத் தெரியவந்தால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை நானறிவேன்.

உரிமையாளரின் / உரிமையாளர்களின் / நிறுவனப் பணிப்பாளர்களின் கையொப்பம்:
உரிமையாளரின் / உரிமையாளர்களின் / நிறுவனத்தின் பெயர்:
தேசிய அடையாள அட்டை இலக்கம் / இலக்கங்கள்:
வியாபாரப் பதிவிலக்கம்:
வியாபாரத்தின் முத்திரை:
திகதி: